ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 02 | 02 - 15 மே 2017 | முழக்கம் 046

பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ் .கொம்
www.ParisTamil.Com
பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com



## ரணிலின் பயணமும் மோடியின் வருகையும்



## மக்ரோனா? மரினா? அடுத்த பிரெஞ்சு ஜனாதிபதி யார்?



## அது நடந்திராவிட்டால்.. அப்போதே நடந்திருக்கும் ஒரு முள்ளிவாய்க்கால்...



## ஒன்றுபட்ட தமிழினத்தின் மென்வழிப் போராட்டம்



## உறங்கும் இராசதந்திரிகள் விழித்தெழுந்தால்?

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Express station service
• எரிபொருள் நிரப்பு நிலையம்
• பணம் அனுப்பும் சேவை
• புத்தம் புதிய கைத்தொலைபேசிகள்
• தொலைபேசி உதிரிப்பாகங்கள்
நம்பிக்கை,
நாணயம்,
உத்தரவாதம்...
MoneyGram. money transfer
Ria Money Transfer
WESTERN UNION
Sigue MONEY TRANSFER
25 boulevard de la Chapelle Tél.: 01 40 18 07 44
75010 Paris M°: La chapelle E-mail: express-station@hotmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

**26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை**

**E-mail : asces@free.fr Tél : 07 82 88 59 16**

சிறந்த முறையில் பெண்களுக்கான சிகை, ஆடை- புடவை, முக அலங்கார மற்றும் கேக் அலங்கார வகுப்பு ஆரம்பம். வகுப்பு முடிவில் வேலை உடனே!

**Grande Section, CP, CE,CM, Collège, Lycée** வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

12-04--2017 புதன்-வியாழன் பி.ப 3.30 மணி
07-04--2017 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
22-04-2017 சனி ஞாயிறு காலை 9.30 மணி
07-05-2017 ஞாயிறு காலை 11 மணி 1 நாள்வகுப்பு)
17-04-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
17-04-2017 ஞாயிறு காலை 10 மணி
(**Nationality** வகுப்பு)

**LA COURNEUVE** இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

**BOBIGNY**
38, rue Gaston Crépin 93000 Bobigny

**PARIS**
3, place de Joinville 75019 Paris M° Crimée

**Epinay sur seine** 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
**BAC , BREVET** பரீட்சைகளில் 100வீத சித்தி
**Cambridge University** ஆல் நடாத்தப்படும்
**Starters, Movers, Flyers, Ket, Pet** பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

## Bridal make up & cake icing

மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

உங்கள் உணவகங்கள் சமையல் அறைகளிற்குத் தேவையான
றைஸ் குக்கர் முதல் அனைத்து விதமான பைகள் வரை லாச்சப்பல் அருகில் ஒரே இடத்தில்

# EURO RESTO SERVICE




மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**48, RUE DU CHÂTEAU LANDON - 75010 PARIS**

**TÉL.: 01 40 36 00 09 / 06 68 67 15 55** M°: STALINGRAD / LA CHAPELLE

# ஈழமுரசு®

mediacentre ஊடகமையம்

முரசு 02 | 02 - 15 மே 2017 | முழக்கம் 046


"நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதிகொண்ட மக்களாக ஒன்றுதிரண்டு நின்றால், எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ, அழிக்கவோ முடியாது."

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# ரணிலின் பயணமும் மோடியின் வருகையும்

(03.05.2017, புதன்கிழமை)

எதிர்வரும் 12ம் திகதி வெள்ளிக்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிறீலங்காவிற்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். அவரது ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கான அவரது இரண்டாவது பயணம் இது. ஏற்கனவே கடந்த 2015ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக்கு அவர் பயணம் மேற்கொண்டிருந்தார். பௌத்த விழாக்களின் முதன்மையான வெசாக் இம் மாதம் நடைபெறவுள்ளது. வெசாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்பதற்கே அவரது இம்முறைப் பயணம் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன், ஹட்டன், டிக்கோயாவில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்டுள்ள வைத்தியசாலையையும் அவர் திறந்துவைப்பார் என்று கூறப்படுகின்றது. காலையில் வரும் அவர் மதிய உணவின் பின்னர், இந்தியா நோக்கிச் சென்றுவிடுவார் என்று சிறீலங்கா அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐந்து நாள் அரசு முறைப் பயணமாக இந்தியாவிற்கு சென்று திரும்பியுள்ள நிலையில், சிறீலங்காவின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் மோடி இலங்கைக்கு மீண்டுமொரு பயணத்தை மேற்கொள்கின்றார். இந்திய - சிறீலங்கா நட்புறவை உயர், அண்மித்த தளத்தில் தக்கவைத்துக் கொள்வதற்காக, பல்வேறு மட்டங்களிலும் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கின்ற செயற்பாட்டை மதித்து, இந்தச் சிறீலங்காப் பயணத்தை மேற்கொள்வதாக மோடி ரணிலிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளார்.

மோடியின் பயணத்தில் இந்தியாவுடன் பல்வேறு பொருளாதார உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்படவுள்ளதாக எதிரணிகள் எச்சரிக்கை வெளியிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், 'ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வெசாக் தினக் கொண்டாட்டத்தில் பங்குபற்றுவதன்றி, வேறு எந்தவொரு உத்தியோகபூர்வ நடவடிக்கையிலும் அவர் ஈடுபடமாட்டாரென' சிறீலங்கா ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 20ம் பக்கம்



பிரான்சின் பரிஸ் நகரில் இடம்பெற்ற தொழிலாளர் தின ஊர்வலத்தில் கலந்துகொண்ட தமிழ் மக்கள்


கமிலஸ் மொழிபெயர்ப்பு

உங்கள் வேலையிடத்தில் பிரச்சனையா?

உங்களுக்கு அலுவலகப் பிரச்சனையா?

வர்த்தகர்களுக்கான ஆலோசனைகள் (conseil en entreprise)

வருமான வரி தொடர்பான ஆலோசனைகள் ( conseil impots)

ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும்

திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 10:30 முதல் 13:00 வரை
பிற்பகல் 14:00 முதல் 18:00
சனிக்கிழமை பிற்பகல் 13:00 முதல் 18:00 வரை

இடம் பெயர்ந்த சட்டரீதியான மொழிபெயர்ப்புச் சேவைகளும் உண்டு

260 rue Faubourg St Martin - 75010 Paris

Metro: Stalingrad/Louis Blanc தொடர்புகளிற்கு : 06 51 91 08 85



S.P.Raju Jewellery

பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!

199 rue du Fbg St Denis, 75010 Paris Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris Tél: 01 46 07 43 42





வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

Crédits - Solutions

திரு.சிவா

2-4 rue de l'Orillon - 75011 Paris

0973255923 - 0665660305

email: creditssolutions@gmail.com



மக்கள் கடை

NEW CASTEL

உங்கள் தேவைகளே எங்கள் சேவை

61, rue Louis Blanc,75010 Paris.

Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02




**ஈழமுரசு**

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France

Tel: 00 33 970 464 464
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்
**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா:
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€



**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில்**
**ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80


# காங்கேசன்துறையில் மீட்கப்பட்ட மியன்மார் அகதிகள்!

மியன்மாரில் இடம்பெறும் இனப்படுகொலையில் இருந்து தப்பியதாகக் கருதப்படும் அகதிகள் தமிழர் தாயக் கடற்பரப்பில் கடந்த 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட மியன்மார் அகதிகளை எதிர்வரும் மே 2ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். மியன்மாரில் வன்முறைகள்



இடம்பெற்று வரும் நிலையில் உயிர் தப்பிப்பிதற்காக அங்கிருந்து தாம் இடம்பெயர்ந்து வேறு நாடுகளுக்கு வருவதாக விசாரணையில் தெரிவித்துள்ளனர். இவர்களில் பெண்கள் மற்றும் 16 சிறுவர்கள் உள்ளிட்டங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. மீட்கப்பட்ட 30 மியன்மார் அகதிகள் காங்கேசன்துறை சிறீலங்காக் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அவர்களுடன் வந்த இரு இந்தியர்கள் என தெரிவிக்கப்படும் நபர்களை காவல்துறையினர் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, முஸ்லீம்களை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கக்கூடாது என வலியுறுத்தியுள்ள யாழ்ப்பாண முஸ்லிம் அமைப்பு, உலருணவு பொருட்களையும் மற்றும் அத்தியாவசிய உதவிகளையும் உடனடியாக அவர்களுக்கு வழங்கியுள்ளது. அத்துடன், அவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிவாசல்களில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண முஸ்லிம் அமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தராகி சிவராமின் 12ம் ஆண்டு நினைவு

ஊடகவியலாளர் மாமனிதர் தராகி சிவராமின் (தர்மரட்ணம் சிவராம்) 12ம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு கிளிநொச்சி நகரில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. கடந்த 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பாரதி ஸ்ரார் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நினைவேந்தல் நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் 'தராகியும் இலங்கையின் பூகோள அரசியலும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை, கலைப்பீட இணைப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராம் நினைவுரை நிகழ்த்தினார்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தில் சிவாராம் என்னும் தலைப்பில்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் உரையாற்றினார். இதேவேளை யாழ்.ஊடக அமையத்தினால் வழங்கப்பட்ட சிவராம் ஞாபகர்த்த விருது மறைந்த கேலிசித்திர கலைஞன் அஸ்வின் சுதர்சனுக்கு வழங்கப்பட்டது. இந்த விருதை யாழ். ஊடக அமையம் முதல் தடவையாக வழங்கியுள்ளது.

இந்நிகழ்வில் சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஊடக அமைப்புக்களை சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் தென்னிலங்கை சிங்கள ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

# மரண அறிவித்தல்



தோற்றம்
24.03.1947

மறைவு
01.05.2017

## தர்மலிங்கம் சிவநாதன்

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவநாதன் அவர்கள்
01.05.2017 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்
அன்னார், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும்
காலஞ்சென்ற சுப்பிரமணியம், பூமணி(வவுனியா) அவர்களின் அன்பு மருமகனும்
இந்திராணி ( விசயம் பிரான்ஸ் ) அவர்களின் அன்புக்கணவரும்
சிவரஞ்சினி (சுதா பிரான்ஸ் ) சிவாஸ்கரன் ( சுபாசி வட்டக்கச்சி ) சிவரூபன் (சுபன் பிரான்ஸ் )
சிவாயினி ( சுகிதா சுவிஸ் ) ஆகியோரின் பாசமிகு தந்தையும்
கைலாயநாதன் ( ஜேர்மனி ) , தர்மபாலன் ( கனடா ) , சிதம்பரநாதன் ( ஜேர்மனி ) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்
நவநீஸ்வரன் (ராசன் பிரான்ஸ்) , செந்தூர்வாசன் (சுவிஸ்) சுதாசினி (சுதா) ஆகியோரின் அன்பு மாமனாரும்
நிஷா , நிலா , நீரா (பிரான்ஸ்) திவி , ஐபி (வட்டக்கச்சி) சானு , விது (சுவிஸ்) அன்புப்பேரனும்
சந்திரன் (வட்டக்கச்சி) , சசி (சின்னவன் சுவிஸ்) ஆகியோரின் அன்புமைத்தினருமாவார்
இவ் அறிவித்தலை உற்றார் , உறவினர் , நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்..

வீட்டுமுகவரி 1 Rue Thimonnier, 94190 Villeneuve-Saint-Georges

தொடர்புகளுக்கு
சுதா ( மகள் ) : +33 1 43 89 02 28 | சுபாசி ( மகன் ) : +94 7 68 33 90 49
சுபன் ( மகன்) : +33 7 78 10 50 16 | சுகிதா ( மகள் ) : +41 6 29 22 12 68 / + 41 7 97 47 70 86

பார்வைக்கு
1 Boulevard du Général Leclerc,
92110 Clichy
Métro (13) : Porte de Clichy ou Porte de Saint-Ouen
Bus : PC / ou N° : 66 Arrêt Porte Pouchet

புதன்கிழமை : 03.05.2017 16H00 - 17H00
சனிக்கிழமை : 06.05.2017 16H00 - 17H00
ஞாயிற்றுக்கிழமை : 07.05.2017 16H00 - 17H00
திங்கள்கிழமை : 08.05.2017 16H00 - 17H00
செவ்வாய்கிழமை : அன்னாரின் கிரிகைகள் தகனம்
09.05.2017 09H00 - 11H00 வரை நடைபெறும்

தகனம் 13h00 - 14h30
Crématorium P.LACHAISE Place Gambetta
71,Rue des Rondeaux PARIS 20ème
Métro (3) : Gambetta

தகவல் : குடும்பத்தினர்



# ஈழமுரசு

# மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது

"தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் விடயத்தில் வெளிநாட்டுத் தலையீட்டைத் தமிழ் கடும்போக்குவாதிகள் கோரிவருகின்றபோதும் அவ்வாறான தேவை இல்லாமல் உள்ளக ரீதியிலேயே தீர்வை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது" என்று சிறீலங்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கின்றார். சிங்களப் பேரினவாத ஆட்சிக் கதிரையில் யார் வந்து அமர்ந்தாலும் இப்படியான சிந்தனையுடன்தான் இருப்பார்கள். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனால்தான், சிறீலங்கா அரசுடன் நேரடியாகப் பேசி தீர்வொன்றை எப்போதும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதைப் புரிந்துகொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் மூன்றாம் தரப்பு ஒன்றினூடாக சிறீலங்காவுடனான சமாதானப் பேச்சு மேசைக்குச் சென்றார்கள். எனவே, தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணும் விடயத்தில் சர்வதேசத்தின் தலையீடு இன்றி என்றைக்குமே தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்று கிடைக்கப்போவதில்லை.

இதுஒருபுறமிருக்க, புதிய அரசியலமைப்பு மற்றும் சட்டத் திருத்தங்களை கொண்டுவர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக நீண்ட பல மாதங்களாக சிறீலங்கா அரசாங்கம் கூறிவருகின்றது. சந்திரிக்காவின் தீர்வுப் பொதிக்குள் இருந்ததுபோல், இந்த யாப்புச் சீர்திருத்தத்திற்குள்ளும் தங்களுக்குச் சார்பாக ஒன்றும் இருக்கப்போவதில்லை என்பது தமிழின மக்கள் நன்றாக அறிந்துவைத்திருக்கின்றார்கள். ஆனாலும், இந்தச் சீர்திருத்திற்குள் தமிழருக்கான தீர்விருக்கென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மதிமயங்கிக் கிடக்கின்றது.

இந்த நிலையில்தான், "தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அதிகார பரவலாக்கம் கிடைக்கப் போவதில்லை" என்று சிறீலங்காவின் அரசியலமைப்பு குழுவின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஜெயம்பதி விக்ரமரட்ண கூறுயிருக்கின்றார். தந்தை செல்வாவின் 40வது நினைவு தினம் கடந்த வாரம் யாழ்.பொது நூலகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெற்றது. அதில் நினைவு பேருரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அத்துடன் மட்டும் அவர் நின்றிருந்தால் பறவாயில்லை. அரசியலமைப்பு சீர்திருத்தச் சட்டத்திற்குள் தமிழருக்கு ஒன்றுமே இல்லை. தமிழ் தேசியக் கூட்டடைப்பு மக்களை ஏமாற்றுகின்றது என்பதை வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார் என்று புரிந்துகொண்டிருக்கலாம். ஆனால், சிங்களப் பேரினவாதத் திமிர் அவரை அத்துடன் நிறுத்தவிடவில்லை. அதன் உச்சமாகச் சென்ற அவர், "தமிழ் தரப்பு விட்டுக்கொடுப்பிற்கும் இணக்கப்பாட்டிற்கும் தயாராக இருக்க வேண்டும்" என்றும் யாழ்ப்பாணத்தில் நின்று தமிழ் மக்களிடம் வலியுறுத்தியிருக்கின்றார்.

தென்னிலங்கை மக்கள் அதிகார பரவலாக்கத்துக்கு தயாராகவில்லை என்பதற்காகவும், மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கினால் பிரிவினையை கோருவார்கள் என தெற்கு மக்கள் அஞ்சுகின்றார்கள் என்பதற்காகவும் தமிழ் தரப்பு 'விட்டுக்கொடுப்பிற்கும் இணக்கப்பாட்டிற்கும் தயாராக இருக்க வேண்டும்' என்று ஜெயம்பதி விக்ரமரட்ண கூறுகின்றார் என்றால், தமிழர்கள் எதனை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார்..?

சொந்த நிலங்களை இழந்து, உறவுகளை இழந்து, உயிர்களை இழந்து இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்ற நிலையில் வாழும் மக்களிடம் 'விட்டுக்கொடுப்பிற்கும் இணக்கப்பாட்டிற்கும் தயாராக இருக்க வேண்டும்' கூறுகின்ற சிங்களப் பேரினவாதம், எதனை இதற்கும் மேல் விட்டுக் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றது?

தமிழர்கள் கட்டியிருக்கும் கோவணத்தையும் கழட்டிக் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றதோ..?

'பரிதாபத்திற்குரியவர்களாக எமதினம் வாழ்வதை நான் எப்போதும் விரும்பவில்லை. பரிதாபத்திற்குரியவர்களாக வாழ்ந்தால் மற்றவர்களின் அனுதாபத்தைப் பெறமுடியுமே தவிர, உரிமைகளை ஒருபோதும் பெறமுடியாது' என்று தமிழீழத் தேசியத் தலைவர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

தமிழினம் சிறீலங்கா அரசிற்கு சமபலமாக இருந்த போதே தமிழர்களின் நியாயமான உரிமையை வழங்கத் தயங்கிய சிங்களப் பேரினவாதம், இன்று பலமிழந்து நிற்கும் தமிழினத்திற்கு தானாக முன்வந்து எந்தவொரு உரிமையையும் வழங்கப்போவதில்லை. இதுதான் தர்க்க ரீதியான உண்மை.

பூனை இளைத்தால் எலி ஏறி விளையாடுமாம். புலிகளின் ஆயுதங்கள் மௌனித்துப் போனதால் சிங்களப் பேரினவாதம் தமிழர்கள் மேல் ஏறி விளையாடிப் பார்க்கின்றது. அந்த விளையாட்டுத்தான் மங்கள சமரவீர, ஜெயம்பதி விக்ரமரட்ண போன்றவர்களின் தொடர்ச்சியான இவ்வாறான கருத்துக்களின் பின்னணி.

ஆனால் இவற்றையும் மீறி தமிழ் மக்கள் தங்கள் நீதிக்காவும், உரிமைக்காகவும் தொடர்ந்து போராடவேண்டியிருக்கின்றது.

'மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது' என்பதை கடந்த வாரம் தமிழர் தாயகம் எங்கும் மேற்கொள்ளப்பட்ட கடையடைப்புப் போராட்டங்கள் சிங்களத்திற்கு உணர்த்தியிருக்கும்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலினால்தான் தமிழர்கள் போராட்டங்களை நடத்துகின்றார்கள் என்று ஒரு காலத்தில் கதையளந்த சிங்களமும், அதனை நம்பிய சர்வதேசமும் இன்று ஒருவரது நிர்ப்பந்தமுமின்றி, ஏன் யாரது ஆதரவுமின்றி மக்கள் தன்னிச்சையாக ஓய்வின்றி மாதக்கணக்கான முன்னெடுக்கும் போராட்டங்களைப் பார்த்து கதிகலங்கித்தான் போயிருக்கின்றார்கள். முன்னர் என்றால் கிறீஸ் பூதங்களையும், கழிவெண்ணைகளையும் பயன்படுத்தி தன் கைவரிசையைக் காட்டி இந்தப் போராட்டங்களை முளையிலேயே கிள்ளியெறிந்திருக்கும் சிங்களம். ஆனால், கண்ணுக்குள் விளக்கெண்ணையை ஊற்றிவிட்டு ஐ.நா. மனித உரிமை அமைப்பு உட்பட மனித உரிமை வாதிகள் காத்துக்கிடப்பதால், தொடர்ச்சியான இந்தப் போராட்டங்களை தடுத்து நிறுத்த முடியாமல் சிங்களம் படாதபாடு படுகின்றது.

தமிழர்களின் இவ்வாறான போராட்டங்கள் இன்னும் விரிவுபடுத்தப்படவேண்டும். தாயகத் தமிழர்கள் இவ்வாறான போராட்டங்களை ஒன்றுதிரண்டு முன்னெடுக்கும்போது, அதற்கு பக்கபலமாக புலம்பெயர்ந்து தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தமிழ் மக்கள் ஏககாலத்தில் அதற்கு இணையான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். இவ்வாறான ஒன்றுதிரண்ட போராட்டங்களின் ஊடாகவே தமிழர்கள் தங்கள் விடியலை நோக்கிப் பயணிக்கமுடியும்.

# அது நடந்திராவிட்டால்..அப்போதே நடந்திருக்கும் ஒரு முள்ளிவாய்க்கால்...

## (எதற்காக யாழ் பொலீஸ் நிலைய தாக்குதல் மிக முக்கியமான ஒன்று என்ற ஒரு பார்வை)

- ச.ச.முத்து -

அந்த தாக்குதலானது வெறுமனே ஒரு சிறீலங்கா காவல்நிலையம் மீதான தாக்குதல் போன்று திட்டமிடாமல் பல திசைகளிலும் (சிறீலங்கா, இந்தியா, திசைமாறிய மற்ற தலைமைகள்) இருந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இருப்புக்கு ஒரு பெரும் கேள்வி, ஒரு பெரும் சதி தீட்டப்பட்டபோது அதனை நொருக்கி மீள்வதற்காக உருவாக்கப்பட்டது அத் தாக்குதல் வியூகம். அதனை பற்றிய ஒரு பார்வை இந்த ஆக்கம்.

சரி இனி உள்ளே...

யாழ் பொலீஸ் நிலைய தாக்குதலின் வெற்றி என்பது அந்த தாக்குதல் முடிவில் விடுதலைப் புலிகளால் அந்த முகாமில் இருந்து மீட்கப்பட்ட பெருந்தொகையான வெடிப்பொருட்கள், அதிகமான தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் கையெறிகுண்டுகள் என்பனவற்றின் எண்ணிக்கையை கொண்டு மட்டும் பார்க்க கூடியது அல்ல. அதற்கும் மேலாக எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அழித்து ஒழிக்க எண்ணிய சிங்கள இந்திய அரசுகளுக்கு ஒரு பெரும் செய்தியாகவே அந்த தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. பலதரப்பட்ட பரிமாணங்களில் அரசியல் இராஜதந்திர இராணுவ தளங்களில் அந்த தாக்குதல் ஒரு பெரும் பாய்ச்சல்... மிக பெரும் பாய்ச்சல்.

விடுதலைப் போராட்டம் ஒன்றின் அடுத்த கட்ட வளர்ச்சியான நிலங்களை மீட்டு சுதந்திர நிர்வாகத்தை நடாத்துதல் என்ற கட்டத்துக்கு தமிழர்கள் நகர்ந்த பெரும்நாள் அது.

எமது மண்ணிலேயே நின்று போரிடுவோம். எவருடைய அழுத்தங்களுக்கும் உட்படாது எமது விடுதலையை நடாத்த இதோ இந்த தாக்குதல் என்று செய்து காட்டிய நாள் அது.



இந்த நாள் தமிழர்களின் போராட்ட அரசியல் சமூக வரலாற்றின் முக்கிய நாளாகும்.

ஒரு வழமையான சிறீலங்காப் படை முகாம் தாக்குதல் போலவே ஆரம்பித்த இந்த தாக்குதல் அதன் வெற்றியுடன் இன்னுமொரு மிகமிக முக்கியமான வரலாற்று காரியத்தையும் செய்தேகியது. இந்த நாளில் பெற்ற வெற்றியுடன் தமிழர் நிலம் மீதான தமிழர்களின் நிர்வாகமானது அதற்கு பின்னர் 2009 மே 18ம் திகதி வரை நீடித்தது. 10.04.1985ல் தமிழர் மண்ணின் ஒரு பகுதி மீட்கப்பட்டது. அதன் பின்னர் 2009 மே 18வரை தமிழர்களின் ஏதாவது ஒரு நிலப் பகுதி தமிழர்களின் எழுச்சியின் வடிவமான விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இருந்தது. இதனை இன்னொரு முறையில் சொல்வது என்றால் 1621ம் ஆண்டு பெப்ரவரி 2ம் திகதி வருணகுலத்தானின் மரணத்தின் பின்னர் முழுமையாக பறிபோன தமிழர் இறைமையின் ஒரு பகுதி மீட்கப்பட்டது. 364 ஆண்டுகளின் பின்னர் எங்கள் தமிழர்களின் பொடியன்களால்...

தொடர்ச்சி 11ம் பக்கம்

## பெற்றோரைக் கொடுமைப்படுத்திய இராணுவத்தினர் கைது !

தமது தந்தை மற்றும் தாயை கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டில் சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறீலங்காவின் கொபேய்கனே பகுதியில் வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தந்தையை மரத்தில் கட்டி வைத்தோடு, தாயை தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர்கள், பனாகொட தொழிநுட்ப பயிற்சி கல்லூரி பிரிவில் கடமையாற்றும் சகோதரர்கள் எனத் தெரியவந்துள்ளது.

## பிரான்சிலிருந்து டெங்கு தடுப்பூசி!

உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதி பெற்ற, டெங்கு நோயர்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட தடுப்பூசி, இறக்குமதி செய்யப்படவுள்ளதாக சிறீலங்காவின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். இந்தத் தடுப்பூசியை பரிசோதனை செய்த பின்னர், அதன் அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறு, மருந்தக ஒழுங்குமுறை ஆணையகத்தின் அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். பிரான்ஸ் நாட்டின் மருந்து உற்பத்தி நிறுவனத்தில் இருந்து இவை இறக்குமதி செய்யப்படவுள்ளன. தடுப்பூசியை, இலங்கைக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக சிறீலங்காவிற்கான பிரான்ஸ் தூதுவருடன் ஏற்கனவே கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யானைக்குட்டி வளர்ப்புக்குத் தடை நீக்கம்

சிறீலங்காவின் பின்னவல யானைக் காப்பகத்தில் உள்ள இட நெருக்கடி மற்றும் அதனைப் பராமரிப்பதற்கான நிதி நெருக்கடி என்பவற்றைச் சமாளிக்க, குட்டி யானைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு இருந்த தடையை நீக்க சிறீலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறித்த நிபந்தனைகளுக்கு அமைய, தனியாரும் சமய ஸ்தலங்களும் குட்டி யானைகளைத்



தத்தெடுக்க அனுமதிக்கும் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேராவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. 30 ஏக்கர் நிலத்தில் அமைந்த இந்தக் காப்பகத்தில் 88 யானைகள் உள்ளன. இங்கு, யானை இனப்பெருக்கும் திட்டம் வெற்றிகரமாக உள்ளது. வளர்ப்பு யானைகளைப் பதிவு செய்தல் பாதுகாத்தல் தொடர்பான சட்டங்களை அமைச்சரவை அங்கிகரித்துள்ளது. கோவில்களுக்கு யானைகள் இலவசமாக வழங்கப்படும். வளர்ப்புக்காக யானையொன்றைப் பெறுவதானால் 10 மில்லியன் ரூபாய் செலுத்த வேண்டும். இலங்கையில் 7,500 காட்டு யானைகளும் 200 வளர்ப்பு யானைகளும் உள்ளதாக அரசாங்கப் பதிவேடுகளின் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அழியும் தமிழர் தேசம் 10

# திரியாய்க் கிராமத்தை சிங்கள மயமாக்க முயற்சி!

திருகோணமலை மாவட்டத்தின் கிராமங்களை சிங்களமயமாக்கும் முயற்சியின் தொடராக தற்போது திரியாய் கிராமமும் அந்த நடவடிக்கைக்கு உட்படுத்த முயற்சிக்கப்படுவதாக திருகோணமலையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது குறித்து மேலும் தெரியவருவதாவது, புல்மோட்டை ஊடான திருகோணமலையின் பிரதான போக்குவரத்துப் பாதையில் திரியாய்க் கிராமம் அமைந்து காணப்படுகின்றது.



திரியாய்க் கிராமங்களுக்கு சமீபமாக காணப்படுகின்ற தமிழ்க்கிராமங்கள் பெயர்கள் உட்பட்ட பல்வேறு நடவடிக்கைகளால் சிங்களக்கிராமங்களாக மாற்றப்பட்டு வந்திருக்கின்றன. இதன் தொடராக தற்போது திரியாய் கிராமமும் இந்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றது. திரியாய் கிராமத்தின் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக காணப்பட்டுவந்த வைத்தியசாலையை முற்றாக மூடுவதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த வைத்தியசாலையினை நிரந்தரமாக மூடினால் அங்கு வாழ்கின்ற மக்கள் உடனடி மருத்துவ தேவைகளுக்காக பதினொரு கிலோ மீற்றர் தூரம் பயணித்து குச்சவெளி வைத்தியசாலைக்கோ அல்லது பன்னிரண்டு கிலோ மீற்றர் தூரம் பயணித்து புல்மோட்டை வைத்தியசாலைக்கோ செல்ல வேண்டிய அவல நிலை ஏற்படும்.

அண்மைய காலமாக திரியாய் கிராமத்தில் யானை தாக்கி பன்னிரண்டு உயிர்கள் காவுகொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல பாம்புக்கடிக்கு அடிக்கடி ஆளாகும் சிரமங்களையும் அந்தக் கிராமத்து மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பிற்கு அமைய தற்போது அந்த வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த பணிப்பாளர் அங்கு பணியாற்றிய பெண் வைத்தியர் ஒருவரை மூதூர் வைத்தியசாலைக்கு மாற்றலாக்கியதுடன் வைத்தியசாலையின் செயற்பாடுகளை முடக்கியிருப்பதாக தெரியவருகிறது.

ஆனாலும் உள்ளகத் தகவல்களின் அடிப்படையில் அந்த வைத்தியசாலையை தற்காலிமாக மூடுவதாக மக்களுக்கு தெரிவித்து மக்கள் மத்தியிலிருந்து எதிர்பினைத் தவிர்த்து எதிர்காலத்தில் அதனை முற்றாக மூடுவதே இதன் உள்நோக்கம் என அறியமுடிந்திருக்கிறது. இதனிடையே திரியாய் மற்றும் அதனை அண்மித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து திருகோணமலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் குடியேறியிருக்கின்றனர்.

தொழில் நிமித்தம் வாழ்கின்ற மக்கள் மட்டுமே திரியாயில் தற்போது வாழ்ந்து வருகின்றமையால் எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் எஞ்சியிருக்கின்ற மக்களையும் இடம்பெயர வைப்பதன் மூலம் திரியாய் கிராமத்தையும் முற்றுமுழுதான சிங்களக் கிராமமாக மாற்றிவிட முடியும் என்பதே சம்பந்தப்பட்டவர்களின் நோக்கமாக இருப்பதாக தெரியவந்திருக்கிறது. கடந்தகாலங்களில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போதும் இடப்பெயர்வுகளின் போதும் திரியாய்க் கிராமத்து மக்கள் பல்வேறு சிரமங்களையும் உயிரிழப்புக்களையும் சந்தித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் மேலும் 10 ஆயிரம் விகாரைகள்!



இலங்கை பௌத்த நாடு. பெரும்பான்மை சிங்களவர்களைக் கொண்ட நாடு. இந்நாட்டில் மேலும் 10 ஆயிரம் விகாரைகள் அமைக்கப்பட வேண்டும். அதற்கான திட்டங்களும் எம்மிடமுள்ளன. அதனைத் தடுப்பதற்கான உரிமை யாருக்கும் கிடையாது என சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்பான பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசாரர் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் நிரம்பி வழியும் சிங்கள மருத்துவர்கள் இனஅழிப்பின் இன்னொரு வடிவமா..?

1980 காலப்பகுதிகளில் போராளிகள் களமுனைகளில் காயமடையும் போது அவர்கள் பொது மருத்துவமனைகளையே நாடவேண்டியிருந்தது. விடுதலைப் புலிகளிடம் மருத்துவப் பிரிவொன்று இல்லாத நிலையில் மாற்றுவழி அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. அப்போது வடக்கு, கிழக்கு தமிழர் தாயக மருத்துவமனைகளில் வேற்று நாட்டு மருத்துவ நிபுணர்களும் பணியாற்றிவந்தனர்.

காயங்களுடன் வரும் போராளிகளின் கால்களை, கைகளை அகற்றவேண்டும் என்று அங்கு பணியாற்றிய வெளிநாட்டைச் சேர்ந்த மருத்துவர்கள் கூறுவார்கள். காலை அகற்றினால்தான் அல்லது கையை அகற்றினால்தான் அவர்கள் உயிர்வாழ முடியும் என்றும் கூறுவார்கள். சிலவேளைகளில் அனுமதி பெறப்படாதுகூட போராளிகளின் கால்கள் அகற்றப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. போராளிகள் மீண்டும் களமுனைகளுக்கு திரும்பக்கூடாது என்ற சதித்திட்டத்துடன் அரங்கேற்றப்பட்ட இந்த நாசகாரத் திட்டத்தை விடுதலைப் புலிகள் கண்டறிந்தனர். இதனையடுத்துத்தான் தமிழீழத் தேசியத் தலைவர் போராளிகள் மருத்துவப் பிரிவையும் மருத்துவமனைகளையும் உருவாக்கினார்.

இப்போது வடக்கு மாகாணத்தில் தமிழ் மருத்துவ நிபுணர்களை விட, சிங்கள மருத்துவ நிபுணர்களே அதிகம் பணியாற்றுவதாக கண்டறியப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றும் தமிழ் மற்றும் சிங்கள மருத்துவர்களின் விவரங்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டிருந்தன. அதற்கு வழங்கப்பட்ட பதிலில் இருந்தே இந்த உண்மை தெரியவந்துள்ளது.

மருத்துவ நிபுணர்களில் தமிழ் அலுவலர்கள் 28 பேரே பணிபுரிகின்றனர். ஆனால், சிங்கள அலுவலர்கள் 41பேர் கடமையாற்றுகின்றனர். அத்துடன், மருத்துவ நிபுணர்களுக்கு வடக்கில் 47 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதேவேளை, மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான 205 வெற்றிடமும் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. 289 தமிழ் அலுவலர்கள் பணிபுரிகின்ற அதேவேளை 157 சிங்கள அலுவலர்கள் வடக்கில் கடமையாற்றுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் தமிழர்களே பெரும்பான்மையாக வாழும் நிலையில் அதிகரித்த சிங்கள மருத்துவ நிபுணர்களின் நியமிப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, கட்டாயக் கருக்கலைப்புக்களும், குழந்தை பெற்றுக் கொள்ளச் செல்லும் கர்ப்பிணிப் பெண்கள் குழந்தை பெற்றபின் அவர்களுக்கே தெரியாமல் அடுத்த குழந்தை பெற்றுக்கொள்வதற்கான பிறப்புத் தடைகளும் மேற்கொள்ளப்படுவதாக குற்றம்சாட்டப்பட்டு வரும் நிலையில், அதிகரித்த சிங்கள மருத்துவ நிபுணர்களின் நியமிப்பு இன்னொரு இனஅழிப்பின் திட்டமிட்ட நடவடிக்கையா என்ற கேள்வியே எழுந்துநிற்கின்றது.




சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
CITY EXPRESS
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# ஒன்றுபட்ட தமிழினத்தின் மென்வழிப் போராட்டம்

'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

தமிழர் தாயகம் மீண்டும் தனது பழைய காலத்திற்குச் சென்றுகொண்டிருக்கின்றது. கடந்த நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் தமிழர்கள் சிங்கள ஆதிக்க வெறியர்களுக்கு எதிராக எப்படிப் போராடினார்களோ இப்போதும் அப்படியே போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழர் தாயகம் எங்கணும் தற்போது அகிம்சை வழிப் போராட்டங்கள் தலைதூக்கியுள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் அமைதிவழிப் போராட்டங்களைத் தீரத்துடன், சளைக்காமல் முன்னெடுத்து வருகின்றனர். இதன் ஒரு வடிவமாக கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை பாரிய கடையடைப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போருக்குப் பின்னர், தமிழர் தாயகம் ஒன்றுபட்டு முன்னெடுத்த ஒரு போராட்டமாக இந்தக் ஹர்த்தால் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. காணாமற்போனோரின் உறவினர்களின் அழைப்பின் பேரில் இந்தக் ஹர்த்தால் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரச படைகளுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தைக் காரணம் காட்டி ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளைச் சிங்களப் படைகளும் ஒட்டுக்குழுவாக இயங்கிய ஈ.பி.டி.பியினரும் இணைந்து கடத்திச் சென்றனர். அவ்வாறு கடத்தப்பட்டவர்களில் ஒருசிலர் மாத்திரமே விடுதலை செய்யப்பட்டனர். ஏனையோர் தொடர்பாக இன்றுவரை எந்தவிதத் தகவல்களும் இல்லை.

இதற்கு மேலாக, இறுதி யுத்த காலத்தில் வன்னியில் இருந்த பொதுமக்கள் ஆயிரக்கணக்கான பெற்றோர் தமது பிள்ளைகளான இளைஞர், யுவதிகளைப் படையினரிடம் ஒப்படைத்தனர். பல நூற்றுக்கணக்கான பெண்கள் தமது கணவர்களை சிங்களப் படைகளிடம் ஒப்படைத்தனர்.

'உங்கள் பிள்ளைகள், கணவர்கள் புலிகளுடன் இணைந்து செயற்பட்டார்களா என்று நாங்கள் விசாரணை நடத்தவேண்டி உள்ளது. அதற்காக அவர்களை எங்களிடம் ஒப்படையுங்கள். விசாரணை முடிவடைந்த பின்னர் அவர்களை நாங்கள் விடுகின்றோம்' என்று இறுதி யுத்த காலத்தில் படையினர் ஒலிபெருக்கிகள் மூலமாக விடுத்த அறிவிப்புக்களுக்கு இணங்கவே மக்கள் தமது உறவினர்களை ஒப்படைத்திருந்தனர்.

நீங்களாக ஒப்படைக்காமல் நாங்களாகக் கைது செய்தால் தண்டனைகள் பாரதூரமானவையாக இருக்கும் என்று படையினர் எச்சரிக்கை விடுத்தமையால் அச்சமடைந்த மக்கள் வேறு வழியின்றி தமது உறவினர்களை படையினரிடம் ஒப்படைத்தனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களை படையினர் விடுதலை செய்யாத நிலையில், அவர்களை வேறு இடங்களில் தாங்கள் கண்டனர் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர். ஆனாலும் அவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.



இதற்கிடையே, கணவர்மாரைப் பறிகொடுத்த பெண்களைத் தொடர்புகொண்ட ஒட்டுக்குழு உறுப்பினர்களும் இனந்தெரியாத வேறு நபர்களும் கணவர்மார் தொடர்பான தகவல்களைக் கூறி, அவர்களை விடுதலை செய்யவேண்டுமானால் தங்கள் இச்சைக்கு இணங்கவேண்டும் எனக் கேட்டு பாலியல் ரீதியாகவும் அவர்களைப் பயன்படுத்தியிருக்கின்றனர். அவர்களின் போலி முகத்தை அறிந்த பெண்கள் பின்னர் அவ்வாறான அழைப்புக்களைத் துண்டித்துக்கொண்டனர்.

இதைவிட, உங்கள் பிள்ளைகளை, கணவர்மாரை விடுவிக்கவேண்டுமாயின் இவ்வளவு பணம் வழங்கவேண்டும் எனப் பேரம்பேசி பல மில்லியன் ரூபாய்களைப் பெற்றுக்கொண்டவர்கள் பின்னர் தலைமறைவான சம்பவங்களும் அதிகமாக இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு, படையினராலும் ஒட்டுக்குழுக்களாலும் வேதனைகளுக்கு மேல் வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவித்த காணாமற்போனோரின் உறவினர்கள் இறுதியில் ஜனநாயக வழிப் போராட்டங்களை முன்னெடுக்கத் தலைப்பட்டுள்ளனர். காணாமற்போனோரின் உறவினர்கள் வடக்கிலும் கிழக்கிலுமாக தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

வவுனியாவில் ஆரம்பித்த போராட்டம் அரச அமைச்சர்களின் உறுதிமொழியை அடுத்துக் கைவிடப்பட்டது. இதன் பின்னர் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக போராட்டம் ஆரம்பமானது. இந்தப் போராட்டம் இரண்டு மாதங்களைக் கடந்து, தற்போதும் நடைபெற்று வருகின்றது.

**தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஜனநாயகப் போராட்டம் மீண்டும் ஒரு தடவை சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. இதுபோன்ற ஜனநாயகப் போராட்டங்களே ஈழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாய்களாக அமைந்தன.**

இதைவிட, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கு, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பல இடங்களிலும் காணாமற்போனோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தமது பிள்ளைகளைத் தேடிக் கண்டறிந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரியே இந்தப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அனைத்துப் போராட்டங்களின் வெளிப்பாடாகவே கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை வடக்கு, கிழக்கு தழுவிய கடையடைப்பு - ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அன்றைய தினம் வடக்கு - கிழக்கில் அரச நிர்வாகம் முற்றாகச் சீர்குலைந்தது. ஏனைய சேவைகளும் முடக்கப்பட்டன. மிகவும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் ஹர்த்தாலுக்கு தமிழ் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்த ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால், கிழக்கு மாகாணத்தில் சில முஸ்லிம் பிரதேசங்கள் இதற்கு ஆதரவளிக்கவில்லை. தமிழ் மக்களுடன் சேர்ந்து இயங்குவதற்கு, ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கு தாங்கள் தயாராக இல்லை என்பதை அவர்கள் அங்கு வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக, அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசங்களில் அன்றைய தினம் வர்த்தக நிலையங்கள், சந்தைகள் திறக்கப்பட்டிருந்தன. மக்கள் வழமைபோன்று தமது செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

## பெண்களை ஏமாற்றியவருக்கு வெளிநாடுக்கு செல்லத்தடை

திருமணம் செய்துகொள்வதாகக் கூறி, பல பெண்களை ஏமாற்றி, மாலைதீவுக்கு அழைத்துச்சென்று, அங்கு பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய வர்த்தகர் ஒருவருக்கு வெளிநாடு செல்லத் தடை விதித்து, கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் லால் ரணசிங்க பண்டார உத்தரவிட்டார். பத்தரமுல்லையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கே இவ்வாறு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த சந்தேகநபர், காலி மற்றும் மஹரகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களை ஏமாற்றி, வெளிநாடுகளில் பாலியல் தொழிலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்நிலையில், அங்கிருந்து இலங்கைக்குத் தப்பி வந்த பெண்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்துக்கு அறிவித்தயுடுத்து, பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர், கடந்த டிசெம்பர் மாதம், இது தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து, குற்றத்தடுப்புப் பிரிவினரால் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

## துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தீர்மானம்

மட்டக்களப்பு மாவட்டத்தில், வர்த்தக நிலையங்கள் பலவற்றில் பணிபுரியும் பெண் பிள்ளைகளுக்கு எதிரான பாலியல் மற்றும் வேறுவகையான துஷ்பிரயோகங்




கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு, நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சிறீலங்காவின் பிரதி காவல மா அதிபருக்கு எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விவகாரத்தை காவல்துறைப் புலனாய்வு துறையினரைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அவர் முடிவு செய்துள்ளார் என்று தற்போது தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

## திருகோணமலையில் மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமி மீது வல்லுறவு!

மனநலம் பாதிக்கப்பட்ட சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இருவரை விளக்கமறியலில் வைக்க திருகோணமலை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சிறுமியின் தந்தையின் நண்பர் உட்பட இருவரே குறித்த சிறுமியை கடந்த 27ம் திகதி துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பில் 54 மற்றும் 55 வயதான இருவர் கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் நிறுத்தியபோதே குறித்த இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரிஸ்தமிழ் .கொம் www.ParisTamil.Com
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

# காலங்கடந்த சித்தார்த்தனின் ஞானோதயம்

அந்த சித்தார்த்தனுக்கு ஞானம் பிறந்து அமைதியையும் தர்மத்தையும் போதித்தார். அந்தப் போதனையை சிங்களப் பேரினவாதம் தவறாகப் புரிந்துகொண்டது இன்னொரு புறம். ஆனால், தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கு காலங்கள் பல கடந்து இப்போதுதான் ஞானோதயம் பிறந்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறீலங்கா அரசாங்கத்தோடு இணைந்து நின்று பணியாற்றியதில் புளொட் குழுவினருக்கு முக்கிய பங்குண்டு. எத்தனையோ போராளிகளின் மரணத்தின் பின்னால் புளொட் குழுவின் காட்டிக்கொடுப்புக்கள் முக்கிய பங்கினை வகித்தன. அதனால்தானோ என்னவோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியபோது அதில் ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ போன்ற இயக்கங்களும் கட்சிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டபோதும் தமிழீழத் தேசியத் தலைவரால் புளொட் குழு இணைத்துக் கொள்ளப்படவில்லை.

"இயக்கங்கள் எல்லாம் ஒன்றாக இருந்திருந்தால் நிச்சயமாக ஈழத்தை அடைந்திருப்போம் என்று பலர் கூறுவார்கள், ஆனால், நிச்சயமாக ஈழத்தை அடைந்திருக்க மாட்டோம், அழிவை இன்னும் கூட்டியிருப்போம்..."

ஆனால், 2009 இறுதிப் போரின் பாரிய அழிவின் பின்னர், விடுதலைப் புலிகளின் மௌனத்தின் பின்னர் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சித்தார்த்தன் தலைமையிலான புளொட்டினையும் கூட்டமைப்பிற்குள் இணைத்துக் கொண்டது.

இந்நிலையில், கடந்த 22ம் திகதி 'தடுமாறும் தமிழ்த் தலைவர்களால் தளர்வடைகின்றார்களா தமிழ் மக்கள்? அடுத்து என்ன?' என்ற தலைப்பில், கருத்தாய்வு நிலை கருத்துப் பகிர்வு, மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில், வவுனியா விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பல்வேறு அரசியல் தலைவர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.



இதில் கலந்துகொண்டிருந்த புளொட் அமைப்பு தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் காலங்கடந்து பல்வேறு உண்மைகளை வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளதாவது, "எந்தச் சூழ்நிலையிலும் தன்னுடைய கொள்கையிலிருந்து விலகாமலும், தன்னுடைய குடும்பம் முழுவதையுமே போராட்டத்தில் அர்ப்பணித்துச் செயற்பட்ட ஒரேயொரு தலைமை, அது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான். இந்த விடயங்களுக்காக நான் அவரை மதிக்கின்றேன்.

*தொடர்ச்சி 22ம் பக்கம்*




உங்கள் கேள்விகளுக்கு விரைவில் பதிலளிக்க வருகின்றார் அரிச்சந்திரன். எனவே கேள்விகளை விரைந்து அனுப்பி வையுங்கள்.

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

eelamurazu@gmail.com

அல்லது குறுந்தகவலாக (SMS)

கைபேசி: 00 33 7 81 80 81 16

## வடிவேலுவும் நம்ம அரசியல் தலைகளும் 3




கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்



# செய்திகளும் எழும் கேள்விகளும்

**தெய்வமகள்**

**செய்தி:-** 'உள்நாட்டு போரின் போது இந்தியா எங்களுக்கு கேட்காமலே உதவி செய்தது' என்று சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** இது என்ன பரம இரகசியமா...?

★★★★

**செய்தி:-** 'சீருடை அணிந்துகொண்டு தன் முன்னால் குனிந்து வணங்க வேண்டாம்' என்று தன்னைச் சந்தித்த படையினரிடம் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** தமிழர்கள் என்றால் படுகிடையாகவும் காலில் விழலாமாக்கும்..?

★★★★

**செய்தி:-** கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அம்மன் ஆலயத்தில் அதிகாலையில் பாடல்களை ஒலிபரப்ப சிறீலங்கா இராணுவம் தடை விதித்துள்ளது.

**எழும் கேள்வி:-** ஏன் தூக்கம் கலைகின்றதாமோ..?

★★★★

**செய்தி:-** 'காணாமல் போனோரைக் கண்டறியும் அலுவலகத்தை அமைப்பது தொடர்பான திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பின்னர், அலுவலகம் அமைக்கப்பட்டு காணாமல் போனோரின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** எப்படி உங்களால் மட்டும் நடக்காததை நடக்கும் என்று துணிவாகச் சொல்ல முடிகின்றது..?

★★★★

**செய்தி:-** வெளிநாடுகளின் தலையீடின்றி உள்ளக ரீதியிலேயே தீர்வை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று சிறீலங்கா வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** நீங்கள் என்ன தீர்வைத் தருவீர்கள் என்பது தமிழர்கள் அறியாததா..?

★★★★

**செய்தி:-** தமது நாட்டுக் காவல்துறையின் சீருடையை நீல நிறத்துக்கு மாற்றத் திட்டமிட்டுள்ளதாக சிறீலங்கா காவல்துறை மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.



**எழும் கேள்வி:-** தமிழீழக் காவல்துறை போல் மாறப்போகின்றீர்களா..? நிறம் மாறினாலும் சிங்களப் பேரினவாதத்தின் குணம் மாறுமா என்ன..?

★★★★

**செய்தி:-** 'யுத்தம் தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தியதன் காரணத்தினாலேயே மீதொட்டமுல்ல குப்பை மேட்டை அகற்ற முடியாது போனதாக' முன்னாள் சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** யுத்தம் முடிந்த பின்னரும் ஏழு ஆண்டுகள் தான்தான் ஆட்சியில் இருந்தது என்பதை மகிந்தர் மறந்திட்டாரோ..?

★★★★

**செய்தி:-** இலங்கையில் செல்வந்தர்களும், கோயில்களும் யானைகளை வளர்ப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை சிறீலங்கா அரசு நீக்கியுள்ளது.

**எழும் கேள்வி:-** புலிகளை வளர்ப்பதற்கான தடையை எப்போது நீக்குவார்களாம்..?

★★★★

**செய்தி:-** இலங்கையில் மேலும் 10 ஆயிரம் விகாரைகள் அமைக்கப்பட வேண்டும். அதனைத் தடுப்பதற்கான உரிமை யாருக்கும் கிடையாது என பொதுபல சேனாவின் செயலாளர் ஞானசாரர் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** ஆளுக்கொரு விகாரை கட்டிக் கொடுக்கப்போகின்றாரோ..?

# உறங்கும் இராசதந்திரிகள் விழித்தெழுந்தால்?

'கலாநிதி' சேரமான்

கடந்த 27.04.2017 அன்று ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜி.எஸ்.பி பிளஸ் எனப்படும் ஏற்றுமதி வரிச்சலுகை மீதான வாக்கெடுப்பில் சிறீலங்கா அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கின்றது.

மனித உரிமைகள், தனிநபர் உரிமைகள், அரசியல் உரிமைகள் உள்ளடங்கலான பன்னாட்டு விழுமியங்களுக்கு இசைவாக சிறீலங்கா அரசாங்கம் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆவணி மாதம் இச்சலுகையை சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து ஐரோப்பிய ஒன்றியம் மீளப்பெற்றிருந்தது. இது பற்றி அப்பொழுது கருத்து வெளியிட்ட அன்றைய சிங்கள அதிபர் மகிந்த ராஜபக்ச, 'ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஜி.எஸ்.பிளஸ் சலுகையைத் தருவதற்கு விருப்பமில்லை என்றால், அதனை அதுவே வைத்திருக்கட்டும். எனக்கு அது தேவையில்லை' என்று ஆணவமாகப் பதிலளித்திருந்தார்.

இதற்கு ஓராண்டுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் தமது உறவுகளை சிங்களம் கொன்று குவித்த பொழுது அதனைத் தடுத்து நிறுத்தாது உலகம் பாராமுகம் காட்டியதையிட்டு மனம் வெதும்பிப் போயிருந்த தமிழர்களுக்கு, ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு ஒத்தடமளிப்பதாக இருந்தது. இப்பொழுதாவது உலகின் கண்கள் திறந்து கொண்டன என்று அன்று தம்மைத் தாமே தமிழர்கள் ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள்.

இப்பொழுது ஈழத்தீவில் மகிந்தரின் ஆட்சி இல்லை. நல்லாட்சி என்ற பெயரில் அவரது முன்னாள் மந்திரியான மைத்திரியின் ஆட்சி நிலவுகின்றது. ஆனாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? என்ற கதையாகவே மைத்திரியின் நல்லாட்சி இருக்கின்றது. ஆட்கள் மாறியிருக்கின்றார்கள். ஆனால் இன வெறிகொண்ட அரச இயந்திரம் அப்படியே தான் இருக்கின்றது.

யதார்த்தம் இவ்விதம் இருக்கும் பொழுது சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை மீளளிப்பதற்கு இப்பொழுது ஐரோப்பிய ஒன்றியம் எடுத்திருக்கும் முடிவானது, மனித உரிமைகள், தனிநபர் உரிமைகள், அரசியல் உரிமைகள் போன்றவற்றுக்காக அல்லாது மகிந்தரை ஆட்சிபீடத்திலிருந்து தூக்கியெறியும் ஒரேயொரு நோக்கத்துடனேயே ஜி.எஸ்.பிளஸ் வரிச்சலுகையை 2010 ஆம் ஆண்டில் அது விலக்கிக் கொண்டது என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியிருக்கின்றது.

ஈழத்தீவின் ஆட்சிக்கட்டில் எப்பொழுதுமே திறந்தவெளிப் பொருண்மியக் கொள்கைகளுக்கு ஆதரவான போக்கையுடைய அரசியல் தலைவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் என்பது இன்று நேற்றல்ல, கடந்த அறுபத்தொன்பது ஆண்டுகளாக மேற்குலகம் கொண்டுள்ள அவாவாகும்.

டி.எஸ்.சேனநாயக்க, ஜோன் லயனல் கொத்லாவல, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, மைத்திரிபால சிறீசேன எனத் திறந்தவெளிப் பொருண்மியக் கொள்கைகளுக்கு ஆதரவான சிங்கள அரசியல் தலைவர்கள் ஈழத்தீவின் ஆட்சிக்கட்டில் அமரும் பொழுதெல்லாம் மேற்குலகம் பரவசத்தின் உச்சத்திற்குச் செல்வதும், அதன் பின்னர், மனித உரிமைகள், தனிமனித உரிமைகள், அரசியல் உரிமைகள் எல்லாம் இரண்டாம் பட்சமாகி விடுவதும் கடந்த அறுபத்தொன்பது ஆண்டுகளாக நடந்தேறுவதுதான்.



எனவே திறந்தவெளிப் பொருண்மியக் கொள்கைகளை ஆரத்தழுவிக் கொண்டுள்ள மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கான சன்மானமாக ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள முடிவையிட்டு நாம் பெரிதாக ஆச்சரியப்படத் தேவையில்லைதான்.

ஈழத்தீவின் அரசியலில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் சரி, ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் சரி இப்பொழுது இருக்கக்கூடிய மிகப்பெரும் கவலை மகிந்தரின் மீள்வருகைக்கான சாத்தியக் கூறுகள் தான். அடுத்த அதிபர் தேர்தலில் மகிந்தர் போட்டியிட முடியாதபடி பத்தொன்பதாம் திருத்தச்சட்டத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மைத்திரி - ரணில் அரசாங்கம் ஆப்புவைத்துவிட்ட பொழுதும், தனது சகோதரர் கோத்தபாயவை அடுத்த அதிபர் தேர்தலில் களமிறக்கி, அதிபர் ஆசனத்தில் தனது தம்பி வீற்றிருக்கப் பிரதம மந்திரியின் ஆசனத்தில் தான் அமர வேண்டும் என்பதுதான் இப்பொழுது மகிந்தரின் கனவாகும்.

இதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வைப்பது போன்றே மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் ஆட்சியும் காணப்படுகின்றது. மகிந்தரின் ஆட்சிக்காலத்தில் தென்னிலங்கையில் வீறுநடை போட்ட அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் இப்பொழுது தேக்க நிலையில் உள்ளன. மகிந்தரின் ஆட்சியில் பாணின் விலையும், பருப்பின் விலையும் அதிகரித்ததால் வெதும்பிப் போய் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மைத்திரிக்கும், ரணிலுக்கும் வாக்களித்த சிங்கள வாக்காளர்கள் இப்பொழுது மகிந்தர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பரவாயில்லை என்ற மனோநிலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இது போதாதென்று நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் என்ற கதையாகத் தென்னிலங்கையில் இப்பொழுது காலை, மாலை என்ற வேறுபாடின்றி வேலையற்ற பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டங்களும், தொழிற் சங்கங்களின் பணிப் புறக்கணிப்புக்களும் நிகழ்ந்தேறுகின்றன.

இவற்றையெல்லாம் கொழும்பில் உள்ள மேற்குலகத் தூதரகங்கள் கண்டுகொள்ளாமல் இல்லை.

தொடர்ச்சி 14ம் பக்கம்

> **இவ்விடயத்தில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தின் நூற்றுப் பத்தொன்பது உறுப்பினர்கள் எடுத்தமை ஒரு விதத்தில் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றிதான்.**

## காணாமல்போன கணவரை மீட்டுத்தருவதாக போதை எண்ணெயைப் பூசியவர் கைது!

22 வயதுடைய பெண்ணொருவரின், காணாமல் போன கணவரை மீட்டுத் தருவதாக கூறி, அவரை வன்புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்த பேயோட்டி ஒருவரை, பயாகல காவல்துறையினர் கைது செய்துள்ளனர். காணமால் போன தனது காணவரை, மீட்டுத் தருமாறு கோரி, மேற்படி பெண், பேயோட்டி ஒருவரிடம் சென்றுள்ளார். கணவரை மீட்டுத் தருவதற்கு, 15,000 ரூபாய் செலவாகும் என்று, பேயோட்டும் நபர் கூறியதும், தன்னிடம் அந்த அளவுக்கு பணம் இல்லை என்றும், கட்டணத்தை குறைத்துக் கட்டுவதாகவும் குறித்த யுவதி கூறியுள்ளனர். இதனைக்கேட்ட பேயோட்டி, அப்பெண்ணை, தனியறையொன்றுக்குள் அழைத்துக் சென்று, போதை தரும் எண்ணெய் ஒன்றை, பெண்ணின் உடலில் பூசிவிட்டு, அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தி முயற்சித்துள்ளார். எனினும், பேயோட்டியிடமிருந்து பாதுகாப்பாக தப்பித்த யுவதி, காவல்துறையினருக்கு இது குறித்து தகவல் வழங்கியுள்ளார்.

## ஊர்காவல்துறையில் மயக்க மருந்து விசிறி வன்புணர முயற்சி

யாழ். ஊர்காவற்றுறை பகுதியில் வீட்டில் தனித்திருந்த பெண்ணுக்கு மயக்க மருந்து விசிறி, வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற நபர் ஒருவர் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவிற்குச் சற்று பின்னரான 12.30 மணியளவில் புகுந்த சந்தேக நபர், அங்கு தனித்து இருந்த 18 வயதுடைய யுவதி தூக்கத்தில் இருந்த நிலையில், அவரது வாயை கைகளினால் பொத்தியவாறு அவர் மீது மயக்க மருந்தை விசிறியுள்ளார். எனினும், சுதாகரித்துக் கொண்ட யுவதி கூக்குரல் இட்டுள்ளார். இதனையடுத்து, அங்கு திரண்ட அயலவர்கள், சந்தேக நபரை உடனடியாக மடக்கி பிடித்து அங்குள்ள மின்கம்பத்தில் கட்டி வைத்து, பின்னர் ஊர்காவற்துறையிலுள்ள சிறீலங்காக்காவல்துறையினிடம்ஒப்படைத்தனர்.

விசாரணையின் போது, குறித்த 35 வயதான நபர் மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியை சேர்ந்தவர் என்பதும் அவர் சிறீலங்கா காவல்துறையில் முன்னர் பணியாற்றிவர் என்பதும் தெரியவந்தது. தற்போது ஊர்காவற்றுறை பகுதியில் தங்கி இருந்து கட்டட வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளார். சந்தேக நபரை ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, சந்தேக நபரை எதிர்வரும் 5ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## அலரி விதை உட்கொண்ட பெண் சாவு

கடந்த 28ம் திகதி அலரி விதை உட்கொண்ட பெண் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவரது கணவனால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்தில் மரணமடைந்துள்ளார். சரசாலை தெற்கு சாவகச்சேரியை சேர்ந்த சசிதரன் பகீரதி (வயது 30) என்ற இளம் குடும்பப் பெண்ணே மரணமடைந்தவராவார். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே குறித்த பெண் அலரி விதையை உட்கொண்டு மரணமடைந்துள்ளதாகதெரியவந்துள்ளது.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### வீட்டிலிருந்து புறப்பட்டவர் சடலமாக மீட்பு

அக்கரைப்பற்று – சின்னமுகத்து வாரம் கடற்கரையில்நாவற்காடு பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பாலிப்போடி சிவசம்பு (வயது 66) என்பவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த 16ம் திகதி காலை வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற இவர், மாலையாகியும் வீடு திரும்பாமையால் அவரைத் தேடிவந்த நிலையில் மறுநாள் குறித்த நபர் உயிரிழந்த நிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

### மரத்துடன் மோதுண்டு இளம் குடும்பஸ்தர் பலி

மன்னார் அடம்பன் வீதியில் மரத்துடன் உந்துருளி மோதுண்ட விபத்துச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தரான மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகஸ்தராகக் கடமையாற்றும் துரைரெட்ணம் ரட்ணகுமார் (வயது 32) என்பவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த 15ம் திகதி சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இது தொடர்பில் உடனடியாக யாரும் அறிந்திராத நிலையில் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை அப்பகுதியால் சென்றவர்கள் சம்பவத்தை அறிந்து சிறீலங்காக் காவல்துறைக்கு அறிவித்துள்ளனர். ஆரம்பகட்ட விசாரணைகளில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் அருகே உள்ள மரம் ஒன்றுடன் மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### கிணறு வெட்டியவர் மின்தாக்கி மரணம்

வவுனியா மன்னார் வீதி சாம்பல் தோட்டத்தில் கடந்த 29ம் திகதி காலை மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். வவுனியா கப்பாச்சி செட்டிக்குளத்தில் வசித்து வரும் சின்னச்சாமி விஜயகாந்தன் (வயது – 29) என்ற நபர் கிணறு வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்த போது, கிணறு வெட்டும் இயந்திரத்தில் (கொம்பிறசர்) மின்சார கசிவு ஏற்பட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

### மதில் சரிந்து விழுந்து சிறுமி பலி

ஏறாவூர் 4ம் குறிச்சியிலுள்ள வீட்டு மதில் சரிந்து ஏழு வயதுச் சிறுமி மீது விழுந்ததில், அச்சிறுமி பலியாகியுள்ளார். கடந்த 29ம் திகதி சனிக்கிழமை பகல் நடந்த இச்சம்பவத்தில், படமாளிகை வீதியைச் சேர்ந்த சண்முகராசா ஷாறுக்கா (வயது 7) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். சிறுமியும் அவரது சகோதரனும் விளையாடிக் கொண்டிருந்த போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த மதில் கடந்த 4 நாட்களுக்கு முன்னரேதான் கட்டி முடிக்கப்பட்டது என்று வீட்டுரிமையாளர்கள் தெரிவித்தனர்.

### ஈரான் எல்லையில் பலியெடுக்கப்பட்ட ஈழத் தமிழர்கள்

#### முகவர்களை நம்பி வெளிநாடு சென்ற இருவருக்கு ஏற்பட்ட பரிதாபம்

வெளிநாடு செல்வதற்காக முகவரை நம்பி சென்ற முல்லைத்தீவைச் சேர்ந்த இரு இளைஞர்கள் ஈரான் நாட்டின் எல்லையில் உயிரிழந்த துர்ப்பாக்கிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முல்லைத்தீவு செம்மலை மற்றும் உடுப்புக்குளம் பிரதேசத்தை சேர்ந்த இளைஞர்கள் இருவர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் இலண்டனில் உள்ள முகவர் ஒருவரின்ஊடாக ஐரோப்பியநாடு ஒன்றுக்கு செல்வதற்காக பணம்செலுத்தி 11.12.2016 அன்று உள்ளூர் முகவர் ஒருவர் ஊடாக இலண்டன் நாட்டிற்கென அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் இறுதியாக குடும்பத்தினருடன் ஈரானில் இருந்து தொலைபேசியில் 19.12.2016 அன்று உரையாடி தாங்கள் ஈரானில் இருப்பதாகவும் அங்கிருந்து வேறு நாட்டிற்கு செல்வதாகவும் தகவல் வழங்கியுள்ளனர்.

பின்னர் 19.12.2016 அன்றிலிருந்து குடும்பத்தினருடன் எந்தவித தொடர்புகளும் அற்றநிலையில் இவர்களிற்கு என்ன நடந்தது என அறியாது குடும்பத்தார் தேடித்திரிந்த நிலையில், கடந்த 23.04.2017 அன்று இவர்களின் குடும்பத்தினர் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகத்துடன் தொடர்பு கொண்ட போது, ஈரான் எல்லையை கடக்க முற்பட்ட இரண்டு இளைஞர்கள் சுடப்பட்டுள்ளதாக அவர்களின் படங்களை காண்பித்துள்ளனர்.

அப்படங்கள் சரியான முறையில் அடையாளம் காணமுடியாத போதிலும், குறித்த இளைஞர்களின் ஏனைய படங்களை வைத்தும் உறவினர்கள் ஊடாகவும் சுடப்பட்டு மரணமடைந்தவர்கள் மேற்படி இரு இளைஞர்களும்தான் என்பதனை உறுதிப்படுத்தியுள்ளனர்.



மரணமடைந்தவர்கள் முல்லைத்தீவு உடுப்புக்குளத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பேரம்பலம் மைதிலிபாலன் (வயது 39), முல்லைத்தீவு செம்மலையைச் சேர்ந்த விஜயகுமார் பிரசாந்த் (வயது 23) என்பவர்களே இவர்கள்.



போலி முகவர்களிடம் பணத்தைக்கொடுத்து முறையற்ற விதத்தில் வெளிநாடு செல்லமுற்பட்டு இறந்த இரு இளைஞர்களினதும் செய்திகேட்டு மேற்படி இரு கிராமங்களும் சோகத்தில் மூழ்கியுள்ளதோடு இவர்களின் உடலங்களை பெறுவதற்குக்கூட வழியற்றவர்களாய் செய்வதறியாது குடும்பத்தினர் சோகத்தில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களில் பேரம்பலம் மைதிலிபாலன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவ பிரிவில் பணியாற்றிய ஒரு போராளி என்றும் கூறப்படுகின்றது.

### உரும்பிராய் முதிவர் கீரிமலை கேணியில் சாவு

கீரிமலை தீர்த்தக்கேணியில் வீழ்ந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உரும்பிராய் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் செல்லையா மகாதேவன் (வயது 81) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 25ம் திகதி செவ்வா–ய்க்கிழமை காலை கோயிலுக்குச் சென்றுவருவதாக கூறிச்சென்றவர் நீண்டநேரமாக வீடு திரும்பவில்லை. தந்தையினை காணாத மகன் கீரிமலை பகுதிக்கு வந்து தேடியபோது முதியவர் கேணியில் உள்ள கற்பாறைக்குள் சிக்குண்ட நிலையில் சடலமாக காணப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

# வாழ்வழிக்கும் வாள்!




– கந்தரதன்

யுத்த காலத்தில் நாம் வரலாறு காணா தமிழ் இன அழிப்புக்களைக் கண்டு பெரும் வடுக்களை சுமந்து நிற்கும் இனம் என்பது வரலாற்று உண்மை. ஆனால், யுத்தம் முடிந்து 8 ஆண்டுகளை அண்மிக்கும் நிலையிலும் எம் தமிழ் இனம் ஏதோ ஒருவகையில் அழிந்துகொண்டுதான் இருக்கின்றது. நாளும் இணையத்தை வலம் வரும்போது குறைந்தது 5 அகால மரணமாவது இருக்கும். இதில் ஒன்று தற்கொலை என்றும் மற்றொன்று விபத்து மரணம் என்றும் இன்னொன்று வாள்வெட்டு மரணம் என்றும் மற்றொன்று மின்சாரம் தாக்கி மரணம் என்றும் மற்றொன்று கிணற்றில் வீழ்ந்து மரணம் என்றும் தமிழ் மக்களின் சாவுகளுக்கு சாட்டுக்கள் ஏராளம். ஆனால் இறந்தவர்களின் வயதைக்கேட்டால், 18 வயதில் இருந்து 30 வயதுவரைதான் இருக்கும். ஏன் தமிழ் மக்கள் இவ்வாறான மரணங்களை எதிர் கொள்கின்றனர் என்பது சிந்திக்கவைக்கின்றது.

தமிழர் தாயகத்தில் இன்று தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் நின்மதியாகவும் வாழ்கின்றனர் என்று சர்வதேசத்திற்கு பாடம் சொல்லும் சிறீலங்கா அரசு ஏன் தமிழர்களின் சாவினை பொருட்படுத்தாமல் இருக்கின்றது என்பது வேறு. அங்கு வாழ முடியாது என்றுகருதி தாயகத்தில் இருந்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தப்பிச்செல்லும் இளைஞர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றனர். இறுதி யுத்தகாலத்தில் பல வடுக்களைச் சுமந்து மன அழுத்தங்களோடு வாழ்ந்த உறவுகள் புலம்பெயர் தேசங்களுக்கு தப்பிச்செல்ல கையில் உள்ள பணத்தை எல்லாம் முகவர்களுக்கு கொட்டிக்கொடுத்துவிட்டு, தமது உயிரையே கொடுக்கும் சம்பவங்கள் ஏராளம்.

**தம்முடன் மோதிய அண்ணன், தம்பிக்கு சிகிச்சை வழங்கப்படுவதைக் கண்டு, வைத்தியசாலையில் வைத்து அவர்கள் மீது மீண்டும் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட மோதலில் நால்வர் படுகாயமடைந்துள்ளதுடன், மருத்துவ தாதி தலைக்கவசத்தால் தாக்கப்பட்டுமுள்ளார்.**





இவ்வாறு உயிரைக்கொடுத்த இரண்டு இளைஞர்கள் பற்றி இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகின்றது.

முகவர்களின் ஆசைவார்த்தையை நம்பி, சட்ட விரோதமான முறையில் பிரித்தானியா செல்ல முற்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் ஈரான் நாட்டில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் செம்மலை மற்றும் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர். பிரித்தானியாவில் தொழில் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அப்பகுதியைச்சேர்ந்த வெளிநாட்டு முகவர் ஒருவரின் ஊடாக குறித்த இருவரும் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு உப்புக்குளத்தைச் சேர்ந்த 39 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையான பேரம்பலம் மைதிலிபாலன் மற்றும் முல்லைத்தீவு செம்மலையைச் சேர்ந்த 23 வயதான விஜயகுமார் பிரசாத் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் திகதி பிரித்தானியா நோக்கி குறித்த இரு இளைஞர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். பின்னர் அதே மாதம் 19ஆம் திகதி குடும்பத்தினருடன் தொடர்புகொண்டு உரையாடியுள்ளனர்.

தாங்கள் ஈரான் நாட்டில் இருப்பதாகவும், அங்கிருந்து வேறு நாட்டிற்கு செல்லவுள்ளதாகவும் தங்களுக்கு தகவல் வழங்கியதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனினும், 19ஆம் திகதிக்குப் பின்னர் தங்களுடன் எவ்வித தொடர்பும் கொள்ளவில்லை என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து வெளிநாட்டு தூதரகத்தை தொடர்பு கொண்டு குடும்பத்தினர் விபரமறிந்துள்ளனர்.

இதன்போது ஈரான் எல்லையைக் கடக்க முற்பட்ட இரண்டு இளைஞர்கள் சுடப்பட்டுள்ளதாக தெரிவித்து, அவர்களின் புகைப் படங்களை காண்பித்துள்ளனர். குறித்த புகைப்படம் சரியாக அடையாளம் காட்டக்கூடிய வகையில் இருக்கவில்லை.

இதனையடுத்து, வீட்டில் உள்ள குறித்த இருவரின் புகைப்படங்களையும் வைத்து ஒப்பிட்டு பார்த்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தது மேற்படி இரு இளைஞர்கள் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. தாயகத்தில் இருந்தாலும் சாவுதான்



அதற்கு அஞ்சி புலம்பெயர் தேசத்திற்குச் சென்றாலும் தமிழ் இனத்தினை சாவு விரட்டிக்கொண்டுதான் உள்ளது.

இதேவேளை, தமிழர் தாயகத்தில் வாள்களோடு எமனின் தூதுவர்களாக செயற்படுபவர்கள் தமது அடாவடிகளை நிறுத்துவதாகத் தெரியவில்லை. அண்மையில் வன்னிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று தமிழ் இனத்தையே தலை குனியவைத்தள்ளது. ஏற்கெனவே வாள்வெட்டுக்கு இலக்காகி, மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த இரண்டு பேர் மீது, வைத்தியசாலையினுள் புகுந்து மேற்கொள்ளப் பட்ட வாள் வெட்டுச் சம்பவத்தில் ஏற்கனவே காயமடைந்த இருவர் உட்பட 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள், ஆபத்தான நிலையில் கிளிநொச்சி மற்றும் வவுனியா வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என, மல்லாவி காவல்துறை நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் அறியவரும்போது, மல்லாவி காவல்துறை பிரிவில் உள்ள கல்விளான் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் குழுவுக்கும், திருநகர் கிராம இளைஞர் குழுவுக்கும் இடையில் நீண்டகாலமாக பகை நிலவி வந்துள்ளது. இந்நிலையில் இரண்டு தரப்புக்கும் இடையில் மல்லாவி நகரப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு மோதலில் படுகாயமடைந்த அண்ணன், தம்பி இருவர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்தனர்.

இந்நிலையில், எதிர் தரப்பை சேர்ந்த ஏனைய இருவர் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைகளுக்காக இதேவைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அதன்போது, தம்முடன் மோதிய அண்ணன், தம்பிக்கு சிகிச்சை வழங்கப்படுவதைக் கண்டு , வைத்தியசாலையில் வைத்து அவர்கள் மீது மீண்டும் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது ஏற்பட்ட மோதலில் நால்வர் படுகாயமடைந்துள்ளதுடன், மருத்துவ தாதி தலைக் கவசத்தால் தாக்கப்பட்டுமுள்ளார்.

அத்துடன், மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்களும் சிதறுண்டு சேதமடைந்துள்ளன. இதனையடுத்து, வைத்திய சாலைக்கு வந்த மல்லாவி காவல்துறையினர் சம்பவத்தை கட்டுப்படுத்தியுள்ளனர். வைத்தியசாலையில் புகுந்து தாக்குதல் நடத்தியவர்களை கைதுசெய்யும்வரை தாம் பணிப்புறக்கணிப்பில்

தொடர்ச்சி 22ம் பக்கம்

# அது நடந்திராவிட்டால்..அப்போதே....

அதன் பரிமாணங்களை பார்க்கலாம் இனி...

முதலாவதாக எமது போராளிகளுக்கே ஒரு உளவியல் வெற்றி அப்போது மிக தேவையாக இருந்தது.

இதற்கு சரியாக மூன்று மாதம் முன்னர்தான் யாழ் தளபதியும் அதுவரை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி ஆயுத பொறுப்பாக இருந்தவனும் மத்தியகுழு உறுப்பினனுமான பண்டிதர் இந்த முகாமை சிங்களப் படை முற்றுகை இட்ட சமரில் வீரச்சாவடைகிறான்.

அந்த ஆவரங்கால் முகாமில் எடுக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை ரூபவாகினியில் மணிக்கொரு முறை காட்டி அத்துலக்முதலி, ஜேஆர் கும்பல் சிங்கள மக்களுக்கு இனிப்பு சேதி வழங்கி கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதியின் முகாமை கூட தம்மால் கண்டுபிடித்து தாக்கி அழித்து ஆயுதங்களை கைப்பற்ற முடியும் என்று சிங்களம் காட்டியது எமது சாதாரண போராளிகள் மத்தியில் பலத்த உளச் சோர்வை அளித்திருந்தது.

யாழ் தளபதியாகவும் அமைப்பின் மத்திய குழு உறுப்பினராகவும் நிதி ஆயுதங்களுக்கு பொறுப்பாகவும் இருந்த பண்டிதரின் வீரச்சாவால் துவண்டுபோயிருந்த எமது போராளிகளுக்கு ஒரு புதிய வெற்றி நிச்சயமாக அப்போது தேவைப்பட்டிருந்தது.

மிக நுணுக்கமாக யாழ் பொலீஸ் நிலைய தாக்குதல் பண்டிதர் வீரச்சாவடைந்ததில் இருந்து மூன்று மாதங்களின் பின் அதே நாளில் நடாத்த திட்டமிடப்பட்டது. (பண்டிதர் வீரச்சாவு 09.01.1985). ஆனாலும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் ஒருநாள் பின் போனது.

இரண்டாவதாக, எமது இயக்கத்தின் தலைமை இந்தியாவின் தமிழ்நாட்டிலே நிலை கொண்டிருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வழங்கு தளமாகவும் பின் தளமாகவும் தமிழ்நாடே அப்போது இருந்தது. தமிழீழம் முழுவதும் 1984க்கு பின்னர் தினசரி ஏதாவது ஒரு இராணுவ நடவடிக்கை, மக்கள் ஒன்றுதிரட்டும் நடவடிக்கை என்று வீச்சாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சிக்கு நிச்சயமாக இந்த தமிழ்நாடு பின்தளம் பெரும் பலமாக இருந்தது.

இந்த நிலையில் 1984 ஒக்டோபரில் இந்திரா காந்தி படுகொலையுடன் எல்லாமே தலைகீழாக மாறத்தொடங்கியது. அதுவரைக்கும் சிறீலங்காவுடன் ஒரு வித முரண்பாட்டு எதிர்க்கொள்கையை கடைப்பிடித்துவந்த இந்திய அரசின் வெளியுறவுக்கொள்கை, இந்திரா காந்தியின் மரணத்தின் பின் ஒரு யு திருப்பம் (U Turn) பெற்று தலைகீழாக மாறித் தொடங்கி இருந்தது.

அதுவரை இந்திரா காந்திக்கு கொள்கை வகுப்பாளர்களாக இருந்த ஜி.பார்த்தசாரதி போன்றோர் ஓரம்கட்டப்பட்டு புதியவர்கள் இந்திய கொள்கை வகுப்பாளர்களாக வந்திருந்த நேரம்.

இந்திய உளவு அமைப்பான றோ வுக்கு சிறீஸ் சந்ர சக்ஸ்சேன அதில் முதன்மையானவர். இன்னொரு புறத்தில் இந்திய உள்ளக தேசிய புலனாய்வு அமைப்பான இந்தியன் இன்ரெலிஜன்ஸ் அமைப்பின் தென்மாநிலத்துக்கு மாயன்குட்டி கேரளத்தில் நாரயண் என்கிற எம்.கே.நாராயணன் அவர்களும் பொறுப்புக்கு வந்திருந்தார்கள்.

இந்திராவின் திடீர் மரணத்தால் பதவிக்கு வந்த ராஜிவ்காந்தி அதுவரை இந்தியா கடைப்பிடித்த எல்லாவிதமான வெளியுறவுக் கொள்கையையும் தலைகீழாக மாற்றி அமைக்கும் தனது எண்ணத்தை ஏராளம் நேர்காணலில் தனது பதவி ஏற்பு உரையில் என்று பகிரங்கமாக சொல்ல தொடங்கி இருந்தநேரம் 1985 ஆரம்பம்.

அதுவரை இந்திரா காந்தியின் தமிழர் பற்றிய வெளியுறவுக் கொள்கையால் பெருத்த ஏமாற்றமும் கசப்பும் கொண்டிருந்த ஜே.ஆர். தலைமையிலான சிங்கள தலைமை, ராஜிவ் காந்தியின் புதிய நகர்வுகளை நுட்பமாக கவனிக்க தொடங்கி தாமும் காய்களை நகர்த்த தொடங்கியது 1985 ஆரம்பத்தில்.

சிறீலங்கா அமைச்சரவையின் மிக முக்கியமானவரும் சிறீலங்கா பாதுகாப்பு தேசிய பாதுகாப்பு என்பனவற்றுக்கு பொறுப்பானவருமான லலித் அத்துலக்முதலி ராஜிவ் காந்தியுடன் கடித தொடர்புகளை பேண தொடங்கி விட்டிருந்தார்.

சிறீலங்கா தமிழர்களுக்கு உரிமைகள் சிலவற்றை வழங்க தயாரக இருக்கிறது என்றும் அதற்கு தடையாக தமிழ்நாட்டில் தளம் அமைத்து இயங்கும் அமைப்புகள் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் அத்துலக்முதலி ராஜிவ் காந்திக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டபடி இருந்தார்.

இந்த கடிதத் தொடர்புகள் பற்றி சிறீலங்கா முன்னணி பத்திரிகைகளில் செய்தி வெளிவரும்படி சிங்களத் தலைமை பார்த்துக்கொண்டது. மிக நுட்பமான ஒரு இராஜதந்திர நகர்வு அது.

19 நவம்பர் 1984ல் வடபிராந்திய சிறீலங்கா இராணுவதளபதி ஆரியபெரும கண்ணிவெடி தாக்குதலில் சிதறி செத்த பின்னர், அவருக்கு கேணல் பதவியிலிருந்து பிரிகேடியர் பதவி வழங்கினாலும்கூட சிங்களத்தின் அச்சம் அதி உச்சத்திலேயே இருந்தது.

இதனால் புதிய இந்திய பிரதமர் ராஜிவ் காந்தி மூலம் எமக்கு அழுத்தங்களை கொடுக்கும் நகர்வை சிங்களம் மேற்கொண்டது.

இன்னொரு புறத்தில் இந்திய அரசின் புதிய வெளியுறவுக்கொள்கையை அதன் றோ அமைப்பின் தலைவரான சிறீஸ் சந்ர கச்ஸ்சேன எமது தலைவருக்கு அறிவிக்கும் முகமாக சந்திப்புகளை மேற்கொண்டிருந்தார். அவருடன் தேசிய புலனாய்வு அமைப்பு தென்மாநில பொறுப்பான எம்.கே.நாராயணனும் இருந்திருந்தார்.

தமிழீழத் தாயகக் கொள்கையை புதிய இந்திய அரசு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்றும் சிறீலங்கா அரசுடன் ஒருவிதமான சமாதானத்துக்குள் சென்றே ஆக வேண்டும் என்பது போன்ற அழுத்தங்கள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன் சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு அதிகார பரவலாக்கத்தில் சில உரிமைகளை வழங்க தயாராக இருப்பதாக தமக்கு உறுதி அளித்திருப்பதாக இந்திய மத்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு தெரிவித்தது.

சிறீலங்கா அரசுடன் ஒருவிதமான சமாதான உடன்படிக்கைக்கு மறுக்கும் பட்சத்தில் அழுத்தங்கள் இன்னும் கடுமையாகும் என்று நாசுக்காக தெரிவித்தது இந்திய அரசு.

இனி அங்கிருந்தால் தமிழீழக் கொள்கையை கைவிடும்படியான அழுத்தங்கள் அதிகரிக்கும் என்று சொல்லாமல் சொல்லிய பொழுதது.

நகரும் கெரில்லா மாதிரியான தாக்குதல்களை அதுநாள்வரை செய்துகொண்டிருந்த எமது அமைப்பு, ஒரு தளம் ஒன்றை அமைக்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்தே ஆக வேண்டிய காலம் இதோ வந்துவிட்டது என உணர்ந்த நேரமது.

இப்படியான காரணங்கள் ஒருபுறம் இருக்க, இன்னொரு பக்கத்தில் வேறு விதமான ஒரு பெரும் அபாயமும் எமை சூழ்ந்து வந்தது அப்போது.

இந்திய அரசின் பயிற்சிகளை பெற்றுவிட்டு அங்கு தமிழ்நாட்டில் தளம் அமைத்திருந்த மற்றைய அமைப்பின் தலைமைகளை இந்திய அரசின் புலனாய்வு பிரிவுகளும் அரசும் தமது ஆளுமைக்குள் கொண்டுவந்து கொண்டிருப்பது கண்டுகொள்ளப்பட்டது.

அந்த இயக்கங்களின் தலைமைகளிடம் காணப்பட்ட சலிப்பும், தமிழீழ தாயகத்தில் சிங்கள அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் அவர்கள் காட்டிய அசமந்தப் போக்கு, களத்துக்கு செல்வதில் அந்த தலைமைகளுக்கு இருந்த பயம், அலட்சியம் என்பனவற்றை கணித்து கொண்ட இந்திய அரசு அவர்களை வெகு சுலபமாக தமது வலைக்குள் கொண்டுவந்திருந்தது.

மற்றைய அமைப்புகள் புதிய இந்திய பிரதமரான ராஜிவ் காந்தியின் புதிய வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்ற விதத்தில் தமது இலட்சியத்தை தூக்கி எறிந்து வளைந்து கொடுக்க தொடங்கி விட்டார்கள் என்பதை முழுமையாக புரிந்து கொண்ட எமது அமைப்பு, அதற்கும் ஒரு பதிலடி கொடுக்க முடிவெடுத்தது.

தமிழீழம் என்று புறப்பட்ட அநேக அமைப்புகளின் தலைமை என்பது இந்திய அரசின் பொம்மையாக மாறிவிட்டது என்றும் அவர்களை இனி எந்தவிதத்திலும் காப்பாற்ற முடியாது என்றும் முழுக்க முழுக்க முடிவான பொழுது அது.

இதன் வெளிபாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிப்படையாகவே அறிவிக்க தொடங்கி விட்டனர் 1985 மார்ச், ஏப்ரல் மாதங்களில்.

1985 ஏப்ரல் மாதம் வெளியான விடுதலைப் புலிகள் பத்திரிகையின் முன்பக்கத்தில் தலைவரின் படத்துடன் புரட்சிகர தலைமையை உருவாக்குவோம் என்ற ஒரு அறிக்கை வெளியிடப்படுகிறது.

விடுதலைப் போராளிகளுக்கு பிரபாகரன் வேண்டுகொள் என்ற அந்த அறிக்கையின் ஒலிவடிவம் தமிழீழத் தாயகம் மற்றும் தமிழகத்தில் பரவலாக விநியோகிக்கப்பட்டது. துரதிஸ்ட வசமாக அந்த அறிக்கையின் உண்மையான எச்சரிக்கையை, வேண்டுகோளை மற்றைய இயக்கத் தலைமைகள் புரிந்து கொள்ளவில்லை.

அந்த அறிக்கையானது தமிழீழத் தாயகத்தில் சென்று களமாட அனைத்து தலைமைகளையும் அழைத்தது. அப்படி அங்கு களமாடும் பொழுதே உண்மையான ஒருமைப்பாடு ஏற்படும் என்றும் அதன் ஊடாகவே ஒரு கூட்டுமுன்னணி உருவாகும் என்றும் வலியுறுத்தியது. மாறாக இந்திய அரசு வலியுறுத்தும் ஓர் ஒருமைப்பாடு என்பது ஒருபோதும் சாத்தியமாகாது என்றும் கூறியது தலைவரின் அறிக்கை.

இன்னுமொரு திசையில் வேறு ஒரு பிரச்சனையும் வலுத்து வந்தது. இந்தியப் பயிற்சி முடித்த தமது போராளிகளை தாயகத்து அனுப்பிய மற்றைய இயக்க தலைமைகள் அவர்களுக்கு தெளிவான வழிகாட்டுதல் எதனையும் வழங்காமல் தமிழ்நாட்டில் சுகபோக வாழ்வுக்குள் மூழ்கி விட்டிருந்தார்கள். இதனால் தாயகத்தில் நின்றிருந்த அந்த அமைப்புகளின் போராளிகளும் இடைநிலை தளபதிகளும் குழம்பிபோய் அதில் சிலர் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட தொடங்கினார்கள்.

கொள்ளைகளும் சமூகவிரோத போக்கும் அதிகரித்தது. இவர்கள் செய்த சமூகவிரோத போக்குகளால் தாயக விடுதலை இலட்சியம் மீது பொதுமக்கள் வெறுப்பு கொள்ளும் போக்கு தலைதூக்கும் அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தன.

தாயகத்தில் மற்றைய அமைப்புகளின் சில போராளிகள் செய்ய தொடங்கி இருந்த சமூகவிரோத செயல்களும், அதே நேரத்தில் தமிழக மண்ணில் அதே அமைப்புகளின் உறுப்பினர்கள் செய்ய தொடங்கி இருந்த சமூகவிரோத செயல்களும் ஏதோ ஒரு நேர் கோட்டில் சந்திப்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை கண்டுகொண்டது. அதன் பின்னால் இருக்கும் மாயசக்திகளின் நோக்கத்தை புரிந்து கொண்டது.

அந்த நேரத்தில் எல்லா இயக்கங்களும் தமிழகத்தில் ஊடகங்களாலும் பொதுமக்களாலும் விடுதலைப் புலிகள் என்றே குறிக்கப்பட்டார்கள்.

வேதாரண்யத்தில் தமிழக பொதுமகன் வேறு அமைப்பால் சுடப்பட்டாலும் உடனே விடுதலைப் புலிகள் சுட்டார்கள் என்றும் சூளைமேட்டில் இன்னொரு அமைப்பின் தளபதி நிராயுதபாணியான ஆட்டோ ஓட்டுநருக்கு பயந்து ஓடிப்போய் துப்பாக்கி எடுத்து வந்து சுட்ட சம்பவத்தை உடனே சூளைமேட்டில் விடுதலைப் புலிகள் துப்பாக்கிசூடு என்றும் வரிந்து கட்டிக்கொண்டு தமிழின எதிர்ப்பு ஊடகங்கள் வெளியிட்டு தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ தாயகத்துக்கான ஆதரவை நிர்மூலமாக்க முயற்சித்தனர்.

எமது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு முதன்முறையாக இதனை பற்றி அறிவிக்கிறது. எமது அமைப்பின் தனித்தன்மை பற்றி அறிக்கைகளை விடுக்கிறது.

1985 மார்ச் இறுதியில் தமிழக பொது மக்களுக்கு போராளிகள் என்போர் யார்

> **1985 மார்ச் இறுதியில் தமிழக பொதுமக்களுக்கு போராளிகள் என்போர் யார் என்றும் அவர்களின் குணநலன்கள் எப்படியானதாக இருந்தாக வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் அறிக்கைமூலம் சொல்லினர். இந்த அறிக்கையே பின்னர் 'போராளிகளும் பொதுமக்களும்' என்ற தலைப்பில் விடுதலைப் புலிகள் பத்திரிகையின் 1985 மே மாத ஆசிரியர் தலையங்கமாக**

என்றும் அவர்களின் குணநலன்கள் எப்படியானதாக இருந்தாக வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் அறிக்கைமூலம் சொல்லினர்.

இந்த அறிக்கையே பின்னர் 'போராளிகளும் பொதுமக்களும்' என்ற தலைப்பில் விடுதலைப் புலிகள் பத்திரிகையின் 1985 மே மாத ஆசிரியர் தலையங்கமாக வெளிவந்தது.

இப்படியாக அனைத்து பக்கத்தாலும் அழுத்தங்களும் சதிகளும் சூழ்ந்துவந்த ஒரு வரலாற்று தருணத்தில் ஒரு நிலப்பரப்பு இருந்தால் அதில் நின்றபடி போராட்டத்தை பரவலாக்கி மக்களை ஒன்றுதிரட்டலாம் என்று ஒரு முடிவை தலைவர் எடுக்கிறார்.

அதற்கு ஒரு முன்னேற்பாடாக யாழ் பொலீஸ் நிலைய தாக்குதலை அவர் கருதினார். ஆனால் அந்த தாக்குதலின் வீரியமும் வேகமும் அதன்போது மற்றைய இராணுவ முகாம்களில் இருந்து உதவி வருவதை தடுக்க அமைத்த கட்அவுட்களும் இராணுவங்களை முகாம்களுள் முடக்கி தமிழர் நிலம் ஒன்றின் மீட்பாக அந்த தாக்குதல் வெற்றியளிக்க வைத்தது.

மேலும் அந்த தாக்குதல் வெற்றிக்கு பின்னர் இராணுவ ரோந்துகள் அற்ற வீதிகளில் எமது மக்கள் தமிழீழ விடுதலைப்புலி போராளிகளுக்கு வழங்கிய ஆதரவும் ஒத்துழைப்பும் வீடுகளை விட்டு வெளியேவந்த மக்கள் போராளிகளை தமது புதல்வர்களாக, அண்ணன்மாராக, தம்பிகளாக காட்டிய பெரும் பற்றும் விடுதலைப் போராட்டத்தை இன்னொரு தளத்துக்கு நகர்த்தியது.

அது மக்களே புலிகள் புலிகளே மக்கள் என்ற தளம்.

சரி இந்த தாக்குதல் அந்த நாளில் தோல்வியில் முடிவடைந்திருந்தால்...

நிச்சயமாக ஒரு பத்துவ ருடத்து எழும்ப முடியாதவாறு ஒரு பின்னடைவை சந்தித்திருப்போம்.

அதனை இந்திய றோ தலைவர் சந்த சக்ஸசேனாவும், எம்.கே.நாராயணனும் ராஜிவ் காந்தியும் அத்துலக்முதலியும் செய்தே இருப்பார்கள்.

யாழ் பொலீஸ் நிலைய தாக்குதல் என்பது வரலாறு எமக்கு விட்ட சவால் ஒன்றை எமது தலைவரும் போராளிகளும் தளபதிகளும் மக்களின் துணையுடன் வெற்றி கொண்ட நாள்.

வரலாற்றின் ஒரு முக்கிய பொழுது அது.

# இந்திய தேசச் செய்திகள்

## விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வைகோவிற்கு காவல் நீடிப்பு

சென்னையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசிய விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள வைகோவிற்கு யூன் 2ம் திகதி வரை காவல் நீடிக்கப்பட்டுள்ளது.



சென்னை ராணி சீதை மகாலில் சிறீலங்காவின் பாரிய இனஅழிப்புப் போர் நிறைவடைந்ததன் பின்னரான 2009ம் ஆண்டு யூலை 15ம் திகதி 'குற்றம் சாட்டுகிறேன்' என்ற ஆங்கில மொழியில் இருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட புத்தகத்தை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டு பேசினார். இதன்போது அவர் விடுதலை புலிகளுக்கு ஆதரவாக பேசியதாக தேச விரோத வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு எழும்பூர் 13வது குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கு கடந்த 4ம் திகதி விசாரணைக்கு வந்தபோது, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நீதிமன்றம் சென்றிருந்தார். அப்போது வழக்கை விரைவாக விசாரித்து முடிக்க வேண்டும் அல்லது இந்த வழக்கில் தன்னை சிறையில் அடைக்க வேண்டும் என்று வைகோ கோரிக்கை விடுத்தார். அவரை பிணையில் செல்லும்படி நீதிமன்றம் கேட்டுக்கொண்டபோதும் அவர் அதை ஏற்கவில்லை. இதையடுத்து, இந்த வழக்கில் அவரை 15 நாட்கள் சிறையில் அடைக்க நீதவான் கோபிநாத் உத்தரவிட்டார். இதன்படி புழல் சிறையில் அடைக்கப்பட்ட வைகோ, கடந்த 17ம் திகதி எழும்பூர் நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

அப்போது, இந்த தேச விரோத வழக்கை விசாரிக்கும் அதிகாரம் செசன்சு நீதிமன்றத்திற்கு தான் உள்ளது என்பதால், சென்னை மாவட்ட முதன்மை செசன்சு நீதிமன்றத்திற்கு மாற்றி, எழும்பூர் நீதவான் உத்தரவிட்டார். இந்த நிலையில், இந்த வழக்கு சென்னை மாவட்ட முதன்மை செசன்சு நீதிமன்றத்தில் நீதிபதி நசீமாபானு முன்பு கடந்த 27ம் திகதி விசாரணைக்கு வந்தது. விசாரணைகளின் பின்னர் இந்த வழக்கை யூன் 2ம் திகதிக்கு தள்ளி வைத்து நீதிபதி உத்தரவிட்டார்.

## ஆசியாவின் மிகப்பெரிய தேவாலயம் திறப்பு





ஆசியாவின் மிகப்பெரிய தேவாலயம் ஒன்று இந்தியாவின் நாகலாந்தில் கட்டப்பட்டுள்ளது. சுமி பாப்டிஸ்ட் என்றழைக்கப்படும் இத் தேவாலயம் கடந்த 22ம் திகதி நாகாலாந்தின் Zunheboto நகரத்தில் திறக்கப்பட்டது. கடந்த 10 வருடமாக இந்தத் தேவலாயத்திற்கான கட்டுமாணப்பணிகள் இடம்பெற்று வந்தன. சுமார் 2000 பணியாளர்கள் இந்தக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்த தேவாலயம் கட்டுவதற்காக 36 கோடி ரூபா செலவிடப்பட்டது. இது 203 அடி நீளம், 153 அடி அகலம், 156 அடி உயரம் கொண்டுள்ளது.

## ஐ.நா.வுக்கு இந்தியா 1.6 கோடி நிதியுதவி

பதற்றம் நிலவும் நாடுகளில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் தேர்தல்களை நடத்துவதற்காக, ஐ.நா.வின் தேர்தல் விவகாரப் பிரிவுக்கு இந்தியா 2.5 இலட்சம் டொலர்கள் (1.6 கோடி இந்திய ரூபா) நிதியுதவி அளித்துள்ளது.

ஐ.நா.வுக்கான இந்திய முதன்மைச் செயலர் ஈனாம் கம்பீர், இதற்கான காசோலையை ஐ.நா. தேர்தல் விவகாரப் பிரிவு அதிகாரியிடன் கடந்த வாரம் கையளித்தார். இதுகுறித்து ஐ.நா. தெரிவித்துள்ளதாவது, ஐ.நா.வின் தேர்தல் உதவிகளுக்காக, 2.5 இலட்சம் டொலர் நிதியுதவியை இந்தியா தாமாக முன்வந்து அளித்துள்ளது. அந்தத் தொகைக்கான காசோலையை, இந்திய அதிகாரியிடமிருந்து ஐ.நா. தேர்தல் விவகாரப் பிரிவு அதிகாரி கே.ஷேயோடானி பெற்றுக்கொண்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடும் வெயிலுக்கு 4,620 பேர் பலி

இந்தியாவில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் அனல் காற்று மற்றும் கடும் வெயிலுக்கு 4 ஆயிரத்து 620 பேர் பலியாகி உள்ளனர். ஆந்திரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் பலியானோர் எண்ணிக்கை மட்டும் 4 ஆயிரத்து 246 ஆகும். இந்திய மத்திய புவியியல் அமைச்சகம் இந்த புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது. இதன்படி, 2013ம் ஆண்டில் 1443 பேரும், 2014ம் ஆண்டில் 549 பேரும், 2015ம் ஆண்டில் 2071 பேரும், 2016ம் ஆண்டில் 557 பேரும் பலியாகியுள்ளனர்.



## கடவுளும் வங்கி அட்டை எடுப்பார்!

கோயில்களில் உண்டியல் மூலம் பணம் சேகரித்த காலம் இந்த இலத்திரனியல் உலகில் மலையேறிவிடும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பது உறுதியாகிவருகின்றது. இந்தியாவில் மோடி அரசாங்கம் 500, 1000 ரூபா நாணயத் தாள்களை செல்லுபடியற்றதாக அறிவித்தது பொது மக்களுக்கு மட்டுமல்ல, கோவில்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தினந்தோறும் கோடிக் கணக்கான பணத்தை வருமானமாகப் பெறும் திருப்பதி கோவில் இந்த நாணய மாற்றத் தடுப்பால் பெரும் நெருக்கடிக்கு உள்ளானது. பக்தர்கள் 500, 1000 ரூபாய் நாணயத்தாள்களை உண்டியலில் போடுவதால் அதை மாற்ற முடியாமல் திருப்பதி தேவஸ்தான அறங்காவலர்கள் தவித்து வருகின்றனர். ஏற்கனவே, சேகரித்த பணத்தை மாற்றித் தருமாறு அவர்கள் அரசாங்கத்திடம் கோரியிருந்தனர். அதை மாற்ற கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த கால அவகாசம் முடிந்த பின்பும் பக்தர்கள் 500, 1000 ரூபாய் நாணயத்தாள்களை உண்டியலில் போடுவதால், தற்போது சேர்ந்துள்ள 80 இலட்சம் ரூபா பணத்தை எவ்வாறு மாற்றுவது என்பது குறித்து அவர்கள் சிந்தித்து வருகின்றனர். இந்நிலையில், எதிர்காலத்தில் இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படாமல் தடுக்கும் நடவடிக்கையாக, திருப்பதி தேவஸ்தானத்தில் காணிக்கைகளை செலுத்துவதற்காக இலத்திரனியல் பணம் செலுத்தும் இயந்திரங்கள் ஊடாக வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் முறை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வங்கதேச சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இந்தியாவின் சிறப்பு நுழைவிசைவு

இந்தியாவுக்குள் 5 ஆண்டுகளில் எத்தனை முறை வேண்டுமானாலும் வந்து செல்லும் வகையிலான சுற்றுலா நுழைவிசைவு (விசா), வங்கதேச விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் என்று இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை பலப்படுத்தும் வகையிலான சிறப்பு நடவடிக்கையாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா இம்மாதத் தொடக்கத்தில் இந்தியா சென்றிருந்தார். அப்போது, அந்நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு 5 ஆண்டு கால இந்திய விசா வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்தது. இந்நிலையில், அதற்கான அறிவிப்பு தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வங்கதேசத் தலைநகர் டாக்காவில் உள்ள இந்தியத் தூதரகச் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது: 65 வயதுக்கு மேற்பட்ட வங்கதேச குடிமக்களுக்கு 5 ஆண்டு கால இந்திய விசா வழங்கப்பட்டு வருகிறது. தற்போது அந்தச் சலுகை அந்நாட்டு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அவ்வீரர்கள் 5 ஆண்டுகளுக்கு எத்தனை முறை வேண்டுமானாலும், இந்தியாவுக்கு வந்து செல்லலாம். சுற்றுலா விசா அடிப்படையில் அவர்களுக்கு இச்சலுகை வழங்கப்படுகிறது. இதற்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் முன் அனுமதி பெறத் தேவையில்லை வங்கதேசத்தில் உள்ள இந்தியத் தூதரகம் அல்லது துணைத் தூதரகங்களுக்கு நேரில் சென்று விண்ணப்பிக்கலாம் என்று அவர் கூறியுள்ளார்.

## இந்திய ஜனாதிபதியாக ரஜினி காந்த்?



ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக் காலம் முடிவடைய உள்ள நிலையில் அந்த பதவிக்கு நடிகர் ரஜினிகாந்தின் பெயரை பரிந்துரைக்க பா.ஜ.க. மேலிடம் ஆலோசித்து வருவதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரணாப் முகர்ஜியின் பதவிக் காலம் வரும் யூலை மாதத்துடன் முடிவடைய உள்ளது. இந்த நிலையில் அப்பதவிக்கான வேட்பாளர் குறித்து பா.ஜ.க. தீவிரமாக ஆலோசித்து வருகிறது. தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்ற நடிகர் ரஜினிகாந்தை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கலாம் என ஆலோசனை நடத்தி வருகிறது பா.ஜக. ஏற்கனவே, மோடியின் நெருங்கிய நண்பராக ரஜினிகாந்த் இருக்கின்றார். இந்நிலையில் அவரை நிறுத்தும் போது எதிர்ப்பு இருக்காது என்பதும் பா.ஜ.க.வின் கணக்காம்.

## இந்தியாவிற்கு ஐ.நா.வில் வீட்டோ அதிகாரம்!

ஐ.நாவில் வீட்டோ அதிகாரத்துடன் இந்தியா நிச்சயாமக நிரந்தர உறுப்பினராகும் என்று மத்திய வெளியுறத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் கேள்வி நேரத்தின் போது பதில் அளித்த சுஷ்மா சுவராஜ், ஐ நா பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராகும் அனைத்து தகுதிகளும் உள்ளது. அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தியா நிரந்தரமாக இடம் கிடைக்க ஆதரவு தெரிவித்துள்ளன. நிரத்தர உறுப்பினராக இருக்கும் சீனா வெளிப்படையாக எதிர்ப்பை தெரிவிக்கவில்லை.




இந்த முறை இல்லை என்றால் அடுத்த முறை இந்தியா நிச்சயமாக நிரந்தர உறுபினர் ஆகும். நான் அதனை உறுதியாக கூறுகிறேன். அதற்கான முயற்சிகளை நாங்கள் எடுத்து வருகிறோம். பழைய மற்றும் புதிய உறுப்பினர்களுக்கு இடையே வேறுபாடு காட்டுவதை இந்தியா விரும்பவில்லை. தற்போது நிரந்தர உறுப்பினர்களுக்கு இருக்கும் அனைத்து அதிகாரங்களும், பொறுப்புகளும் இந்தியாவுக்கு வழங்க வேண்டும். பாதுகாப்பு சபையில் இருக்கும் நாடுகளும் எப்படி வீட்டோ அதிகாரத்துடன் இருக்கிறதோ, அதே அதிகாரம் இந்தியாவுக்கு தர வேண்டும் ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினராக சேர்க்கப்பட வேண்டியது கடமை என்று அவர் கூறினார்.

## மீண்டும் பிரம்மோஸ் சோதனை

இந்தியா – ரஷ்யா கூட்டுத் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட பிரம்மோஸ் ஏவுகணையை இந்திய கடற்படை கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக பரிசோதித்தது. உலகிலேயே மிகவும் அதிவேக ஏவுகணையாக கருதப்படும் பிரம்மோஸ் ஏவுகணையை, இந்திய இராணுவம் தொடர்ந்து சோதித்து வருகிறது. இந்நிலையில், இந்திய கடற்படையும் அந்த ஏவுகணையை வெள்ளிக்கிழமை பரிசோதித்துள்ளது. இதுகுறித்து இந்திய கடற்படை அதிகாரி ஒருவர் கூறுகையில், வங்காள விரிகுடா கடலில் வைத்து நிலத்தில் உள்ள எதிரியின் இலக்கை தாக்கி அழிக்கும் வகையிலான பிரம்மோஸ் ஏவுகணையை இந்திய கடற்படை ஏவி பரிசோதித்தது. இந்த சோதனை வெற்றிகரமாக அமைந்தது என்று தெரிவித்துள்ளார்.





# மக்ரோனா மரினா?

## அடுத்த பிரெஞ்சு ஜனாதிபதி யார்?

விவேகன்
சோழ.கரிகாலன்
இணைந்து

பிராஞ்சு ஜனாதிபதிக்கான தேர்தல் முதல் சுற்று முடிவடைந்து, யாரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெறாமையால் இரண்டாவது சுற்றுக்கு சென்றுள்ளது. எதிர்வரும் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது நடைபெறவுள்ளது.

11 வேட்பாளர்கள் போட்டியிட்ட முதல் சுற்றுத் தேர்தலின் வாக்குகள் அனைத்தும் எண்ணிமுடிக்கப்பட்டு இறுதியான பெறுபேறுகளைச் உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. 77.77 வீதமான மக்கள் வாக்களித்துள்ள முதல் சுற்றுத் தேர்தலில் எமானுவல் மக்ரோன் 24.01 வீதமான வாக்குகளைப் பெற்று முதலிடத்திலும், மரின் லுபென் 21.3 வீதமான வாக்குகளைப் பெற்று இராண்டாவது இடத்தையும் பிடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர். அத்துடன், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பிரோன்சுவா பிய்யோன் 20.01 வீத வாக்குகளைப் பெற்று ருமான நதீன் மொராேனோ (Nadine Morano) கடுமையாக விமர்சித்துள்ளதுடன், பிரோன்சுவா பிய்யோன் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தோல்விக்கு முற்றுமுழுதாகத் தானே பொறுப்பேற்பதாக தெரிவித்துள்ள முன்னாள் பிரதமர் பிரோன்சுவா பியோன், தனக்கு மிகவும் மோசமான தடைகள் போடப்பட்டதாகவும் இருப்பினும் தொடர்ந்து ஒன்றிணைந்து நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவோம் எனவும் தெரிவித்துள்ளார். தான் ஒரு போதும் மரின் லு பெனிற்கு வாக்களிக்கப் போவது இல்லை என்றும் தேசிய முன்னணிக் கட்சியை உருவாக்கிய ஜோன் மரி லு பென் செய்த கொடூரமான வன்முறைகளைப் பிரான்ஸ் என்றுமே மறக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ள அவர், வேறு தெரிவுகள் இன்றி எமானுவல் மக்ரோனிற்கு வாக்களிக்குமாறு தனது ஆதரவாளர்களிடம் கோரியுள்ளார்.

பதோ, அல்லது, அரசியல் வேறுபாடுகளிற்காக ஓடி ஒளிவதோ பெரும் ஆபத்தானது. நாட்டை அச்சுறுத்தும் பயங்கரவாதம், பிரான்சின் அடிப்படைத் தகமைகளைத் துண்டாடும் தீவிர வலதுசாரிகள் போன்றோர் எங்களின் ஒரு பகுதி மக்களின் மனங்களை மாற்றுகின்றனர். எமது பன்னாட்டு வணிகம் பாதிக்கபப்பட்டால் மேலும் பல்லாயிரக்கணக்கானோர் வேலையிழப்பார்கள். இதற்கெல்லாம் தீர்வாக தீவிர வலதுசாரிகளை முறியடித்து எமானுவல் மக்ரோனிற்கு வாக்களியுங்கள்' என ஜனாதிபதி பிரோன்சுவா ஹொலண்ட் தெரிவித்துள்ளார். அத்துடன், மரின் லு பென் வெற்றி பெற்று பிரான்சின் ஜனாதிபதியானால் அதற்குக் காரணம் வாக்களிக்காத மக்களே என்றும் அவர் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார். அதாவது தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பவர்களினாலேயே மரின் லு பென் வெற்றி பெறுவ

துவப் பிரமுகர்களும் தங்கள் ஆதரவை வெளிப்படையாக தெரிவித்துவருகின்றனர். இதில் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோசியும் ஒருவர். மக்ரோனின் கொள்கைகளுடன் தான் முழுமையாக ஒத்துப் போகவிட்டாலும், தான் எமானுவல் மக்ரோனிற்கே வாக்களிக்கப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

போட்டி வேட்பாளரான ஜோன்-லுக் மெலோன்சோன் தனது ஆதரவு யாரிற்கு என்று வெளிப்படையாகத் தெரிவிக்காத நிலையில், வலதுசாரியான நிக்கோலா சார்க்கோசி, தனது வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



மூன்றாவது இடத்தையும், 19.58 வீத வாக்குகளுடன் ஜோன்-லுக் மெலோன்சோன் நான்காவது இடத்தையும் பிடித்தனர்.

இவற்றைவிட ஆளும் கட்சியான தற்போதை ஜனாதிபதி பிரான்சுவா ஹொலண்ட் பதவி வகிக்கும் சோசலிசக் கட்சி இத்தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது. 1956ம் ஆண்டில் சோசலிசக் கட்சியின் வேட்பாளரான Gaston Defferre மிகவும் மேசமாக 5.01 வீத வாக்குகளைப் பெற்ற பின்னர், மீண்டும் மிகவும் மோசமான வாக்கினைச் சோசலிசக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பெனுவா அமோன் இம்முறை பெற்றுள்ளார். இவர் 6.36 வீத வாக்குகளையே பெற்றிருக்கின்றார்.

மரின் லுப்பன் தலைமையிலான தீவிர வலதுசாரியான தேசிய முன்னணி கட்சி, 2015ம் ஆண்டின் பிராந்தியத் தேர்தல்களில் 27.73 வீத வாக்குகளைப் பெற்றிருந்தனர். எனவே, இத்தேர்தலில் தங்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அதிக வாக்குகளைப் பெற்று முதலிடத்திற்கு வருவார் என்றே எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பு இத்தேர்தலில் நிறைவேறவில்லை. அத்துடன், முதல் சுற்றில் முன்னணிக்கு வருவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட குடியரசுக் கட்சியை (Les Républicains) சேர்ந்த முன்னாள் பிரதமர் பிரோன்சுவா பியோன் தோல்வியைத் தழுவியது அவரது கட்சிக்குள்ளேயே கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. "தோல்வியடையவே முடியாத ஒரு தேர்தலில் வீணாகத் தோற்றுள்ளோம். இந்தத் தோல்வியடைந்த, சக்தியற்ற தலைமை கட்சியை விட்டு உடனடியாக விலக வேண்டும். பிரோன்சுவா பியோனின் தலைமையில் நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தால், அது எங்கள் கட்சியினைக் குழி தோண்டிப் புதைப்பதற்கு ஒப்பானதாகும்" என்று ஐரோப்பியப் நாடாளுமன்ற உறுப்பினரும் குடியரசுக் கட்சியின் முக்கிய பிரமுக

இதேவேளை, ஜனாதிபதி பிரோன்சுவா ஹொலண்ட் ஜனாதிபதி மாளிகையில் இருந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். 'மரின் லு பென் எனும் பேராபத்தைத் முறியடிப்பதற்காக மக்ரோனிற்கு வாக்களியுங்கள்' என அவர் தனது ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். 'சோம்ப்ஸ் எலிசேயின் தாக்குதலிற்கு ஜனநாயகம் ஒன்றே பதில் அளிக்க முடியும். இதனால் மரின் லு பென் எனும் அபாயம் ஜனநாயகத்தால் முறியடிக்கப்படல் வேண்டும்' எனவும் ஜனாதிபதி பிரோன்சுவா ஹொலண்ட் தெரிவித்துள்ளார்.

'இரண்டாம் சுற்றிற்கு தேசிய முன்னணி வந்திருப்பது நாட்டிற்கு மிகவும் ஆபத்தானது. அதைக் கண்டு நாம் அமைதியாக இருப்தற்கான வாய்ப்பு இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ள அவர், அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சோசலிசக் கட்சியின் தலைமை மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் சந்திப்பின் முடிவில் ஒரு மனதாக, சோசலிசக் கட்சியின் முழுமையான ஆதரவை எமானுவல் மக்ரோனிற்கு வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரண்டாவது சுற்றுத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது குறித்து முதல் சுற்றில் தோல்வியைத் தழுவிய வேட்பாளர்கள் தங்கள் ஆதரவாளர்களுக்கு கருத்து வெளியிட்டு வருகின்றனர். அத்துடன் கட்சிகளின் முக்கிய தலைமைத்

**இந்தத் தேர்தல் மரின் லு பென்னுக்கும் எமானுவல் மக்ரோனுக்கும் மிகக் கடுமையான போட்டியாகவே இருக்கப்போகின்றது. தீவிர தேசியவாத கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் கொண்ட வேட்பாளர் மரின் லு பெனுக்கும், அரசியலில் பெரிய அனுபவங்களைப் பெறாத பொருளாதாரத்தில் தாராளமயக் கொள்கையுள்ள வேட்பாளர் எமானுவல் மக்ரோனுக்கும் இடையேயான கடும் போட்டியாக இறுதிச் சுற்று அமையவுள்ளது.**

'முதற்சுற்றுத் தேர்தல், தேசிய முன்னணி வேட்பாளரை இரண்டாம் சுற்றிற்குத் தகுதியாக்கி உள்ளது. வலது சாரி மற்றும் நடுமைக் கட்சிகளின் வேட்பாளர்களை மரின் லூ பென் தோற்கடித்துள்ளார். இது ஒரு அரசியல் நிலநடுக்கம். இந்தப் பெறுபேற்றினையிட்டு நான் கவலையடைகின்றேன். ஆனாலும், இறைமையுள்ள பிரெஞ்சு மக்களின் தெரிவை அப்டியே நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனாலும், மெரின் லூப்பெனின் கொள்கைகள் பிரான்சையும், பிரெஞ்சு மக்களையும், பெரும் ஆபத்தில் தள்ளிவிடும். இந்த நிலையில் பொறுப்புள்ள ஒருவனாக, எமானுவல் மக்ரோனிற்கு நான் இரண்டாம் சுற்றில் வாக்களிப்பேன். ஆனால் அதற்காக நான் மக்ரோனின் கொள்கைகளுடன் முழுமையாக ஒத்துப் போகின்றேன் என்று அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. அதே நேரம் யூன் மாதத்தில் நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், மீண்டும், வலதுசாரிக் கடசி மற்றும் நடுமைக் கட்சியின் வாக்காளர்களைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் பிரெஞ்சு மக்களிற்கு உண்டு என்பதனை நினைவூட்டுகின்றேன். அரசியல் வேறுபாடுகளைக் களைந்து, தீவிர வலதுசாரிகளை முறயடிக்க, இரண்டாம் சுற்றுத் தேர்தலில், அனைவரும் எமானுவல் மக்ரோனின் பின்னால் அணிதிரண்டு, பிரான்சினைச் சூழ்ந்துள்ள ஆபத்தை நீக்குவாம்' என சார்க்கோசி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, தேசிய முன்னணி கட்சி தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான மரின் லூ பென் முக்கிய முடிவு ஒன்றை அறிவித்துள்ளார். தான் தேசிய முன்னணி கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகப்போவதாகவும், இனிமேல் வேட்பாளராக மாத்திரமே செயல்படுவேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

## கப்பி கயிற்றில் தொங்கிய நிலையில் முதியவர்

கிணற்றுக் கப்பிக் கயிற்றில் தொங்கிய நிலையில் முதியவரின் சடலம் சங்கானைப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது. நிச்சாமம் சங்கானை பகுதியினை சேர்ந்த நாகன் தில்லைநாதன் (வயது 74) என்பவரே இவ்வாறு கடந்த 25ம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். இது தற்கொலையா அல்லது விபத்தா என்பது தெரியவரவில்லை.

## மயங்கி விழுந்த கர்ப்பவதி மரணம்

கிராமத்தில் நடந்த சுமுர்த்திக் கூட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கும் போது மூன்று பிள்ளைகளது தாயாரான கர்ப்பிணிப் பெண் ஒருவர் சடுதியாக மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். அவரது உறவினர்களும் அயலவர்களும் அவரை வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச் சென்றபோதிலும் தருமபுரம் வைத்தியசாலையை அடையும் முன்னரே அவரது உயிர் பிரிந்துவிட்டது. இச் சம்பவம் கிளிநொச்சி குமாரசாமிபுரம் பகுதியில் கடந்த 20ம் திகதி இடம்பெற்றுள்ளது. பிரஸ்தாப குடும்பப் பெண் இறக்கும் போது கர்ப்பவதியாக இருந்தமையால் சட்டவைத்திய விசேட வைத்திய நிபுணர் மூலமான பிரேத பரிசோதனையை மேற்கொள்வது அவசியம் என தெரிவிக்கப்பட்டதால் அவரது சடலம் அநுராதபுர வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

## குளத்தில் மூழ்கி சிறுவன் மரணம்

கனகராயன்குளம் குறிசுட்டகுளம் பகுதியில் உள்ள படுகட்டுக்குளத்தில் தவறி விழுந்து 10 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். இச்சம்பவம் கடந்த 21ம் திகதி நடைபெற்றுள்ளது. படுகட்டுக்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு தனது நண்பர்களுடன் குளத்தின் அணைக்கட்டு வழியாக நடந்து செல்லும் போது சறுக்கிவீழ்ந்து குளத்து நீரில் மூழ்கியுள்ளார். இதனையடுத்து சக நண்பர்களான சிறுவர்கள் கிராமத்திற்கு ஓடிவந்து தகவலை தெரிவித்துள்ளனர். இதனையடுத்து கிராமத்தவர்கள் குளத்திற்கு சென்று சிறுவனை மீட்டபோது, சிறுவன் உயிரிழந்திருந்துள்ளார். இச்சம்பவத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்று வரும் குறிசுட்டகுளம் கிராமத்தைச் சேர்ந்த பாலச்சந்திரன் கவிப்பிரியன் (வயது 10) என்ற சிறுவனே பரிதாபகரமாக உயிரிழ ந்துள்ளார்.

## குடும்பத் தகராறில் காயமடைந்தவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு – காத்தான்குடி, செல்வாநகர் கிழக்கு கிராத்தில் குடும்பத்திற்குள் ஏற்பட்ட மேதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நபர் கடந்த 20ம் திகதி இரவு உயிரிழந்துள்ளார். சங்கர் (வயது 35) என்பவரே காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழ்ந்துள்ளார். காத்தான்குடி ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு கிராமத்தின் காளி கோவில் வீதியிலுள்ள மரண வீடொன்றில் கடந்த 19.03.2017 அன்று ஏற்பட்ட மேதலில் ஒரு கர்ப்பிணிப்பெண் உட்பட இரண்டு பெண்களும் ஏழு ஆண்களுமாக 9 பேர் காயமடைந்தனர். செல்வாநகர் கிழக்கு கிராமத்தில் ஏற்பட்ட இந்த குடும்ப சண்டை தொடர்பில் 15 பேர் பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொடருந்து மோதி குடும்பஸ்தர் பலி

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் உள்ள தொடருந்துக் கடவையின் ஊடாக உந்துருளியில் பண்டாரிக்குளம் வீதியைக் கடக்க முயன்ற குடும்பஸ்தர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த யாழ்தேவி தொடருந்துடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த 20ம் திகதி வியாழக்கிழமை மதியம் நடைபெற்றுள்ளது. குறித்த உந்துருளியில் இருவர் பயணித்திருந்த நிலையில் பிரஸ்தாப குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகியுள்ளதுடன் சடலமும் தொடருந்தினால் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. உந்துருளியின் பின் இருக்கையில் அமர்ந்திருந்தவர் விபத்து ஏற்பட இருந்த நிலையில் பாய்ந்து குதித்தமையால் உயிர் தப்பியுள்ளார். இச்சம்பவத்தில் வவுனியா நகரசபை விடுதியில் வசிக்கும் நவலிங்கம் ஜீவராஜ் (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

## விபத்தில் முதியவர் பலி

உந்துருளியும் துவிச்சக்கரவண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் சம்பவம் இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் கடந்த 19ம் திகதி நெடுந்தீவில் இடம்பெற்றுள்ளது. இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த அதே பகுதியைச் சேர்ந்த ஸ்ரீபன் அருளப்பு (வயது –80) என்பவரே உயிரி ழந்தவராவார்.

## விபத்துக்குள்ளான இளைஞன் மரணம்

விபத்தில் படுகாயமடைந்து சுமார் மூன்றரை மாதங்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளைஞர் ஒருவர் கடந்த 28ம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். பளை முல்லையடியை சேர்ந்த பசுபதி வேணுகாந்த் (வயது 24) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார். கடந்த ஜனவரி மாதம் 8ம் திகதி இயக்கச்சியில் இருந்து பளை நோக்கி உந்துருளியில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்த போது, புதுக்காட்டு சந்தியில் உள்ள வளைவில் உந்துருளியை திருப்பும் போது வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள கால்வாய்க்குள் விழுந்துள்ளார். வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதியில் படுகாயமடைந்த இவரை வீதியால் சென்றவர்கள் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர். மேலதிக சிகிச்சைக்காக மறுநாள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர். சுமார் மூன்றரை மாதங்களுக்கு மேல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயரிழந்துள்ளார்.

## தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பெண் சாவு

வயிற்றில் ஏற்பட்டிருந்த கட்டியை அகற்ற சத்திர சிகிச்சை மேற்கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் பத்து நாட்களின் பின் கடந்த 27ம் திகதி உடல் நலக்குறைவு காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிசிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ். சண்டிலிப்பாய் மடத்தடியைச் சேர்ந்த மகேஸ்வரன் றெஜிந்தா (வயது 41) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார். தனியார் வைத்தியசாலை ஒன்றில் குறித்த பெண் தனது வயிற்றில் ஏற்பட்டிருந்த கட்டியை அகற்ற சத்திர சிகிச்சை மேற்கொண்டிருந்துள்ளார். தொடர்ந்து அங்கு சிகிச்சை பெற்றிருந்த நிலையில், உடல் நிலை பாதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். சத்திர சிகிச்சை மேற்கொண்ட தனியார் வைத்தியசாலை மீது மரணமடைந்த பெண்ணின் உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது.

# மக்ரோனா மரினா...

பிரபல தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார். தாம் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர், தலைமைத்துவத்தில் இருந்து விலகிக்கொள்வேன் என முன்பே அவர் குறிப்பிட்டிருந்தார். "நான் சொல்லில் இருந்து செயலுக்கு மாறவேண்டிய அவசியம் வந்துவிட்டது. தேசிய முன்னணி கட்சி தலைமை பொறுப்பில் இருந்து இன்று முதல் விலக்கிக்கொள்கிறேன். நான் இனிமேல் கட்சி வேட்பாளர் மாத்திரம் தான்!" என மரின் லூ பென் குறிப்பிட்டுள்ளார்.



மக்ரோனுக்கான ஆதரவு பெருவரும் நிலையில், மரின் லு பெனின் இந்த அதிரடி முடிவு மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதைப் பொருத்திருந்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனாலும், நடந்து முடிந்த முதற் சுற்றுத் தேர்தலில் தேசிய முன்னணியின் மரின் லு பென்னுக்கு 56 நகரங்களில் ஒரு வாக்குக்கூடக் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது. பெரும்பான்மையாகப் பிரான்சின் தென்மேற்குப் பகுதியில் உள்ள நகரங்களே இவரை முற்றாகப் புறக்கணித்துள்ளனர்.

எனினும், 2012 ஆம் ஆண்டில் 6,42 மில்லியன் வாக்குகளை பெற்ற தேசிய முன்னணி, இம்முறை ஒரு மில்லியன் வாக்குகள் (7.5 மில்லியன்) அதிகமாகப் பெற்றுள்ளது இங்கு கவனிக்கத்தக்கது. 7.5 மில்லியன் வாக்ககளைப் பெற்றிருக்கும் மரின் லு பென், இறுதிச்சுற்றுத் தேர்தலில், 10 மில்லியன் வாக்குகளை மட்டுமே பெறும் வாய்ப்பு உள்ளதென பிரான்சின் உள்நாட்டு அமைச்சர் மனுவல் வால்ஸ் தெரிவித்துள்ளார். ஆகவே, இந்தத் தேர்தல் மரின் லு பென்னுக்கும் எமானுவல் மக்ரோனுக்கும் மிகக் கடுமையான போட்டியாகவே இருக்கப்போகின்றது.

தீவிர தேசியவாத கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் கொண்ட வேட்பாளர் மரின் லு பெனுக்கும், அரசியலில் பெரிய அனுபவங்களைப் பெறாத பொருளாதாரத்தில் தாராளமயக் கொள்கையுள்ள வேட்பாளர் எமானுவல் மக்ரோனுக்கும் இடையேயான கடும் போட்டியாக இறுதிச் சுற்று அமையவுள்ளது.

மரின் லு பென் வெற்றி பெற்று பிரான்சின் முதல் ஜனாதிபதி என்ற பெருமையைப் பெறுவாரா? அல்லது எமானுவல் வெற்றி பெற்று பிரான்சின் முதல் இள வயது ஜனாதிபதி என்ற பெருமையைப் பெறுவாரா?

மக்கள் எதிர்பார்ப்பதுபோல் இப்போது ஜனநாயகத் தேர்தல் முடிவுகள் அமைவதில்லை. எதிர் வரும் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டு மணிக்குத் தெரிந்துவிடும், பிரான்சு நாட்டை அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஆளப்போகின்றார்கள் யார் என்பது.

# உறங்கும் இராச....

ஈழத்தீவின் அரசியலைக் கண்ணுக்குள் எண்ணெய்யை ஊற்றுக் கொண்டு உன்னிப்பதாக அவதானித்து வரும் மேற்குலக இராசதந்திரிகளின் முன் இப்பொழுதுள்ள மிகப் பெரும் சவால் மகிந்தருக்கு ஆதரவான அரசியல் அலை தென்னிலங்கையில் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்துவதுதான். இதற்காக இப்பொழுது மேற்குலகம் கையில் எடுத்துள்ள யுக்தி தான் மைத்திரி - ரணில் அரசாங்கத்தின் மீதான நெருக்கடிகளைக் குறைப்பது. இந்த யுக்தியின் வெளிப்பாடாகவே கடந்த பங்குனி மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு இரண்டாண்டு கால அவகாசத்தை மேற்குலகம் வழங்கியது. இதே யுக்தியின் வெளிப்பாடுதான் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை மீளளிப்பதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவும்.

ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெறுவதற்கான விண்ணபத்தைக் கடந்த ஆண்டின் முற்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்திடம் சிறீலங்கா அரசாங்கம் சமர்ப்பித்த பொழுதே இப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் எவ்வளவுதான் தலைகீழாக நின்றாலும், தான் நினைத்ததையே ஐரோப்பிய ஒன்றியும் செய்யும் என்பது பெரும்பாலான தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கு தெரியும். ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை விவகாரத்தில் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் பலர் அலட்டிக் கொள்ளாமல் இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

அப்படியிருந்த பொழுதும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஜி.எஸ்.பிளஸ் வரிச்சலுகை கிடைப்பதைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளில், பிரித்தானியா, டென்மார்க், பிரான்ஸ், யேர்மனி போன்ற நாடுகளில் தனிப்பட்ட ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் சில செயற்பாட்டாளர்கள் ஈடுபட்டார்கள். தாம் சவால் விடுப்பது முழு உலகையும் தனது பக்கம் வளைத்து வைத்திருக்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக என்று தெரிந்த பொழுதும் கூட இவர்கள் யாரும் சளைத்து விடவில்லை. பெருமுதலாளிகளின் ஊடகங்களில் குந்தியிருந்து உழுத்துப் போன பூகோள அரசியல் கதைகளும், வரண்டு போன இடதுசாரி வாதக் கருத்துக்களையும் பேசும் வீண்பேச்சு விண்ணர்களுக்கு மத்தியில் இப்படியான செயற்பாட்டாளர்கள் எடுத்த முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

இவர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியீட்டவில்லை என்பது வேறு கதை. இவர்களின் அழுத்தங்களை மீறி ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தின் நானு?ற்று முப்பத்தாறு உறுப்பினர்களைத் தன் பக்கம் சிறீலங்கா அரசாங்கம் வளைத்துக் கொண்டமையும், அவர்களின் ஆதரவுடன் கடந்த 27.04.2017 அன்று நடைபெற்ற ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெறும் வாக்கெடுப்பில் அது வெற்றி பெற்றமையும் வேறு கதை.

மறுபக்கத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து, இவ்விடயத்தில் சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தின் நூற்றுப் பத்தொன்பது உறுப்பினர்கள் எடுத்தமை ஒரு விதத்தில் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றிதான். அதாவது ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எழுநூற்று ஐம்பத்தொரு உறுப்பினர்களில் ஐம்பத்தெட்டு விழுக்காடு பேரின் ஆதரவை சிறீலங்கா அரசாங்கத்தால் பெற முடிந்துள்ளது என்றால், அதே பாராளுமன்றத்தின் பதினாறு விழுக்காடு உறுப்பினர்களின் ஆதரவை ஒரு அரசாக அல்லாது, தனித்து நின்றும், அமைப்பு ரீதியாகவும் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பெற்றிருப்பதானது, அவர்கள் எல்லோரும் தமிழீழத்தின் உண்மையான தூதுவர்களாக செயற்பட்டுள்ளார்கள் என்பதையே உணர்த்துகின்றது.

உலகின் மூலை முடுக்கெங்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்குத் தூதரகங்கள் உள்ளன. அதே தூதரகங்கள் அமைந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும், அத் தூதரகங்களில் பணிபுரியும் சிங்கள இராசதந்திரிகளை விடப் பன்மடங்கு அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவருமே தமிழீழத்தின் இராசதந்திரிகள் என்ற பாத்திரத்தை வகிக்கத் தொடங்கினால் என்ன நடக்கும் என்று நினைத்துப் பாருங்கள்!

இதுதான் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை விவகாரத்தில் ஒரு சில செயற்பாட்டாளர்கள் எடுத்த முயற்சியின் விளைவாகத் தமிழர்களுக்கு ஆதரவாக நூற்றுப் பத்தொன்பது ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்த சம்பவம் வெளிப்படுத்தும் செய்தியாகும்.

கடந்த இதழில் வெளியான

**தேசத்தின் சுமை தாங்கிகளுக்கான ஒரு சிறு பதிவு**

ஆக்கத்தை கலாநிதி சேரமான் அவர்களே எழுதியிருந்தார். தவறுதலாக பெயர் விடுபட்டுவிட்டது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். (ஆ-ர்)

# அன்னை பூபதியின் 29வது ஆண்டு நினைவேந்தலும், நாட்டுப்பற்றாளர்கள் நினைவுகூரலும்

பிரான்சு தமிழ்ப்பெண்கள் அமைப்பு மற்றும் ஒன்லிசூபுவா தமிழ்ச் சங்கமும் இணைந்து தமிழீழத் தாயவள் அன்னை பூபதி அம்மா அவர்களின் 29 வது ஆண்டினையும், நாட்டுப்பற்றாளர் நினைவையும் கடந்த 22.04.2017 சனிக்கிழமை பரிசின் புறநகர் பகுதியில் ஒன்றான ஒன்லி சூபுவா நகரத்தில் நினைவு கூரப்பட்டது.



தாயவள் அன்னை பூபதியம்மா அவர்களின் திருவுருவப்படத்திற்கு ஈகைச்சுடரினை 12.10.1996ல் கொக்குவில் பகுதியில் வீரச்சாவைத்த ழுவிக் கொண்ட கப்ரன் மணிமகனின் தாயார் அவர்கள் ஏற்றி வைக்க அவரைத் தொடர்ந்து, 31.05.2015ல் நாட்டுப்பற்றாளராக மதிப்பளிக்கப்பட்ட நாட்டுப்பற்றாளர் சிவராசா அவர்களின் திருவுருவப்படத்திற்கு அவரின் துணைவியார் அவர்களும், நாட்டுப்பற்றாளர் மாணிக்கவாசகம் ஜெயசோதி அவர்களின் திருவுருவப்படத்திற்கு 01.03.2009ல் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை வினிதரனின் சகோதரரும், நாட்டுப்பற்றாளர் பிரான்சிஸ் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மணிமகனின் தந்தையாரும், தேசவிடுதலைப் பற்றாளராக மதிப்பளிக்கப்பட்ட பிரெஞ்சுப் பெண்மணி மடம் போலா அவர்களின் திருவுருவப்படத்திற்கு வீரவேங்கை யாழ் நம்பியின் சகோதரி அவர்கள் ஈகைச்சுடரினை ஏற்றி வைத்திருந்தனர்.

தமிழ்ப்பெண்கள் அமைப்பின் உருவாக்கத்தில் உருவாகியிருந்த அங்கையற்கண்ணி இசைக்குழு மீண்டும் புதிய இளையகலைஞர்களை உள்வாங்கி எழுச்சிப்பாடல்களை வழங்கியிருந்தனர். இவர்களுக்கு தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் உறுதுணையாக இருந்தமைக்கு தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால் நன்றி தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினரின் சிறப்புரையும் இடம் பெற்றது. நிகழ்வில் ஒன்லி சூபுவா மாநகர உதவி முதல்வர் மற்றும் முக்கிய மானவர்கள் கலந்து கொண்டதோடு உதவி முதல்வர் உரையாற்றியுமிருந்தார். இலங்கை தீவிற்கு தான் 1995ல் சென்றிருந்ததையும் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பாகுபாடுகளும், உயிர்பறிப்புகள் பற்றி தான் அறிவேன் என்றும் புலம்பெயர்ந்து வாழ்ந்த



போதும் உங்கள் மண்ணையும் மக்களையும் கலைகலாச்சாரத்தையும் மறந்து விடாது பேணிப்பாதுகாப்பதையிட்டு பெருமையும் மகிழ்சியும் அடைவதாகவும், நம்பிக்கையிழக்காது தொடர்ந்து உங்கள் பணியை செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார்.





## நினைவு தூபி திரை நீக்க நினைவேந்தலுக்கான அழைப்பு!

தமிழீழ கனவுகளை நெஞ்சில் சுமந்து காற்றோடு கலந்த எம் மண்ணின் மைந்தர்களை நினைவுகூறும் முகமாக கார்ஜ்–சார்சல் தமிழ் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க சார்சல் மாநகர சபை உதவியுடன் நிறுவப்பட்ட மாவீரர் நினைவு தூபி திரை நீக்கும் நிகழ்வு 17–05–2017 நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு சார்சல் நகர பிதா சிறப்பு வருகையாளர் ஆகவும் அவரோடு இன்றய பல பிரஞ்சு அரசியல் பிரமுகர்களும் கலந்து நினைவேந்த உள்ளார்கள். தமிழ்ச்சங்க மாணவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சிகளும், முள்ளிவாய்க்கால் நினைவாக இறுதி யுத்த காலத்தில் எமது மக்கள் உணவாக அருந்திய இலைக்கஞ்சி உணவு வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

எங்கள் துயர்க்காலத்தை என்றும் மறக்காது நினைவு கூர அனைவரையும் உரிமையடன் அழைக்கின்றோம்.

இடம்:நெல்சன் மண்டேலா விளையாட்டு மைதானம்,

Centre Sportif Nelson Mandela

Avenue Paul Langevin, 95200 Sarcelles

காலம்: 17.05.2017 நேரம்: பிற்பகல் 2.00 மணி

– கார்ஜ்–சார்சல் தமிழ் சங்க நிர்வாகம்

# Gien பிராங்கோ தமிழ்ச்சங்கத்தின் 21வது ஆண்டு விழா

பிரான்சின் Gien மாநகரத்தில் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களால் 1995களில் ஆரம்பிக்கப்பட்ட பிரான்கோ தமிழ்ச்சங்கம் அதன் உப தமிழ்ச்சோலை மாணவர்களும் இணைந்து தமது 21 வது ஆண்டினை கடந்த 16.04.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்பாக கொண்டாடினர். ஆரம்ப நிகழ்வாக Gien மாநகர உதவி முதல்வர் அவர்கள் மாணவர்களால் மலர் செண்டு கொடுத்து வரவேற்கப்பட்டு பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. பொதுச்சுடரினை உதவி முதல்வரும் அவருடன் தமிழ்ச்சங்க தலைவர் திரு. வ. ரமேஸ்குமார் அவர்களும், தமிழ்ச்சோலை நிர்வாகி திரு. ராமேஸ்வரன் அவர்களும் ஏற்றிவைத்தனர். அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து பிரெஞ்சு தேசியக்கீதம் இசைக்கப்பட்டு மாணவர்களால் அது பாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலுடன் மாணவர்களின் ஆக்கங்கள் நடனம், கவிதை, பேச்சு, திருக் குறள் , நாடகம் கோலாட்டம், சுரத்தட்டு இசை என்ற கலைவடிவில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. தமிழ்ச் சோலை தலைமைப் பணியகத்தின் சார்பாக திரு. ஈசன் அவர்கள் உரையாற்றியிருந்தார்.













# ஈழப்பிரச்சினையை புதிய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யும் ஆங்கில அரசறிவியல் நூல் !

கலாநிதி A.R சிறீஸ்கந்தராஜா எழுதிய இலங்கையில் அரசாட்சியும், அரசியலும்: உயிரின அரசியலும், பாதுகாப்பும் என்று தமிழில் பொருள்படும் Government and Politics in Sri Lanka: Biopolitics and Security என்ற ஆங்கில மொழியிலான அரசறிவியல் நூல் வெளியாகியுள்ளது.

அரசறிவியல், பன்னாட்டு அரசறிவியல், சட்டம் ஆகிய துறைகளில் முதன்மையான பன்னாட்டுப் புலமைசார் வெளியீட்டகமாகத் திகழும் Routledge நிறுவனத்தின் வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

பிரஞ்சுத் தத்துவமேதை மிசேல் பூக்கோ (Michel Foucault) அவர்களால் 1976ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட biopolitics எனப்படும் உயிரின அரசியல் என்று தமிழில் பொருள்படக்கூடிய அரசறிவியல் கருத்துருவாக்கத்தை ஈழப்பிரச்சினையுடன் பொருத்தி, சனநாயகத்தின் பெயரில் இலங்கையில் இயங்கும் பௌத்த-சிங்கள இனநாயக ஆட்சிமுறை பற்றிய புதுமையான பார்வையை இந்நூல் முன்வைக்கின்றது.

1948 இல் ஈழத்தீவை விட்டுப் பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சி அகன்ற பின்னரான கடந்த அறுபத்தொன்பது ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையின் பௌத்த-சிங்கள ஆட்சியாளர்களால் அமுல்படுத்தப்பட்ட மலையகத் தமிழர்களின் குடியுரிமைப் பறிப்புத் தொடக்கம் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு உள்ளடங்கலாக வவுனியா வதைமுகாம் கொடூரங்கள் வரையான பதிவுகளை உயிரின அரசியல் என்ற கண்ணோட்டத்தில் இந்நூல் அலசி ஆராய்கின்றது. அத்தோடு சமாதானம் என்பது யுத்தத்தின் இன்னுமொரு வடிவம் என்ற மிசேல் பூக்கோவின் கருத்துருவாக்கத்தை இலங்கைத் தீவின் அறுபத்தொன்பது ஆண்டுகால அரசாட்சி முறையோடும், அரசியலோடும் பொருத்தி, எவ்வாறு சட்டத்தையும், கலகங்களின் பெயரிலான இனவன்முறைகளையும், சமாதானப் பேச்சுக்களையும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தின் ஓர் அங்கமாக சிறீலங்காவின் பௌத்த-சிங்கள ஆட்சியாளர்கள் முன்னெடுத்தார்கள் என்பதையும் இந்நூல் நுணுகி ஆராய்கின்றது.




கடந்த 21.04.2017 அன்று மின்னியல் நூல் (e-book) வடிவில் வெளியிடப்பட்ட இந்நூல், வரும் 05.05.2017 அன்று அச்சுவடிவில் வெளிவருகின்றது.

இந்நூலை மின்னியல் வடிவில் இப்பொழுதே பெறுவதற்கும், அச்சுவடிவிலான நூலின் பிரதிகளுக்கான முற்பதிவுகளை மேற்கொள்வதற்கும் பின்வரும் இணையத்தள இணைப்பின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

https://www.routledge.com/Government-and-Politics-in-Sri-Lanka-Biopolitics-and-Security/Rajah/p/book/9781138290976

## விடுதலையின் வீச்சும்....

போராளிகளின் இரு அணிகளும் கதைத்து தாக்குதல் செய்யக்கூடியவாறு நிலைகளை அமைத்தன. பல வருடங்களாய் பயிற்சியிலேயே கைதேர்ந்த சகிப்புத்தன்மையும் பசியிருப்பும் நித்திரை விழிப்பும் கொண்ட, பல களங்கண்ட போராளிகளின் ஒரு அணித்தலைவி முடியரசி. எதிரியிடம் தோற்றுப் போகும் இதயம் அங்கு யாருக்குமில்லை. துப்பாக்கிச் சுடுகுழல்களை மதிலின் மேலால் நீட்டியபடி விழிப்புடன் இருந்தனர்.

எதிரி வந்து கொண்டிருக்கின்றான். போராளிகள் தற்காலிகமாக நிலையெடுத்த கோயிலை அதிகாலையொன்றில் நெருங்கிக் கொண்டிருக்கின்றான். நன்கு தெரிந்து கொண்டபின்தான் வந்துள்ளான். வாய்ப்பான நகர்வுகளில் முன்னைாயத்தத்துடன் எதிரிகோவிலை நெருங்கிவிட்டனன.

சிறுத்தைகள் தங்கள் கைகளில் இருந்த சுடுகருவிகளால் எதிரியின் முயற்சியை முறியடிக்கத் தொடங்கினர். ஆயுதபலத்தை அதிகம் கொண்ட எதிரி டாங்கியை முன்னிறுத்தி மதில்களை தகர்த்துக் கொண்டிருந்தான். எதிரி ஏவிய சுடு சன்னங்கள் போராளிகளின் வாடிய உடல்களைத் துளைத்தன. மதில் சுவர்களின் உடைவுச் சரிவுகளில் பலபோராளிகள் வீரச்சாவடைந்தனர். மூர்க்கமான சண்டையால் இரு தரப்பிலும் யுத்தப்பலியெடுப்பு தாராளமாய் நிகழ்ந்து கொண்டிருந்தது. எதிரியும் செத்து விழுந்து கொண்டிருந்தான். சண்டை செய்தபடியே, எதிரியை நோக்கி துப்பாக்கிகளைப் பிடித்தபடியே 14 போராளிகள் வீரச்சாவடைந்து விட்டார்கள்.

மூன்று போராளிகள் உயிருடன் நிற்கின்றார்கள். முடியரசி அணித்தலைவி பல்லவி, நிலா எதிர்த்துநின்று போராடி பட்டிபோல் வந்துநிற்கும் எதிரிப்படையை திருப்பமுடியாத நிலை. நீண்ட நேரம் சண்டைசெய்ய முடியாது. ரவைகளும் கைக்குண்டுகளும் தீர்ந்து போயின. டாங்கியின் நெருப்புப்பறந்த சூடுகளில் இருந்து தப்புவது மிகக்கடினமே.

மதிலில் பின்சுவரில் டாங்கிச் சூடுகளால் பெரிய துளையொன்று ஏற்பட்டிருந்தது. அதனு?டாக மூவராவது தப்பிச்செல்வது தான் சரி என்று முடிவுசெய்து அடுத்த காலடியை வைக்கமுன் நிலம் அதிர்ந்தது. சரமாரியான டாங்கியடியால் கோபரத்தின் பெரும் பகுதி உடைந்து வீழ்ந்தது.

அந்த உடைவுக்குள் பல்லவி சிக்கிக்கொண்டாள். பாரிய பாறைத் துண்டொன்று பல்லவியின் இடுப்பின் கீழான முழுவுடலையும் நைத்துப்போட்டதது. இடுப்பின் முன்பகுதி தனித்து வெளியே தெரிய பல்லவி பற்களை இறுகக் கடித்தபடி தவித்தாள். நீர் வழிந்த கண்கள் முடியரசியைப் பார்த்தன. ஓராள் எண்டாலும் உயிரோட போய்ச்சேரவேணும். 15 பேரின்ர வீரச்சாவுகளும் நடந்த விதம்பற்றிச் சொல்ல உயிரோட போகவேணும். பல்லவியின் வலியுறுத்தலால் நிலாவை துவாரத்தினூடாக தள்ளியபடி பாய்ந்து வெளியே விழுந்து ஓடினாள். பல்லவி வெடித்துக் கொண்டாள்.

ஓடிச்சென்றவர்களை சன்னங்கள் துரத்தின. நிலத்தோடு தவழ்ந்து வேகமெடுத்தார்கள் அந்தக் கணத்தில் முடியரசிக்குச் சூடுபட்டது. 'நிலா நான் பாதுகாப்புச் சூடுகதை தாறன் நீ ஓடு... ஓடு... எங்கடயாக்களப் போய் சந்தி. நிக்காத நிலா. நீ ஓடு... என்னால வர ஏலாதடி ஓடு...'

அவசியமுணர்ந்த நிலா எழுந்தோட முடியரசி முன்னேயிருந்து வேட்டுத்தீர்த்தவர்களிற்கு தன்னிடமிருந்த மிச்ச ரவைகளால் வேட்டுத் தீர்த்தாள். வேகமெனப் பறந்த நிலாவின் கால்கள் வெட்டை கழிந்து காட்டுப் பகுதியில் தள்ளாடி நின்றன. திரும்பிப் பார்த்தாள்... நிலாவின் கைக்குண்டின் வெடிச்சத்தமும் முடியரசி விழுந்த இடத்தில் பாரிய புகை மண்டலம் தெரிந்தது.

- ஆனதி

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

### சீனாவின் பொருளாதாரச் சாதனை! கடன்களால் இன்னொரு வேதனை

சீனாவின் முதல் காலாண்டு பொருளாதார வளர்ச்சி அரசு நிர்ணயித்த இலக்கையும் விஞ்சி சாதனை படைத்துள்ளதாக சீனாவின் தேசிய புள்ளியியல் அமைப்பு (என்.பி.எஸ்.) தெரிவித்துள்ளது. உள்கட்டமைப்புத் திட்டங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடு அதிகரித்ததுடன் ஏற்றுமதியும் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்தது. இதன் காரணமாக, இந்த ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான முதலாவது காலாண்டில் சீனப் பொருளாதாரம் 6.9 சதவீதம் என்ற ஆரோக்கியமான வளர்ச்சியை எட்டியது.



அதன்படி, முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.63 இலட்சம் கோடி டொலரை தொட்டுள்ளது. முதல் காலாண்டில் எட்டப்பட்ட பொருளாதார வளர்ச்சி என்பது, முழு ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவான 6.5 சதவீதத்தை காட்டிலும் அதிகம். அதேபோன்று, 2016ம் ஆண்டின் நான்காவது காலாண்டில் (ஒக்டோபர்–டிசம்பர்) எட்டப்பட்ட பொருளாதார வளர்ச்சியான 6.8 சதவீதத்துடன் ஒப்பிடும்போதும் இது அதிகம். கடந்த சில ஆண்டுகளாக சீனாவின் ஏற்றுமதி சரிவைக் கண்டு வந்த நிலையில், இந்த ஆண்டின் முதல் காலாண்டில், யுவான் கரன்ஸி மதிப்பு அடிப்படையில், ஏற்றுமதி கணிசமான ஏற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

இரண்டாம் காலாண்டைப் பொருத்தவரை, சீனப் பொருளாதாரத்தின் வளர்ச்சி நிலையானதாகவும், வலிமையானதாகவும் இருக்கும். 2017–ஆம் ஆண்டின் தொடக்கம் நம்பிக்கை தருவதாக அமைந்தது. முழு ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி இலக்கை எட்ட வலுவான அடித்தளம் இடப்பட்டுள்ளது என்று சீனாவின் தேசிய புள்ளியியல் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதுஇவ்வாறிருக்க, சீனாவின் கடன் தொகை கடந்த 10 ஆண்டுகளில் இரு மடங்கு அதிகரித்துள்ளது கவலையளிப்பதாக உள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எப்) தெரிவித்துள்ளது. 2017ம் ஆண்டுக்கான உலக நிதி உறுதித்தன்மை தொடர்பான அறிக்கையை சர்வதேச நிதியத்தின் நிதி மற்றும் மூலதன சந்தை இயக்குனர் டோபியாஸ் அட்ரின் அண்மையில் வெளியிட்டு கூறியதாவது: உலக பொருளாதார வளர்ச்சியில் சீனாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. ஆனால் கடந்த 10 ஆண்டு காலத்தில் மட்டும் சீனாவின் கடன்தொகை 200 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த அளவுக்கு சீனாவுக்கு கடன் இருப்பது அபாயகரமானது. சீனாவில் செல்வச்செழிப்பு மறைந்து அதிகமான கடன் ஏற்பட்டுள்ளது கவலையளிக்கிறது. அந்நாட்டில் கடந்த 2008 முதல் கடன் மிகவும் அதிகரித்து வருகிறது. சீனாவில் ஒருங்கமைப்பாளர்கள் இடையே ஒருங்கிணைப்பு உள்ளது. கடன் தொகை தொடர்பாக சம்பந்தபட்ட நிர்வாகம் விழிப்புடன் செயல்படும் என நம்புகிறேன் என அட்ரின் தெரிவித்தார்.

### இந்திய மாம்பழ இறக்குமதிக்கு அவுஸ்திரேலியா அனுமதி

அவுஸ்திரேலியாவுக்கு மெக்சிகோ, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் மாம்பழங்களை ஏற்றுமதி செய்து வருகின்றன. மாம்பழ விளைச்சலில் படிப்படியாக முன்னேறிவரும் இந்தியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு மாம்பழங்களை ஏற்றுமதி செய்து வருகின்றது. இந்த நிலையில், முதன்முறையாக மாம்பழங்களை அவுஸ்திரேலியாவுக்கும் ஏற்றுமதி செய்ய இந்திய நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

அவுஸ்திரேலியாவில் உள்நாட்டு மாம்பழ பருவகாலம் ஓய்ந்த பின்னர் இந்தியாவில் விளையும் அல்போன்ஸா, கேசர் போன்ற உயர்வகை மாம்பழங்களை தங்களது நாட்டில் இந்தியா சந்தைப் படுத்திக் கொள்ள கொள்கை அளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியா மாம்பழ வர்த்தக கூட்டமைப்பின் தலைமை செயல் அதிகாரி ரொபர்ட் கிரே குறிப்பிட்டுள்ளார்.



எனினும், அவுஸ்திரேலியாவின் உணவுப்பொருள் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டு துறையின் விதிமுறைகளுக்கு ஏற்ப, மரத்தில் விளையும் காலத்தில் இருந்து, பறித்து ஏற்றுமதி செய்யப்படும் நிலைவரை இந்திய ஏற்றுமதியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் ஒழுங்காக பின்பற்றப்படுகிறதா? என்பதை முறையாக ஆய்வு செய்த பின்னர், இந்தியாவில் இருந்து மாம்பழங்களை இறக்குமதி செய்ய தடை ஏதுமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, கருத்து தெரிவித்துள்ள இந்தியாவை சேர்ந்த பிரபல ஏற்றுமதியாளர் ஒருவர், அவுஸ்திரேலியாவுக்கு இந்திய மாம்பழங்களை ஏற்றுமதி செய்வது தொடர்பாக சில ஆண்டுகளுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டது. ஆனால், மாம்பழங்களின் தரம் குறித்து பல்வேறு நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளையும் அவுஸ்திரேலிய அரசு விதித்திருந்ததால் ஏற்றுமதி செய்யும் திட்டம் கிடப்பில் போடப்பட்டது என தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு சுமார் 50 ஆயிரம் தொன் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஒரு கதை

## தீர விசாரித்தறிவதே உண்மை

24 வயது வாலிபன் தொடருந்தின் சாளரம் (ஜன்னல்) வழியே பார்த்து கத்தினான். "அப்பா இங்கே பாருங்கள்.... மரங்கள் எல்லாம் நமக்கு பின்னால் ஓடுகின்றன..!" என்று. அவனருகில் இருந்த அவனது அப்பா சிரித்துக்கொண்டார்.

ஆனால் அவர்கள் அருகில் இருந்த இளம் தம்பதியினர் அவனைப் பார்த்து பரிதாபப் பட்டுக்கொண்டனர். மறுபடியும் அந்த வாலிபன் கத்தினான். "அப்பா மேலே பாருங்கள்..., மேகங்கள் நம்மோடு வருகின்றன..." என்றான்.



இதைக்கேட்டு தாங்க முடியாத தம்பதியினர் வாலிபனின் தந்தையிடம் "நீங்கள் ஏன் உங்கள் மகனை ஒரு நல்ல மருத்துவரிடம் காட்டக் கூடாது" என்றனர்.

அதற்கு அந்த வயதான அப்பா சிரித்துக் கொண்டே சொன்னார். "நாங்கள் மருத்துவரிடம் இருந்துதான் வந்து கொண்டிருக்கிறோம். என் மகன் பிறவிக் குருடு. இன்றைக்கு தான் அவனுக்கு பார்வை கிடைத்தது..." என்றார்.

**குறிப்பு: கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரித்தறிவதே உண்மை. சம்பவங்களை வைத்து மற்றவர்களை எடைபோட முனைந்தால் நாம் உண்மையை இழந்துவிடலாம். சில நேரங்களில் தீர விசாரித்தறியும் உண்மை நம்மை ஆச்சிரியப்படவும் வைக்கலாம்.**

ஒரு விதை

## விடுதலையின் வீச்சும் வீரமரணங்களும்

1995 இன் மிக அவலமான நாட்கள் அவை. வீரச்சாவுகளையும் அவலச்சாவுகளையும் தாங்கித் தாங்கி நகர்ந்து கொண்டிருந்தது காலம். யாழ்ப்பாணத்தில் இருந்த மக்கள் கிளாலிக் கடல் நீரேரியூடாக வன்னியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகளின் போரணிகள் முன்னேறிவந்த எதிரியுடன் மறிப்புப் போரிட்டுக் கொண்டிருந்தன.

இயலுமானவரையிலும் நின்றுபிடித்து இயலாதநிலை ஏற்படும்பொழுது பின்வாங்கி மீண்டும் மறித்துப் போரிட்டு, இயலும்வரை நின்றுபிடித்து. இயலாநிலை வந்தபின் பின்வாங்கி மீண்டும் தயாராகி மீண்டும் மறிப்புப் போரிட்டு...

அப்படியான நாட்களில் ஒன்றை யாழ்ப்பாணம் சித்தங்கேணிக் கோயிலடி எதிர்கொண்டது. உணவு, உடை, உறக்கம், உறவுகள் எல்லாமும் மறந்த நாட்கள் அவை. சிறுசிறு அணிகளாகப் பிரிந்து, பிரிந்து நின்றார்கள் போராளிகள். எந்த அணி என்ன நிலையில் எங்கே என்று ஒருவருக்கொருவர் தொடர்பற்று நின்றார்கள். ஆயினும் எல்லோருமே இயலுமானவரை எதிரியின் முன்னேற்றத்தைத் தடுத்துச் சமரிட்டார்கள்.

கைகளில் அகப்பட்ட தேங்காய், பூசனி, கத்தரி, தக்காளி, என்று எவற்றையேனும் சாப்பிட்டு, எதிர்ப்பட்ட குட்டைகளிலும் கிணறுகளிலும் நீர்குடித்து, வாய்ப்பான பற்றைகளுள் மறைந்திருந்து, அங்கேயே சிறுதூக்கம் கொண்டு, வேறெதையும் நினைக்கக்கூட அவகாசமில்லாத அவசரப் பொழுதுகள்.

சித்தங்கேணிக் கோவில் வளாகம் முன்னும் பின்னுமாய் ஓரணிக்குத் தெரியாமல் இன்னொரு அணியும் அங்கே வந்துநின்றது. ஆண் பெண் போரணிகளை உள்வாங்கி உயர்த்த கோபுரத்துடன் நின்றது கோவில். கோவிலின் சுற்றுமதிலைச் சுற்றி வெளியே வந்தால் எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டால் உயிருடன் தப்பிச்செல்வது என்பது முயற்கொம்பே. எதிரியும் இலகுவில் இவர்களை நெருங்கிவிட இயலாது ஆபத்தான நிலையெடுப்பு.

தொடர்ச்சி 16ˆ பக்கம்

ஒரு குறள்

அறத்துப்பால் – நடுவு நிலைமை

தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.



**பகைவர், அயலோர், நண்பர் எனப்பகுத்துப் பார்த்து ஒருதலைச் சார்பாக நிற்காமல் இருத்தலே நன்மை தரக்கூடிய நடுவுநிலைமை எனும் தகுதியாகும்.**

ஒரு நகைச்சுவை

## கணவனும் மனைவியும்

நாற்பது வருடம் வாழ்ந்து முடித்த கணவனும் மனைவியும் அதை கொண்டாடும் விதமாக நன்பர்களுக்கு ஒரு விருந்து கொடுத்தனர். விருந்தில் கலந்து கொண்ட அனைவரும் கேட்ட கேள்வி.

'நீங்கள் எப்படி இவ்வளவு ஒற்றுமையாக இருந்தீர்கள் இவ்வளவு நாளும்' என்று.

அதற்கு அந்த தம்பதிகள் கொடுத்த பதில் 'நான் எனது கனவரின் சுதந்திரத்தில் தலையிட்டதே இல்லை. அது தான் காரணம்!' என்று. அன்று இரவு படுக்கையில் மனைவி கணவனிடம் 'இதுவரை உங்கள் சுதந்திரத்தில் தலையிட்டதே இல்லை.. இன்று நீங்கள் மறைத்த உண்மை ஒன்று சொல்லுங்களேன்' என்று கேட்டாள்.



கணவன் படுக்கைக்கு அடியிலிருந்த ஒரு பெட்டியை எடுத்து கட்டில் மேல் திறந்து வைத்தான்.

உள்ளே ஒரு முட்டையும் ஒரு லட்ச ரூபாய் பணமும் இருந்தது. அதை பார்த்து 'இது என்ன?' என்று கேட்ட மனைவிக்கு கணவன் ' உனக்கு எப்பொழுதெல்லாம் துரோகம் செய்கிறேனோ.. அப்பொழுதெல்லம் இந்த பெட்டியில் ஒரு முட்டை வைப்பேன்' என்றான்

கணவன் செய்த ஒரே ஒரு தப்பை மன்னித்த மனைவிக்கு மீண்டும் ஒரு சந்தேகம்

'சரி... அதில் ஒரு இலட்ச ரூபாய் இருக்கே. அது என்ன கணக்கு?'

கணவன் சொன்னான்.

'அது எல்லாம் முட்டை வித்து சேத்து வச்ச காசு...!'

ஒரு தகவல்

## கணினி, இணையதள முன்னோடி ரொபேர்ட் டெய்லர்!

கணினி மற்றும் இணையதள முன்னோடியான ரொபேர்ட் டெய்லர் தனது 85வது வயதில் கடந்த ஏப்ரல் 13ம் திகதி காலமானார். அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தின் சான் பிரான்சிஸ்கோ நகரில் வசித்து வந்தவர். இவர்தான் இன்று நாம் பயன்படுத்தும் இணையத்தள ஆரம்பத்திற்கான அடிக்கல்லை நாட்டியவர். அமெரிக்க பாதுகாப்புத்துறை தலைமையகமான பென்டகனில் கணினி மேம்பாட்டுக்கான மின்னணு ஆராய்ச்சியில் அவர் ஈடுபட்டிருந்தபோது, பென்டகனின் நிதி உதவியுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வந்த பல நிறுவனங்கள், கல்வி நிலையங்களை மூன்று தனித்தனி கணினிகள் மூலம் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறு தொடர்வுகொள்வது பல்வேறு சிரமங்களை ஏற்படுத்தியது. எனவே, அதனைத் தவிர்த்து ஒரே கணினி ஊடாக இவற்றை கையாளும் வழியை ஆராய்ந்தார். அதன் விளைவாகப் பல கணினிகளை இணைத்துச் செயல்பட வைக்கும் நெட்வோர்க் முறை 1966ல் உருவானது.



இதுவே பிறகு இண்டர்நெட் அல்லது இணையதளத்துக்கு முன்னோடியாக அமைந்தது. கணினி மூலம் விரல் நுனி மூலமாக உலகின் அனைத்துத் தகவல்களையும் உலகின் அனைத்துப் பகுதிகளிலும் அனைவராலும் பகிர்ந்து கொள்ள முடியும் என்று அவர் கண்ட கனவு பல ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியது. இணையதள உருவாக்கத்துக்குப் பிறகு ஜெராக்ஸ் நிறுவனத்தில் அவர் பணியாற்றியபோது, ஒவ்வொரு ஊழியரும் மேசையில் வைத்துப் பணிபுரியும் விதத்திலான முன்னோடி கணினியை உருவாக்கினார்.

அதுவரை கணினி மொழிகளை மட்டுமே பொறியாளர்கள் பயன்படுத்தி வந்த நிலையில், நேரடியாக எளிய அன்றாட மொழியைப் பயன்படுத்தும் விதமாக தரவுகளை உருவாக்க உதவினார். இந்த முறையே பின்னர் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் விண்டோஸ், அப்பிள் கணினிகளுக்கு முன்னோடியாக விளங்கியது.

ஒரு பொன்மொழி

**பணத்தை இழந்தால் சொற்ப நட்டம்.**
**நேரத்தை இழந்தால் எல்லாம் நட்டம்.**

- ஆர்மேனியா

ஒரு பழமொழி

**அவளுக்கு குடும்பம் நடத்த ஆசை, இடுப்பில் குடந்தூக்குவதுதான் பிடிக்கவில்லை.**

ஒரு வரலாறு

## காலம் தவறாமை

நேரம் பொன்னானது என்பார்கள். அந்த நேரத்தை பொன் போல் கடப்பிடிப்பிடிப்பவர்களில் பிரெஞ்சு நாட்டு வீரன் நெப்போலியன் போனபார்ட்டும் ஒருவன். ஒரு சமயம் நெப்போலியன் தன்னுடைய தளபதிகளை விருந்துக்கு அழைத்திருந்தான். விருந்து நேரம் என்ன என்பதையும் அறிவித்திருந்தான்.



குறிப்பிட்ட நேரம் வந்தது. எவரும் அந்த நேரத்திற்கு விருந்திற்கு வந்துசேரவில்லை.

ஏனோ சற்று அசட்டையாக இருந்துவிட்டார்கள். நெப்போலியனோ குறிப்பிட்டிருந்த நேரத்தில் தனியாக உட்கார்ந்து உணவை உண்ண ஆரம்பித்துவிட்டான். அவன் உண வருந்தி முடியும் தருவாய் வந்தது. அப்பொழுதுதான் தளபதிகள் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருந்தார்கள்.

உடனே நெப்போலியன் சாப்பாட்டு மேசையை விட்டு எழுந்தான். பின் நடந்துகொண்டே, என்னருமைத் தளபதிகளே! சாப்பிடும் நேரம் முடிந்துவிட்டது. இப்பொழுது வேலை செய்யும் நேரம் தொடங்கிவிட்டது. வாருங்கள் ஒரு நிமிடத்தையும் வீணாக்காமல் காரியத்தில் ஈடுபடுவோம் என்றான்.

ஒரு புராணம்

## சிவலிங்கம் உருவான கதை

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் லிங்க வழிபாட்டைத் தொடங்கிவிட்டதாக வரலாறுகள் சொல்கின்றன. ஆண், பெண் உறுப்புக்களின் வடிவம்தான் லிங்கம். உயிர்களின் தோற்றத்திற்கு முக்கிய காரணமான ஆண், பெண் உறுப்புகளை ஒன்றாக்கி அதனை லிங்க வடிவமாக்கி வணங்கியதாகத்தான் வரலாறுகள் மெய்ப்பிக்கின்றன. ஆனால், பின்னர் இதற்குள் சிவனைக் கொண்டுவந்து நுழைத்து சிவலிங்கம் ஆக்கிவிட்டார்கள். அந்த சிவலிங்கம் எவ்வாறு உருவானது என்றொரு கதையையும் புனைந்துவிட்டார்கள். கேட்பதற்கு கொஞ்சம் சங்கடமாக இருந்தாலும் அந்தக் கதை எப்படிப் போகின்றது என்று பாருங்கள்.



சிவன் ஒரு நாள் தருகவனத்தில் பிருந்தை ரிஷியை சந்தித்தார். அந்த ரிஷியின் மனைவியை கண்டதும் அவள் மீது சிவனுக்கு காமம் வந்துவிட்டது. எப்படியாவது ரிஷியின் மனைவியை அடைந்தே ஆகவேண்டும் என்று தவித்த சிவன், திட்டமிட்டு நள்ளிரவில் ரிஷியின் வீட்டருகே வந்து சேவலைப் போல் கூவினார். பொழுது விடிந்துவிட்டது என்று நம்பிய ரிஷி, கங்கை நதியில் குளிக்க சென்றுவிடுகிறார்.

ரிஷி வெளியே சென்ற அந்த நேரத்தில் சிவன் ரிஷியை போலே உருவம் மாறி ரிஷியின் மனைவியோடு, உடலுறவு கொண்டுவிடுகின்றார். வீடு திரும்பிய ரிஷி, தன் மனைவியின் உடலுறவு கொண்ட கோலத்தை பார்த்து கோபம்கொண்டு, தான் இல்லாத நேரத்தில் தன்னை போல் மாறி தன் மனைவியோடு உடலுறவு கொண்டவனின் லிங்கம் அறுபடட்டும் என்று சாபம் விடுகிறார்.

உடனே சிவனின் லிங்கம் அறுபடுகிறது. விடயம் தெரிந்த தேவர்கள் உடனே சிவனின் மனைவி பார்வதியிடம் சொல்லி அழுகிறார்கள். உடனே பார்வதி தனது பிறப்புறுப்பால் அறுந்த சிவனின் லிங்கத்தை பிடித்து காப்பாற்றுகிறாள். இதுதான் சிவலிங்கம் உருவான கதை.

இப்போது இந்தக் கதையை மாற்றி வேறு பல கதைகள் புனையப்பட்டுவிட்டன. ஆனால், சிவனின் வருகைக்கு முன்பே, லிங்க வழிபாடு இருந்திருக்கின்றது என்பதற்கு வரலாற்றில் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

RAMI COIFFURE
உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள
Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY
Port: 06 27 93 63 44

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34

Aubervilliers Quatre chemins இல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost, 93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

J.K.S ALIMENTATION GENERALE
SPÉCIALITÉ AFRO - ASIATIQUE
Ria · Western Union · MoneyGram
இலங்கை இந்திய மளிகைப் பொருட்களை உங்கள் Le Bourget இல் மலிவாகவும் தரமாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்
52, avenue Jean Jaures
93350 Le Bourget
RER B : Le Bourget
jks.alimentation@gmail.com
Tel: 01 48 51 71 41
09 66 97 71 41
தினமும்: 9h00 - 21h00

சங்கதி 24
www.sankathi24.com
செய்திகள்
ஆய்வுகள்
பிரான்ஸ்
தமிழகம் மற்றும் பன்னாட்டுச் செய்திகள்
தாயகச் செய்திகளின் தேசியத்தளம்

Baby Baloon
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

DEVI Textiles & Tailors
சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்
ஆண் பெண் இருபாலாருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் வசதிக்கு அமைவான தோல்பைகளும் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
29, Bld de la Chapelle, 75010 Paris
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50
M°: La Chapelle (ligne 2)

பரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc 75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis 75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

LE BOURGET AIRPORT
Royal Mahal நகையணியகம்
Royal Mahal பல்பொருள் அங்காடி
MoneyGram · Western Union · Ria
212 Avenue du 8 Mai 1945, 93150 Le Blanc-Mesnil
06.65.01.76.69 - 06.65.15.00.41
RER B : Le Bourget, Bus 152 / RER B : Le Blanc mesnil, Bus 620
métro ligne 7 la courneuve, Bus 152.

லலிதா நகை மாளிகை
பாரிஸ்
40 வருட அனுபவம் வாய்ந்த நகை விற்பன்னர்களால் பாரம்பரிய, நவீன டிசைன் தங்க நகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
Lalitha Jewellery
4, rue Cail - 75010 Paris
Tél. : 01 53 26 36 16 / 06 58 07 03 26
Metro : La Chapelle - Gare Du Nord

சுவர்ண மஹால்
SWARNA MAHAL
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com

ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
எலிகள் - சுண்டெலிகள்
கரப்பான் பூச்சிகள்
தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம் ஒரே தடவையில் பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V, 75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04

# அமெரிக்காவின் 10 தொன் குண்டைவிட ஆப்கானை அதிரவைத்த தலிபான்களின் தாக்குதல்



கடந்த ஏப்ரல் மாதம் 14ம் திகதி, 10 தொன் குண்டைக் கொண்டுபோய் போட்டு ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கு பேரிழப்பை ஏற்படுத்திவிட்டதாக அமெரிக்கா தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்தது. இத்தாக்குதல் இடம்பெற்று ஒரு வாரத்தில் கடந்த 21ம் திகதி தலிபான்கள் கொடுத்த அடியில் ஆப்கான் அரசே நிலை தடுமாறிப் போயிருக்கின்றது. அமெரிக்காவின் பத்துத் தொன் குண்டுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாகவே தலிபான்கள் இத்தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது. ஆப்கான் இராணுவ நிலை ஒன்றின் மீது தலிபான்கள் நிகழ்த்திய மிக மோசமான தாக்குதல் இது என்றும் கூறப்படுகிறது. பாதுகாப்புத்துறை அமைச்சரும், இராணுவத் தளபதியும் பதவி விலகவேண்டிய நிலையை இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியுள்ளது.

2001ம் ஆண்டு ஆப்கான் ஆட்சியில் இருந்து தலிபான்கள் அகற்றப்பட்டதன் பின்னர் ஆந்நாட்டு ஆட்சியாளர்களுக்கும் தலிபான்களுக்கும் இடையில் மோதல்களும் அவ்வப்போது பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுவருகின்றன. இந்த மோதல்களின் உச்சத் தாக்குதலாக கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதல் அமைந்துள்ளது. இந்தப் பேரிழப்பு ஏற்பட்டதற்காக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி 23ம் திகதியை நாட்டின் தேசிய துக்க தினமாகப் பிரகடனப்படுத்தியிருந்தார்.



ஆப்கானின் வடக்கு பகுதியில் பால்க் மாகாணத்தில், மசர் இ செரீப் என்ற நகரில் ஆப்கான் படையினரின் பாரிய இராணுவத் தளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஏராளமான இராணுவத்தினர் இங்குநிலைகொண்டுள்ளனர். புதிய படையினருக்கான பயிற்சிகளும் இங்கு வழங்கப்படுகின்றன. கடந்த 21ம் திகதி ஆப்கான் இராணுவத்தினர் அணியும் சீருடையில், இராணுவ வாகனத்தில் முகாமிற்குள் நுழைந்த தலிபான்களை யாரும் அடையாளம் காணவில்லை. முகாமின் பிரதான வாசலில் அவர்களின் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தியபோதுதான் வந்திப்பது இராணுவம் அல்ல என்பது அவர்களுக்குப் புரிந்தது. ஆனால் அதற்குள் முகாமிற்கு அருகிலுள்ள மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர், மற்றும் முகாமின் உணவகத்தில் உணவருந்திக்கொண்டிருந்த இராணுவத்தினர் உட்பட கண்ணில்பட்ட அனைவரையும் தாங்கள் வந்த இராணுவ வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த தானியங்கித் துப்பாக்கிகளால் சல்லடை போட்டிருந்தனர்.

முகாமினுள் நுழைந்த தலிபான்களுக்கும் இராணுவத்திற்கும் இடையே சுமார் ஏழு மணி நேரம் மோதல் இடம்பெற்றிருக்கின்றது. அதன் பின்னரே முகாமை அவர்களால் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் இராணுவ தரப்பில் 140 பேரும், தலிபான்கள் தரப்பில் 10 பேரும் உயிரிழந்ததாக கூறப்படுகின்றது. பலியானவர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தில் புதிதாக சேர்ந்த பயிற்சி இராணுவச் சிப்பாய்கள் என்று கூறப்படுகின்றது. ஏராளமான இராணுவத்தினர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். எனினும் குறித்த தளத்திலுள்ள ஆப்கானிஸ்தான் படைகளுக்கு பயிற்சியளிப்பதற்காகவும் உதவுவதற்காகவும், நேட்டோ தலைமையிலான இராணுவக் கூட்டணியின் ஆலோசகர்கள் தளத்தில் இருந்தபோதும், எந்தவோர் வெளிநாட்டுப் படையினரும் பாதிப்படையவில்லை என கூட்டணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலைப் படையாக நுழைந்த தலிபான்களில் ஒருவர் ஆப்கான் படையினரால் காயங்களுடன் உயிருடன் பிடிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளபோதும், ஆப்கான் இராணுவ தரப்பு அவ்வாறான செய்திகள் எதனையும் வெளியிடவில்லை.

இதேவேளை, 100ற்கும் மேற்பட்ட படையினர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து, பாதுகாப்புத்துறை அமைச்சரும், இராணுவத் தளபதியும் பதவி விலகவேண்டும் என்று பல்வேறு மட்டங்களில் இருந்தும் அழுத்தங்கள் எழுந்தன. அத்துடன், பாதுகாப்பு படைப் பிரிவினர் போதிய கண்காணிப்பு பணியில் ஈடுபடாததால்தான் இராணுவத்துக்கு இத்தனை பெரிய சேதம் ஏற்பட்டது என்று உளவுத் துறையின் விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் அப்துல்லா ஹபீபி, இராணுவத் தலைமைத் தளபதி கதம் ஷா ஷாஹீம் ஆகிய இருவரும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை கையளித்தனர். இருவரின் பதவி விலகல் கடிதங்கள் ஏற்கப்பட்டதாக ஆப்கானிஸ்தான் அரசு செய்திக் குறிப்பு வெளியிட்டது. அத்துடன், தாக்குதலுக்கு உள்ளான முகாமின் இரு மூத்த அதிகாரிகள் உட்பட 12 இராணுவ அதிகாரிகள் கவனக் குறைவு குற்றச்சாட்டின் கீழ் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, இந்தத் தாக்குதலுக்கு துணை போனதாக குற்றம்சாட்டப்பட்டு 35 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு வெளியில் இருந்து மட்டுமல்ல முகாமில் இருந்து தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டறிந்த அதிகாரிகள், இது தொடர்பான சந்தேகத்தில் 35 இராணுவத்தினரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதற்கிடையே அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை

தொடர்ச்சி 22ம் பக்கம்

## விபத்தில் ரஷ்ய உளவுக் கப்பல் கடலில் மூழ்கியது!

ரஷ்யாவின் அறிவியல் ஆய்வு கப்பலான லீமன் ஆழ்கடல் ஆராய்ச்சிக்காக 1970ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1989ல் நவீன கண்காணிப்பு கருவிகளை கொண்ட உளவுக் கப்பலாக அது மாற்றப்பட்டது. மேலும் அதில் ரஷ்யாவின் அதிநவீன ‘இக்லா’ ஏவுகணை செலுத்தும் ஏவுதளம் பொருத்தப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 27ம் திகதி கருங்கடலில் துருக்கிப் பகுதியில் உள்ள பொஸ்பரஸ் (Bosporus) முனை ஊடாகப் பயணம் செய்த போது வீட்டு விலங்குகளை ஏற்றிச் சென்ற சரக்கு கப்பலுடன் மோதியது. இதில் உளவு கப்பலின் அடிப்பாகம் அதிகம் சேதமடைந்தது, இதனால் கப்பலானது நீரில் மூழ்கியது. கப்பலுடன் நீரில் மூழ்கிய 78 படையினர்,






ஆய்வாளர்கள் துருக்கி கப்பல் படையினர் மற்றும் சரக்கு கப்பல் ஊழியர்களால் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

தங்களின் கப்பல் விபத்துக்குள்ளானதை உறுதி செய்த ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம், துருக்கிய கப்பலில் உள்ளவர்கள் விரைவில் ரஷ்ய கடற்படை கப்பலுக்கு மாற்றப்பட்டு நாடு திரும்புவர் என கூறியுள்ளது. பொஸ்பரஸ் முனையில் இவ்வாறு அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது சாதாரணம் எனினும் உளவுக் கப்பல் மூழ்கியது இதுவே முதல் முறையாகும். அரிய தகவல்களை கொண்ட இந்த உளவு கப்பலை மீட்டெடுக்க உடனடியாக முடியா விட்டாலும், அதில் உள்ள ஆய்வுக் கருவிகளை உடனடியாக மீட்க ரஷ்யா முயற்சிகளை மேற்கொள்ளும் என்று கூறப்படுகின்றது.

## சவுதி வணிக வளாகங்களில் வெளிநாட்டினருக்கு தடை

சவுதி அரேபியாவில் வணிக வளாகங்களில் வெளிநாட்டினர் பணிபுரிவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், வணிக வளாகங்களில் உள்நாட்டினரை பணியில் அமர்த்தும் நடவடிக்கையையும் அந்நாட்டு அரசு முன்னெடுத்துள்ளது.

சவுதிஅரேபியாவில் ஏற்பட்டு வரும் பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வேலையில்லா பிரச்சினையை தீர்ப்பதற்காக, அந்நாட்டு மக்களுக்கு புதிதாக 35 ஆயிரம் வேலை வாய்ப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாக சவுதி அரேபிய அரசாங்கம் அறிவித்துள்ளது. மேலும் நாட்டின் எண்ணை வளத்தை மட்டுமே நம்பாமல், வணிக ரீதியிலான உள்நாட்டு பொருளாதார வளத்தை பெருக்குவதற்கு உள்ளூர்வாசிகளை வணிக நடவடிக்கையில் ஈடுபடுத்தும் திட்டத்தை அந்நாட்டு அரசாங்கம் வகுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அத்தோடு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சவுதி இளவரசர் மொஹமட் பின் சல்மான் வகுத்துள்ள திட்டத்தின் பிரகாரம், வேலையின்றிருக்கும் சவுதி அரேபியர்களுக்கு உள்நாட்டு வணிக வளாகங்களில் வேலைவாய்ப்பு வழங்க அரசு முடிவு செய்துள்ளதோடு, அந்நாட்டு வணிக வளாகங்களில் வெளிநாட்டினரை பணியில் அமர்த்தவும் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குறைந்து செல்லும் தொலைக்காட்சி நேயர்கள்!

ஒரு காலத்தில் அளவிற்கு அதிகமாக இருந்த வானொலி நேயர்கள் நவீன இலத்திரனியல் கருவிகளின் வருகையால் குறைந்து போனதுபோல், தற்போது தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி பார்க்கும் நேயர்களின் எண்ணிக்கையும் கணிசமாக குறைந்து வருவதாக

## சார்லி சாப்ளினுக்கு மரியாதை

சார்லி சாப்ளினின் 128வது பிறந்த நாளையொட்டி அவருக்கு மரியாதை செய்யும் விதமாக சுவிட்சர்லாந்தில் உள்ள அருங்காட்சியகத்தில் 662 பேர் சார்லி



சாப்ளின் போல் வேடமிட்டு நட்சத்திர வடிவில் அணிவகுத்து நின்றனர்.இந்த அருங்காட்சியகம் திறக்கப்பட்டு ஒரு சில மாதங்களுக்குள் சுமார் 3 இலட்சம் பார்வையாளர்கள் இதனைப் பார்வையிட்டுள்ளனர்.

## கின்னசில் இடம்பிடித்த சமோசா!

பிரித்தானிய பல்கலைக்கழக மாணவர்கள் தயாரித்த பிரம்மாண்டமான சமோசா 5 ஆண்டுகளுக்கு பிறகு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. பிரித்தானியாவின் ப்ராட்ஃபோர்ட் பல்கலைக்கழகம் மாணவர்கள் 2012ம்



ஆண்டு யூன் மாதம், 110.8 கிலோ கிராம் நிறையில் பெரிய சமோசாவை தயாரித்தனர். 135 செ.மீ நீளமும், 85 செ.மீ. அகலமும் கொண்ட இந்த சமோசா, 5 ஆண்டுகளுக்கு பிறகு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

## உகாண்டாவில் சீனர்களுக்கு எதிர்ப்பு

உகாண்டாவில் சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள சீனர்கள், தங்களால் போட்டியிட முடியாத அளவு குறைந்த விலைக்குப் பொருள்களை விற்பதாகக் கூறி, அந்த நாட்டு வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றைக் கடந்தவாரம் நடத்தியுள்ளனர்.

## தகவல் சேகரிப்புக்காக நாசா அனுப்பி பலூன்!

நியூசிலாந்து நாட்டில் ஒரு மைதானம் அளவிலான சுப்பர் பலூனை (Super balloon) தகவல் சேகரிப்புக்காக நாசா விண்வெளியில் செலுத்தியது. கடந்த 25ம் திகதி இது விண்ணில் பறக்கவிடப்பட்டது.



இது 100 நாட்கள் தகவல் சேகரிப்பில் ஈடுபடும். பூமியை 2 அல்லது 3 முறை சுற்றும் என தகவல்கள் கூறுகின்றன. இந்த பலூனில் சூரிய சக்தியில் இயங்கும் கலங்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், இதன் பயணத்தைக் கண்காணிக்கும் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

## கென்னடியின் நாட்குறிப்புகள் ஏலம்!

அமெரிக்க அதிபராக இருந்த ஜோன் எப் கென்னடி இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்திய நாட்குறிப்பு சுமார்

→ 20

718,750 டொலர் ஏலத்தில் விற்பனையாகியது. அந்த நாட்குறிப்பு மொத்தம் 61 பக்கங்களை உள்ளடக்கியுள்ளது. அதில், 12 பக்கங்களில் கென்னடி தனது கைப்பட எழுதியுள்ளார். எஞ்சியுள்ள 49 பக்கங்களில் தட்டச்சு மூலம் தனது எண்ணங்களைப் பதிவு செய்துள்ளார். தரமான பசுந்தோலால் பிணைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட அந்த நாட்குறிப்பு எதிர்பார்த்த விலையைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக விலைக்கு விற்பனையாகியது. தெளிவான திருத்தப்படாத கென்னடியின் அரசியல் குறித்த கண்ணோட்டம், அவரது சுய நம்பிக்கை குறித்த அனைத்து தகவல்களும் அந்த நாட்குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஐ.நா. பொதுக்கூட்டம், ஜேர்மனி சர்வாதிகாரி ஹிட்லர், பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் குறித்த தகவல்களும் அந்த நாட்குறிப்பில் இடம் பெற்றுள்ளன.

## 100 டொலர்களுக்கு நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல்!

பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல் ஒன்றை தென் கொரியா வழங்க உள்ளது. இது கடல்சார் பாதுகாப்பை பலப்படுத்த உதவியாக அமையும் என்று பிலிப்பைன்ஸ் கூறுகிறது. அத்துடன் இந்தக் கப்பலை அன்பளிப்பாக வழங்காமல், வெறும் 100 டொலர்களை மட்டும் பெற்றுக்கொண்டு வழங்கவுள்ளது.

## சொக்லேட் செய்ய இனிப் பலாக்கொட்டை போதும்!

வழக்கமாக கோகோவில் இருந்துதான் சொக்லேட் தயாரிக்கப்படுகிறது. சொக்லேட் தயாரிக்க, சர்வதேச அளவில் 45 இலட்சம் தொன் கோகோ தேவைப்படுகிறது. ஆனால் விவசாயிகளால் அந்த அளவு கோகோ உற்பத்தி செய்ய முடியவில்லை. 37 இலட்சம் தொன் மட்டுமே



உற்பத்தி செய்கின்றனர். சொக்லேட் தயாரிக்க இன்னும் 10 ஆண்டுகளில் கூடுதலாக கோகோ தேவைப்படும். அந்த நெருக்கடியை சமாளிக்க முடியாத பட்சத்தில் கோகோவை விடுத்து சொக்லேட் நறுமணம் மற்றும் சுவையுடன் மாற்று வழியில் தயாரிக்க முடியுமா என பிரேசிலில் உள்ள சாவ் பாவ்லோ பல்கலைக்கழக நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர். இந்நிலையில், பலாக் கொட்டையில் இருந்து சொக்லேட் தயாரிக்க முடியும் என அவர்கள் கண்டறிந்துள்ளனர். பலா கொட்டையில் சொக்லேட்டின் நறுமணம் மற்றும் சுவையுடன் கூடிய ஒரு பொருள் மறைந்து இருப்பதை கண்டுபிடித்துள்ளனர். அதில் இருந்து சொக்லேட் தயாரிக்க பயன்படும் பொருள் உருவாக்க முடியும். இதன் மூலம் கோகோ பற்றாக்குறையால் சொக்லேட் தயாரிப்பில் ஏற்படும் பாதிப்பை தடுக்க முடியும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## 100 மீற்றர் பந்தயத்தில் தங்கம் வென்ற பாட்டி

நியூசிலாந்தின் ஓக்லாந்தில் நடைபெற்ற உலக மாஸ்டர்ஸ் விளையாட்டு போட்டியில் (World Masters Games) 100 மீற்றர் ஓட்டபந்தயத்தில் இந்தியாவின் சண்டிகார் மாநிலத்தைச் சேர்ந்த 101 வயது பாட்டி கவுர் (Kaur) தங்க பதக்கம் வென்று உள்ளார். இந்திய முதிய தடகளவீரரக்கள் வாங்கிய 17வது தங்கபதக்கம் இதுவாகும். கவுர் குறிப்பிட்ட பந்தய தூரத்தை 1 நிமிடம் 14 வினாடிகளில் கடந்து வெற்றி பெற்றுள்



ஆய்வில் தெரியவந்துள்ளது.

தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சி பார்ப்பவர்களின் எண்ணிகை 52 சதவீதத்தில் இருந்து 23 சதவீதமாக குறைந்திருப்பதாக ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

அக்சென்சர் நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள 26 நாடுகளில் 26 ஆயிரம் பேரிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில், நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் பார்க்க விரும்புபவர்கள் 23 சதவீதம் மட்டுமே இருப்பதாக கூறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 52 சதவீதமாக இருந்த இந்த அளவு இந்த ஆண்டு வெகுவாகக் குறைந்துள்ளது. 42 சதவீதம் பேர் செல்பேசி, மடிக்கணினி, கைக்கணினி ஆகிவற்றில் நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கே விரும்புகிறார்கள். கடந்த ஆண்டு நடத்திய கருத்துக்கணிப்பில் 32 சதவீதமாக இருந்த அளவு தற்போது 10 சதவீதம் அதிகரித்துள்ளது. இணைய பயன்பாடு, இணையத்தில் கிடைக்கும் உயர்தர காணொளிக்கள், இணைய நேரலை ஒளிபரப்பு ஆகியவை இந்த மாற்றத்திற்குக் முக்கியமான காரணங்களாக கூறப்படுகிறது.

## 91வது வயதில் 65 ஆண்டு காலம் ஆட்சி!

பிரித்தானிய மகாராணி எலிசபத்தின் 91வது பிறந்தநாள் கடந்த 21ம் திகதி கொண்டாடப்பட்டுள்ளது. பிரித்தானிய மகாராணியின் 91வது பிறந்தநாளை ஒட்டி, உத்தியோகபூர்வ வாசஸ்தலமான பக்கிங்காம் அரண்மனையில் குடும்பத்தினருடன் கொண்டாடியுள்ளார். மேலும் 1926ம் ஆண்டு பிறந்த எலிசபத், தந்தை 4ம் ஜோர்ஜின் மறைவிற்கு பிறகு 1952ம் ஆண்டு பிரித்தானிய மகாராணியாக முடிசூட்டப்பட்டார். அத்தோடு உலகிலுள்ள மன்னர்



மற்றும் மகாராணிகளில் இவரே மிக வயதானவர் எனும் பெருமையை பெறுவதோடு, பிரித்தானிய அரச குடும்பத்தில் முடிசூட்டப்பட்டவர்களில் மிக நீண்ட நாட்கள் மகாராணியாக வலம் வருபவர் எனும் பெருமையை பெற்று கடந்த 65 வருடங்களாக மகாராணியாக பதவி வகித்து வருகிறார். மகாராணி எலிசபெத்தின் ஆட்சி காலத்தில் இதுவரை அவர் 13 பிரித்தானிய பிரதமர்கள், 12 அமெரிக்கா ஜனாதிபதிகளை சந்தித்துள்ளதோடு, சுமார் 10 இலட்சத்து 60 ஆயிரம் கிலோ மீற்றர்கள் பயணம் செய்துள்ளார். இந்தப் பயணத்தில் அவர் 106 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீன அதிகாரிகளுக்கு இன்னொரு கிடுக்குப்பிடி!

ஊழல்வாதிகளை ஒழிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வரும் சீன அதிபர் ஜீ ஜின்பிங், அடுத்தகட்ட அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளார். இந்நிலையில், வெளிநாடுகளில் இருக்கும் சொத்து விவரங்களை கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு சீன அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. இதுகுறித்து அந்த நாட்டு அரசு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை மேலும் வலுப்படுத்தும் விதமாக, அதிகாரிகள் தங்களது சுயவிவரக் குறிப்பில், திருமண நிலை, குடும்ப உறுப்பினர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள சொத்து விவரங்கள் அனைத்தையும் அரசுக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். அதிகாரிகளின் நடத்தை விதிமுறைகளில் அதற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய ஒழுங்கு விதிமுறையின்படி, அதிகாரிகளின் வெளி

# ரணிலின் பயணமும்.....

நாட்டின் சில பகுதிகளை சொந்தமாக்கிக் கொள்ளும் வகையில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு இந்தியப் பிரதமர், இலங்கை வருகிறார் என சில இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பல்வேறு போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதாக குறிப்பிட்ட மைத்ரிபால சிறிசேன, இந்த அனைத்து பிரசாரங்களும் அரசாங்கத்துக்கு எதிரான சிலரினால் முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களாகும் எனவும் கூறியிருக்கின்றார்.

இதேவேளை, நரேந்திர மோடியின் பயணத் திட்டத்தைக் குழப்பும் வகையில், கொழும்பில் பாரிய எதிர்ப்புப் போராட்டங்களை கூட்டு எதிரணியினர் நடத்தக் கூடும் என்று புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இந்த நிலையில், இந்தியப் பிரதமரின் பயணத் திட்டத்தைக் குழப்பும் வகையிலான போராட்டங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், மோடியின் பயணத்துக்கு முன்னதாக, பீல்ட் மார் ல் சரத் பொன்சேகாவுக்கு முக்கிய பொறுப்பு அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, ரணில் தலைமையிலான சிறீலங்கா உயர்மட்டக் குழுவினருக்கு இந்தியாவில் சிறப்பு மரியாதைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஐந்து நாள் (26ம் திகதி முதல் 30ம் திகதி வரை) இந்தியப் பயணத்தின்போது இந்தியப் பிரதமர் அமைச்சர் நரேந்திர மோடி, மற்றும் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், மற்றும் பல அமைச்சர்கள், கொங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அத்துடன், பல்வேறு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதுடன், உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நரேந்திர மோடிக்கும் இடையில், டில்லி ஹைதராபாத் மாளிகையில் கடந்த 26ம் திகதி இடம்பெற்ற சந்திப்பின்போது, இந்து சமுத்திரத்தில் பொருளாதாரம், வர்த்தகம், பயங்கரவாதம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. அதன்போது, தமிழக மீனவர்கள் மீது எந்தக் காரணத்தைக் கொண்டும் சிறீலங்காக் கடற்படை தாக்குதல் நடத்தக் கூடாது என்றும் சர்வதேச கடல் எல்லை தாண்டியதாக இந்திய மீனவர்கள் பிடிபட்டால் அவர்களை மனிதாபிமானத்துடன் தாயகம் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்கவிடம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான, தேசிய அரசாங்கத்தின் வேலைத் திட்டத்துக்கு ஆகக்கூடிய அர்ப்பணிப்பை வழங்குவதற்கே இந்தியா கவனம் செலுத்தியுள்ளது என்றும் ரணிலிடம் மோடி உறுதியளித்துள்ளார்.

அதேவேளை, இச்சந்திப்பின்போது சிறீலங்கா - இந்தியாவிற்கும் இடையே வணிகம் மற்றும் இயற்கை எரிவாயு உள்ளிட்ட ஒப்பந்தங்கள் சில கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முக்கியமாக இந்தச் சந்திப்பின்போது சிறீலங்கா - இந்தியா இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று (Memorandum of Understanding - MoU) கைச்சாத்திடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, 'கடந்த இரண்டு வருட காலப் பகுதியில், சிறீலங்காவிற்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆழமான நிலைக்கும் கொண்டு செல்ல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு' இந்திய உள்விவகார அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது பாராட்டுக்களைத் தெரிவித்திருந்தார். 'இற்றைக்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவிருந்தே, இரு நாடுகளுக்கிடையிலும் வரலாற்று, கலாசார, இனத்துவ மற்றும் நாகரிக தொடர்புகள் காணப்படுகின்ற போதிலும், அவை சிதைவடைந்த சந்தர்ப்பங்களும் பல உள்ளன' என்று கூறிய ராஜ்நாத் சிங், கடந்த இரண்டு வருட காலப்பகுதியில், மேற்படி தொடர்புகள், மிகவும் உயர் மட்டத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன என்றும் ரணிலுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இந்திய நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரியுடனான சந்திப்பின்போது, சாலை கட்டுமானத்தில் இந்தியாவும், சிறீலங்காவும் இணைந்து செயல்படுவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் முதல் மன்னார் வரையிலான சாலை, மன்னார் முதல் வவுனியா வரையிலான சாலை, தம்புல்லை முதல் திருகோணமலை வரையிலான சாலை ஆகிய முக்கிய சாலைகளை இந்திய அரசு மேம்படுத்தித் தர வேண்டும் என்று ரணில் விடுத்த கோரிக்கைக்கு நிதின் கட்கரி பச்சைக்கொடி காட்டியுள்ளார். மேற்கண்ட சாலைகளை உலகத் தரத்தில் மேம்படுத்துவதற்கு சிறீலங்கா அரசுக்கு இந்திய அரசும், தனது அமைச்சகமும் முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் உறுதியளித்தார்.

இந்து சமுத்திரப் பிராந்திய அமைதி மற்றும் சுதந்திரமான கப்பல் போக்குவரத்து தொடர்பாக, சிறீலங்கா காட்டும் ஆர்வத்துக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா ஸ்வராஜ், இந்திய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இந்து சமுத்திர மாநாட்டினை, வெகு விரைவில் சிறீலங்காவில் நடத்த எதிர்பார்ப்பதாகவும் அந்த மாநாட்டின் தலைமைத்துவத்தை, சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இப்பயணத்தின்போது வலய மற்றும் சர்வதேச ரீதியிலான பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல், மனிதக் கடத்தல்கள், போலி நாணயக் கடத்தல் போன்ற சட்ட விரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக, இரு நாடுகளினதும் புலனாய்வுத் துறையினர், மிக நெருக்கமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அத்தியாவசியம் என்றும் இந்தக் கலந்துரையாடலின் போது அவதானம் செலுத்தப்பட்டதுடன், இரு நாட்டுப் புலனாய்வுத் துறையினரும் இதற்கான அடிக்கடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சிறீலங்காவின் காவல்துறையை சேவையை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் போது, இந்தியாவின் அனுபவம் தொடர்பில் விசாரித்து அறிந்துகொள்வது முக்கியம் என்றும், இதன் போது கருத்துக்கள் பரிமாறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க மாட்டோம் என்று இறுக்கமான நிலையில் இருந்த சிறீலங்கா இந்தப் பயணத்தின் பின்னர், தமிழக மீனவர்கள் இனி எல்லை தாண்டி வரமாட்டோம் என்று உறுதி அளிப்பதுடன், சேதமான படகுகளை அவரவர்களே சரி செய்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களின் படகுகளை படிப்படியாக விடுவிக்க உடன்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

முன்னதாக சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது திருகோணமலை துறைமுகத்தை இந்தியா - சிறீலங்கா கூட்டுமுயற்சியுடன் மேம்படுத்துவது மற்றும் எரிபொருள் சுத்திகரிப்பு, எரிபொருள் சேமிப்பு கிடங்கு வசதியை இருநாடுகள் இணைந்து அமைத்து பராமரிப்பது மற்றும் தொழிற்சாலைகள் குறித்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என தகவல்கள் வெளியானதால், இந்தியாவுடன் இணைந்து செயல்படும் ஒப்பந்தத்துக்கு அரசு எரிபொருள் நிறுவன ஊழியர்கள் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்திருந்தனர். எனினும், எண்ணெய் தாங்கிகள் தொடர்பில் இந்தியாவுடன் எந்தவொரு ஒப்பந்தத்திலும் அரசாங்கம் கையெழுத்திடாது என்ற ரணில் விக்கிரமசிங்க தனது பயணத்திற்கு முன்பதாக எழுத்து மூலமான வாக்குறுதியை வழங்கியதையடுத்து இந்த போராட்டம் திரும்பப் பெற்றப்பட்டது? என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் முதல் சரக்கு விண்கலம் விண்வெளி ஆய்வகத்துடன் இணைந்தது

விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ள சீனா 2013ம் ஆண்டு Tiangong-1 என்ற ஆய்வு விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலத்தில் சென்ற மூன்று சீன விஞ்ஞானிகள் 15 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை நடத்தி முடித்து, வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர். இந்த நிலையில், ஜிகுவான் மாகாணத்தில் உள்ள கோபி பாலைவனம் பகுதியில் இருந்து Tiangong-2 என்ற விண்கலத்தை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் திகதி சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.



இதனையடுத்து, ஷென்ஸோ 11 என்ற விண்கலத்தில் இரண்டு விஞ்ஞானிகளை விண்வெளிக்கு அனுப்பி டியாங்காங் 2 விண்கலத்துடன் ஷெங்ஸோ 11 இணைத்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான அடுத்தகட்ட திட்டத்தை சீனா மேற்கொண்டது. இதன்படி, கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ம் திகதி ஷெங்ஸோ 11 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

வடக்கு சீனாவில் கோபி பாலைவனத்தை ஒட்டியுள்ள ஜிக்குவான் ஏவுதளத்தில் இருந்து புறப்பட்டு சென்ற இந்த விண்கலத்தில் சீன விண்வெளி ஆய்வாளர்களான ஜிங் ஹெய்பெங் (50), சென் டாங் (37) ஆகியோர் சென்றனர். அவர்கள் இருவரும் ஒருமாத காலம் விண்வெளியில் தங்கியிருந்து பல்வேறு ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர். இந்த ஆய்வுகளை அடுத்து, வரும் 2022ம் ஆண்டுக்குள் விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

பூமியில் இருந்து சுமார் 400 கிலோ மீற்றர் உயரத்தில் இந்த ஆய்வு மையம் நிர்மாணிக்கப்பட்டால், ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக விண்வெளியில் சொந்தமாக ஆய்வு நிலையத்தை நிலைநாட்டிய பெருமை சீனாவைச் சேரும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், இந்த ஆய்வு நிலையத்துக்கு தேவையான பொருட்களை ஏற்றி செல்வதற்காக சரக்கு விண்கலம் ஒன்றை சீனா தயாரித்தது.

டியான்ஸோ–1 (Tianzhou-1) என பெயரிடப்பட்டுள்ள இந்த விண்கலம், திரவ நிலையில் இருக்கும் பிராண வாயு மற்றும் மண்ணெண்ணையினால் இயங்கும் ((Long March-7 Y2 carrier rocket) உந்துகணை மூலம் கடந்த 21ம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. 10.6 மீற்றர் நீளத்தில் குழாய் வடிவில் உள்ள இந்த விண்கலம், செயற்கைக் கோள் உள்பட சுமார் 6 தொன் நிறையுள்ள சரக்குகளை விண்வெளிக்கு ஏற்றிச் செல்லும் ஆற்றல் கொண்டதாகும்.

விண்வெளியில் தங்கிருக்கும் போது புவி ஈர்ப்பு விசையின் எதிர்தாக்கம் உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளும் அதிநவீன சாதனங்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், சீனாவின் தென் பகுதியில் உள்ள ஹைனான் தீவில் டியான்ஸோ–1 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. தற்போது விண்வெளியில் சுற்றியவாறு பல்வேறு கட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் டியாங்காங் 2 விண்கலத்துடன் டியான்ஸோ–1 விண்கலம் 22ம் திகதி இணைக்கப்பட்டதாக சீன விண்வெளித்துறை தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சீனா வருகிற 2018ம் ஆண்டில் நிலவின் இருண்ட பக்கத்தில் தடம் பதிப்பது என்று இலக்கு நிர்ணயித்துள்ளது. வருகிற 2020ம் ஆண்டிற்குள் முதன்முறையாக செவ்வாய் ஆய்வுக்காக விண்கலம் அனுப்பவும் திட்டமிட்டுள்ளது. அதனை தொடர்ந்து 2வது திட்டத்தின்படி செவ்வாய் கோளில் இருந்து மேற்பரப்பு மாதிரிகள் சேகரித்து கொண்டு வரப்படும்.

## 2வது விமானம் தாங்கி போர்க்கப்பல் கடலில் இறக்கியது சீனா!

தெற்கு சீன கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை செலுத்த விரும்பும் சீனா அதற்காக தனது கடற்படையின் பலத்தை அதிகமாக்கி வருகின்றது. இந்நிலையில் சீனா தனது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விமானம் தாங்கி போர்க்கப்பலை கடந்த 26ம் திகதி கடலில் இறக்கி சோதித்து பார்த்துள்ளது.

சீன கடற்படையில் லியோனிங் என்ற விமானம் தாங்கி போர்க்கப்பல் ஏற்கனவே உள்ளது. இது உக்ரேனிடம் வாங்கி புதுப்பிக்கப்பட்ட போர்க்கப்பல். இந்நிலையில் உள்நாட்டிலேயே விமானம் தாங்கி போர்க்கப்பலை தயாரிக்கும் முயற்சியில் சீனா இறங்கியது. இதற்கான



பணிகள் 2013ம் ஆண்டு தொடங்கப்பட்டது. எனினும் 2015ம் ஆண்டுதான் கப்பல் கட்டும் பணிகள் தொடங்கியது. சீனாவின் டாலியான் கப்பல் கட்டும் தளத்தில் உருவாக்கப்பட்ட 50 ஆயிரம் தொன் நிறையுள்ள அந்த கப்பல் கடலில் இறக்கப்பட்டது. இதன் நீளம் 302 மீற்றர். அகலம் 70.5 மீற்றர். சீனா இதுவரை கட்டிய கப்பல்களில் மிகப் பெரியது. நவீனமானது இதுதான்.

இனிமேல் கப்பலில் பலவிதமான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பொருத்தப்படும். ஏற்கனவே உள்ள லியோனிங் கப்பலைவிட, இந்த கப்பல் மேம்பட்ட வகையில் தயார் செய்யப்படும். இதற்கு இன்னும் பெயர் வைக்கப்படவில்லை. இந்த விமானம் தாங்கி போர்க் கப்பலின் பெயர், அதன் குறியீடு போன்ற விவரங்கள் பொதுவாக கடற்படையில் இந்த கப்பலை சேர்க்கிற போதுதான் வெளியிடப்படும் என்று கூறப்படுகிறது. இந்த கப்பல் சீன கடற்படையில் 2020ம் ஆண்டு இணைக்கப் படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் ஜே–15 ரக போர் விமானங்கள் 24 மற்றும் 12 உலங்குவானூர்திகள் நிறுத்தும் வசதி உள்ளது. இன்னும் அதிக எண்ணிக்கையில் விமானம் தாங்கி போர்க்கப்பலை படையில் சேர்க்க சீனா திட்டமிட்டுள்ளது. இன்னும் ஆறு விமானந்தாங்கி கப்பல்களைச் சீனா கட்டப்போவதாக அந்த நாட்டு அரசு ஆதரவு பத்திரிகை நிறுவனமான 'குளோபல் டைம்ஸ்' தெரிவித்துள்ளது. இதில் அணு சக்தியில் இயங்கும் விமானம் தாங்கி போர்க்கப்பலை 'ாங்காய் கப்பல் கட்டும் தளத்தில் உருவாக்க சீனா திட்டமிட்டுள்ளது. சீன கடற்படையில் தற்போது 20 ஆயிரம் படையினர் உள்ளனர். இந்த எண்ணிக்கையை 1 இலட்சமாக உயர்த்தவும் சீனா திட்டமிட்டுள்ளது. உலகிலேயே 2வது அதிக பாதுகாப்புச் செலவுள்ள நாடு சீனா. கடந்த மாதம் சீனாவின் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவு 148 பில்லியன் டொலராக உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சைபர் தாக்குதலில் சீனா முதலிடம்!

உலகம் முழுக்க இடம்பெற்று வரும் கணினிகள் மீதான சைபர் தாக்குதல்களை முன்னின்று நடத்துவதில் சீனா முதல் இடத்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அடுத்த இடத்தில் அமெரிக்காவும் மூன்றாவது இடத்தில் துருக்கியும் இருப்பதாக அமெரிக்க தனியார் இணையத் தளம் ஒன்று ஆதாரங்களுடன் வெளியிட்டு வருகின்றது.

உலகம் முழுக்க இடம்பெற்று வரும் சைபர் தாக்குதல்களை (இணைய ஊடுருவல்களை) ஓர் இடத்தில் இருந்தபடியே உளவு பார்க்க முடியும் என்பதை

தொடர்ச்சி 22ம் பக்கம்

நாட்டுப் பயணங்கள், அவர்களின் மீதான குற்றவியல் பதிவுகள், ஊதியம்–இதர படிகள், சொத்துக் கையிருப்புகள், பங்குகள், நிதிப் பரிமாற்றங்கள், காப்பீடு, இதர முதலீடுகள் உள்ளிட்டவை குறித்தும் தெரிவிக்க வேண்டியது கட்டாயம். இதனை மீறுவோர் தண்டிக்கப்படுவர் என சீன அரசு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. சீன அதிபராக ஜீ ஜின்பிங் 2014ம் ஆண்டு பொறுப்பேற்றது முதல் ஊழலுக்கு எதிரான பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதன் மூலம், நூற்றுக்கணக்கான அதிகாரிகள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க பெண் தொழிலதிபருக்கு சீனாவில் சிறை!

அமெரிக்காவை சேர்ந்த சீன வம்சவளியைச் சேர்ந்த பெண் தொழிலதிபர் ஒருவருக்கு சீன நீதிமன்றம் மூன்றரை ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது. அமெரிக்காவை சேர்ந்த பெண் தொழிலதிபரான சாண்டி பான் கில்லிஸ், (Sandy Phan-Gillis) 2015ம் ஆண்டு மார்ச் மாதம் தனது தொழில் விடயமாக சீனா சென்றிருந்தார். ஆனால் அவர் உளவு பார்த்ததாக குற்றம்சாட்டி சீனக் காவல்துறை அவரைக் கைது செய்தது.

2 ஆண்டுகள் அவர் சிறைவாசம் அனுபவித்து வந்தார். இது ஐ.நா. சபை மற்றும் மனித உரிமை அமைப்புகளின் கண்டனங்களுக்கு வழி வகுத்தது. அவர் 1996ம் ஆண்டு முதல் சுமார் 20 ஆண்டுகள் சீனாவில் உளவு வேலையில்



ஈடுபட்டதாகவும், புதிய உளவாளிகளை நியமனம் செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராக அவரது கணவரான அமெரிக்கர் ஜெப் கில்லிஸ் வாதாடி வந்தார். ஆனால், பான் கில்லிஸ் மீதான வழக்கு விசாரணையின் முடிவில், கடந்த வாரம் சீன நீதிமன்றம் அவருக்கு மூன்றரை ஆண்டு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது. இந்த தகவலை அமெரிக்க வெளியுறவுத்துறை உறுதி செய்துள்ளது. தண்டனை முடிவடைந்ததும்: பான் கில்லிஸ் அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக சீனாவில் இருந்துவரும் தகவல்கள் கூறுகின்றன.

## உயிரியல் பயங்கரவாதத் தாக்குதல் 30 மில்லியனுக்கும் அதிகமானோரைப் பலியெடுக்கும்

*- பில் கேட்ஸ் எச்சரிக்கை*

உயிரியல் பயங்கரவாதத் தாக்குதலொன்றால் உலகிலுள்ள 30 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உயிரிழக்கக் கூடிய அபாயம் உள்ளதாகவும் அந்தத் தாக்குதலானது அணு ஆயுதத் தாக்குதலொன்றை விடவும் பாரிய அழிவை ஏற்படுத்தக்கூடியது எனவும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் உரிமையாளரும் உலகின் முதல்தரக் கோடீஸ்வரருமான பில் கேட்ஸ் தெரிவித்தார். த ரெலிகிராப் ஊடகத்திற்கு அளித்த விசேட பேட்டியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



தீவிரவாதிகள் உலகளாவிய ரீதியில் அழிவை ஏற்படுத்தும் முகமாக பெரியம்மை போன்ற நோய்த் தடுப்புமுறைமை இல்லாத நோய்களை மீள உருவாக்கலாம் எனவும் இத்தகைய உயிரியல் தீவிரவாதத் தாக்குதலால் உலகெங்கும் கொள்ளை நோய்கள் வேகமாக பரவி பெருமளவானோரை பலிகொள்ளும் அபாயம் உள்ளதாகவும் அவர் கூறினார். மேற்படி தாக்குதல் மூலம் ஒரு வருட காலத்திலும் குறைந்த காலப் பகுதியில் 30 மில்லியனுக்கும் அதிகமானோர் பலியாகக் கூடிய அபாயம் உள்ளதாக தெரிவித்த பில் கேட்ஸ், உலகளாவிய பயணங்கள் காரணமாக அந்தத் தொகை மென்மேலும் அதிகரிக்கும் நிலை உள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

1919ம் ஆண்டு ஸ்பெயினில் 100 மில்லியன் பேர் பலியாவதற்கு காரணமாக அமைந்த கொள்ளை நோயை விடவும் மோசமான விளைவை இந்த உயிரியல் தீவிரவாதத் தாக்குதலால் ஏற்படுத்தக் கூடியது எனவும் அவர் கூறியுள்ளார்.




ளார். 2009ம் ஆண்டு 100 மீற்றரில் உசேன் போல்டின் சாதனை 64.42 வினாடிகள் ஆகும். நியூசிலாந்தில் 100 வயதுக்கும் மேற்பட்டவர்கள் பிரிவில் பங்கேற்றது கவுர் ஒருவரே. இவர் வேடிக்கை பார்த்த 25 ஆயிரம் பார்வைகளை கவர்ந்துள்ளார். சண்டிகாரில் இருந்து வந்த அதிசயம் என நியூசிலாந்து ஊடகங்கள் கவுரை புகழ்ந்துள்ளன.

## ஆடு, மாடாக போல் வாழும் மனிதன்!

பாகிஸ்தானில் 25 ஆண்டுகளாக ஆடு, மாடுகள் போன்று மர இலைகளை சாப்பிட்டு ஒருவர் உயிர்வாழ்ந்து வருகின்றார். இவருக்கு இதுவரை உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டதே இல்லையாம். பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணம் குஜ்ரன்வாலா



மாவட்டத்தை சேர்ந்த மெக்மூத் பத் (50) வழக்கமான உணவு வகைகளை சாப்பிடுவதில்லை. மாறாக மரங்களின் இலை தழைகளை சாப்பிட்டு உயிர் வாழ்கிறார். கடந்த 25 ஆண்டுகளாக இப்பழக்கத்தை கடைப்பிடித்து வருகிறார்.

இவர் கழுதை வண்டியில் பாரம் ஏற்றி பணம் சம்பாதித்து வருகிறார். இருந்தும் விதம் விதமான உணவு பண்டங்கள் மீது அவருக்கு நாட்டம் இல்லை. இது குறித்து மெக்மூத் பத் பேசுகையில், 25 வயதில் நான் வறுமையில் வாடினேன். வேலை எதுவும் கிடைக்கவில்லை. எனவே சாப்பிட வழியின்றி பட்டினி கிடந்தேன். எனக்கு பிச்சை எடுக்க விருப்பம் இல்லை. எனவே பசுமையான மரங்கள் மற்றும் இலை தழைகளை தின்று பசி ஆறினேன். அதுவே எனக்கு பழக்கமாகி விட்டது. தற்போது கழுதை வண்டி மூலம் பாரம் ஏற்றி தினமும் 600 ரூபா வரை சம்பாதிக்கிறேன். இருந்தும் சாப்பாடு மீது எனக்கு விருப்பம் இல்லை. பசி எடுக்கும் போது இலை தழைகளை சாப்பிட்டு உயிர் வாழ்கிறேன் என்றார்.

## 6 கட்சிகள் இணைந்து நேபாளத்தில் புதிய கட்சி

நேபாளத்தில் எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலைக் கருத்தில்கொண்டு ஆறு மதேசி கட்சிகளும் ஒன்றாக இணைந்திருக்கின்றன. நேபாளத்தின் தேராய் பிராந்தியத்தில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக வரும் மே 14ம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் மதேசி கட்சிகள் இணைந்து களம் காண்பது என்று அண்மையில் முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, தராய் மதேஸ் லோக்தந்ரிக் கட்சி, சத்பாவனா கட்சி, ராஷ்டிரீய மதேஸ் சமாஜவாதி கட்சி, தராய் மதேஸ் சத்பாவனா கட்சி, மதேசி ஜனாதிகார் அமைப்பு, நேபாள சத்பாவனா கட்சி ஆகிய 6 மதேசி கட்சிகளும் ஒன்றாக இணைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# காலங்கடந்த சித்தார்த்தனின்....

நியாயமான சுயாட்சி, சமஷ்டி அமைப்பை எடுத்திருக்கக் கூடிய வல்லமை, தமிழ்த் தலைவர்களுள் ஒரே ஒருவருக்கு மட்டுமே இருந்தது. அது பிரபாகரனுக்கு மாத்திரம் தான். பிரபாகரன் வலிமையாக இருந்த காலத்தில், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும் தீர்வுக்கு போவதற்கு தயாராகவே இருந்தது.

நாங்கள் முன்னைய காலங்களில் அர்ப்பணிப்புடன் போராட்டங்களில் ஈடுபட்டோம். ஆனால், பிற்பட்ட காலங்களிலே தமிழ் மக்களை இரட்சிக்க வந்த இரட்சகர்கள் யார் என்ற போட்டியிலே மிகப் பெரிய அழிவுகளை சந்தித்திருக்கின்றோம். இயக்கங்கள் எல்லாம் ஒன்றாக இருந்திருந்தால் நிச்சயமாக ஈழத்தை அடைந்திருப்போம் என்று பலர் கூறுவார்கள். ஆனால், நிச்சயமாக ஈழத்தை அடைந்திருக்க மாட்டோம். அழிவை இன்னும் கூட்டியிருப்போம் என்று நிச்சயமாகச் சொல்லுகிறேன்.

ஏனென்றால், இந்தியவைப் பொறுத்தவரையில் மிகத் தெளிவாக ஈழம் உருவாக விடுவதில்லை என்ற நிலை இருந்தது. அதற்கமைய 1983ம் ஆண்டியேலே ஈழத்தை அதாவது தனிநாட்டை உருவாக்குதவற்கு நாங்கள் என்றுமே அனுமதிக்க மாட்டோம் என்று எனக்கும் கூறப்பட்டது. அதே போன்று சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்களுக்கும் கூறப்பட்டிருக்கலாம். இவ்வாறு எமக்குக் கூறப்பட்டும் ஏன் பின்னர் தனிநாட்டுக்குப் போராடினீர்கள் என்ற கேள்வியை நீங்கள் கேட்கலாம்.

ஆனால், இந்தியாவின் இன்றைய தலைமை தானே இப்படிச் சொல்லுகிறது. இனி வரக் கூடிய தலைமை அப்படியிருக்காது என்று நாங்கள் நம்பினோம். அல்லது, நாங்கள் பலமாக இருப்போமானால் சில வேளைகளில் மாற்றம் வரலாம் என்றும் எண்ணியிருந்தோம். ஆனால், நாங்கள் எங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் பலமில்லாது போனோம். இதேவேளை, இந்தியா எங்களை உடைத்தது என்று பலர் கூறுவார்கள். ஆனால் அப்படியில்லை. நான் அதனை நம்பவில்லை.

கூட்டமைப்பு தொடர்பில் என்னால், முடிவெடுக்க முடியாது என்றும் என்னுடைய கட்சி சம்பந்தமாகவே முடிவெடுக்க முடிமென்றும் இங்கு உரையாற்றிய ஒருவர் குறிப்பிட்டதில் உண்மை இருக்கின்றது.

இன்றிருக்கின்ற சூழ்நிலையில் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் பங்காளிக் கட்சிகளாக இருக்கின்ற கட்சிகள் முடிவெடுக்கின்ற எல்லா விடயங்களிலும் பங்காளிகள் இருக்கவில்லை. அவ்வாறு பங்காளிகளாக, நாங்கள் பங்குபற்றவில்லை. இருந்தாலும் எங்களுக்கு கூட்டுப் பொறுப்பு இருக்கின்றது. இவ்வாறான நிலையில் தொடர்ந்தும் தவறுகள் இடம்பெற்றுகொண்டிருக்கிறன, ஏன் தொடர்ந்தும் கூட்டமைப்பில் இருக்கின்றீர்கள் என்ற கேள்வி எழுகின்றது. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அல்லது எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளோம்.

ஈழத் தமிழ் அரசியலில் எத்தகைய முரண்பாடுகள், மாற்றங்கள் ஏற்பட்டாலும் அரசியலமைப்பு முயற்சிகள் முடிவுறும் வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தலைவர் சம்பந்தனையும் விட்டு விலகமாட்டோம். அதுவரை அவர் செல்லும் பாதையில் கண்களை முடிக்கொண்டு செல்வோம்" என்று சித்தார்த்தன் தது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

# இலண்டனில் பிரியாணி வாசனை இந்தியருக்கு அபராதம் விதிப்பு

இலண்டனில் உணவகத்தில் இருந்து பிரியாணி வாசனை (மசாலா வாசனை) வெளியே வருவதாக அளிக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில், இலண்டனில் உணவக் உரிமையாளர்களான இந்தியர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. மிடில்ஸ்பிராக் பகுதியைச் சேர்ந்தவர்கள் சபானா, முகமது குஷி தம்பதியர்கள். இந்தியர்களான இவர்கள் லிந்தார்பி பகுதியில் உணவகம் வைத்து நடத்தி வருகின்றனர். இதில் பஞ்சாபி உணவு வகைகள் மற்றும் பிரியாணி, பஜ்ஜி உள்ளிட்டவையும் தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றது.

இந்நிலையில், உணவகத்தில் இருந்து பிரியாணி வாசனை மிகவும் அதிகமாக வருவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் தங்களது துணிகளை துவைத்தால் தான், இந்த வாசனை செல்வதாகவும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினார். இது குறித்து குடியிருப்புவாசிகள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். குடியிருப்பு வாசிகள் சார்பில் வாதடிய வழக்குரைஞர், உணவகத்தின் சமையலறையில் புகையை வெளியேற்றுவதற்கு முறையான வசதிகள் இல்லை. எனவே, உணவகத்திலிருந்து வெளிவரும் மசாலா வாசனையால் அப்பகுதியில் குடியிருப்பவர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். எனவே, உணவக விதிகளை மீறியதற்காக அவர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டும் என வாதிட்டார். வழக்கை ஆராய்ந்த மாவட்ட நீதிபதி, உணவக உரிமையாளர்களான சோபானா, முகமது குஷி ஆகியோருக்கு 800 பவுண்ஸ் அபராதம் விதித்தார்.

# அமெரிக்காவின் 10 தொன்....

அமைச்சர் ஜிம் மாத்திஸ் ஆப்கானிஸ்தானுக்கு முன் அறிவிக்கப்படாத பயணம் ஒன்றைத் இத்தாக்குதலின் பின்னர் மேற்கொண்டார். இராணுவ தலைமையகம் பென்டகனின் தலைவராக ஜிம் மாத்திஸ் பொறுப்பேற்றபின் ஆப்கானிஸ்தானுக்கு



அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை
அமைச்சர் ஜிம் மாத்திஸ்

மேற்கொண்ட முதல் பயணம் இதுவாகும். அங்குள்ள நிலை குறித்து அதிபர் அஷ்ரப் கானி மற்றும் உயர் அதிகாரிகளை சந்தித்து பேசியுள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க, தலிபான் பயங்கரவாதிகளை பயன்படுத்தி பாகிஸ்தான் மறைமுகப்போரில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் ஜெனரல் எச்.ஆர்.மெக்மாஸ்டர் ஆப்கானிஸ்தான் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த செவ்வியில், பாகிஸ்தான் தலிபான் பயங்கரவாதிகளை கொண்டு மறைமுக போரில் ஈடுபடுகிறது என குற்றம் சாட்டியுள்ளார், மேலும் பாகிஸ்தான் பயங்கரவாத தலைவர்களுக்கு புகழிடமும் வழங்குகிறது எனவும் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தா மற்றும் நாட்டின் பிற பகுதியில் அவர்களுடையை நலனனாது தொடரவேண்டும் என்றால் தூதரக அணுகுமுறையை பின்பற்ற வேண்டு, மறைமுக போரின் ஈடுபட கூடாது, இது வன்முறையை மட்டுமே ஊக்குவிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நிகழ்த்திய பல்வேறு தாக்குதல்களில் கடந்த ஆண்டு மட்டும் 6,800 இராணுவத்தினர் பலியானதாக அமெரிக்க இராணு விவகார ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் போரின் காரணமாக ஏற்பட்ட பொதுமக்களின் உயிரிழப்புகள், இவ்வாண்டின் முதல் 3 மாதங்களிலும் சிறிதளவு குறைவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. இவ்வாண்டு ஜனவரியிலிருந்து மார்ச் மாதம் வரை, 715 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, 1466 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். கடந்தாண்டின் முதல் 3 மாதங்களோடு ஒப்பிடும் போது, உயிரிழந்தோரின் எண்ணிக்கை, 4 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. இதற்கு, 2016ம் ஆண்டில், போர் நடைபெறும் இடங்களிலிருந்து, 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியமை முக்கியமான காரணமாக அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

# சைபர் தாக்குதலில் சீனா...

அமெரிக்காவில் உள்ள பிரபல உளவு நிறுவனம் நிரூபித்துள்ளது. உலகில் இணைய வசதி பெற்ற அனைத்து சாதனங்களையும் உளவு பார்க்க முடியும். கோடிங் எனப்படும் சிறப்பு குறியீட்டு மொழியின் மூலம், இணையத்தின் துணையுடன் பிறரது தகவல்களை அபகரிப்பது 'ஹக்கிங் hacking (ஊடுருவல்)' என்ற வார்த்தையின் பொருள்.

ஹக்கிங் செய்வதில் பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இவை ஒவ்வொரு நோக்கத்திற்கு ஏற்ப வேறுபடும். ஒரு கணினிக்குள் நுழைந்து தகவல்களை திருடுவது, தேவையற்ற தகவல்களை அழிப்பது, சேர்வர்களை இயங்க விடாமல் செய்வது, சேர்வரை இயக்கி பல்வேறு தகவல்களை மாற்றியமைப்பது ஹக்கிங் கலையின் சிறப்பம்சமாகும். பொதுவாக ஹக்கிங் துறை உலகம் முழுக்க ஒவ்வொரு நொடியும் துடிப்புடன் இயங்கி வருகிறது.

உலகில் ஹக்கிங் சார்ந்த குற்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதே இதற்கு எடுத்துக்காட்டு. கொலை, கொள்ளை போன்ற குற்ற சம்பவங்களின் வரிசையில், உட்கார்ந்த இடத்திலேயே பேரிழப்புகளை ஏற்படுத்த ஹக்கிங் சிறந்த வழிமுறையாக இருந்து வருகிறது. உலகம் முழுக்க இயங்கி வரும் ஹக்கிங் அமைப்புகள் மற்றும் எந்த வித சைபர் இயக்கத்திலும் சேராத ஹக்கர்கள் நடத்தி வரும் சைபர் தாக்குதல்களை உலக வரைப்படத்தின் மூலம் நேரலையில் பார்த்து பிரமிக்கும் வசதியை அமெரிக்காவை மையமாக கொண்டு இயங்கும் தனியார் இணையத்தளம் ஒன்று நேரடி ஒளிபரப்பாக வழங்கி வருகிறது.

எந்த நாட்டில் உள்ள பிரபல இணையத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது. இந்த தாக்குதலை நடத்துபவரின் இணையவலை பாவனையிலுள்ள முகவரி, இருப்பிடம், தாக்குதல் வகை உள்ளிட்ட தகவல்கள் சைபர் தாக்குதல்களை நேரலையில் வழங்கும் இந்த தளத்தில் ஒவ்வொரு விநாடியும் தரவேற்றம் செய்யப்படுகிறது. சமீபத்தில் வெளியான ஆய்வு அறிக்கையின்படி உலகில் சைபர் தாக்குதல்களை நடத்தும் நாடுகளில் சீனா முதலிடத்தில் இருப்பது தெரியவந்துள்ளது. சீனாவை தொடர்ந்து அமெரிக்கா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன.

அதிக சைபர் தாக்குதல்களை நடத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியா எட்டாவது இடம்பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. உலகின் எந்தெந்த பகுதிகளில் நடைபெறும் சைபர் தாக்குதல்களை அறிந்து



கொள்ளும் விருப்பம் என்பதை உங்களது விருப்பத்திற்கு ஏற்ப தேர்வு செய்து கொள்ளும் வசதியும் இந்த இணையத்தளத்தில் உள்ளது.

2016ம் ஆண்டில் மட்டும் சர்வதேச அளவில் இயங்கி வரும் பெரிய நிறுவனங்கள் சைபர் தாக்குதல்களின் மூலம் 20 வீதம் வருவாய் இழப்பை சந்தித்துள்ளதாக வருடாந்திர சைபர் பாதுகாப்பு 2017 ஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச அளவில் சுமார் 50 வீதத்திற்கும் அதிகமான நிறுவனங்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை சந்தித்துள்ளதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வாழ்வழிக்கும் வா....

ஈடுபடுவதாக வைத்தியர்கள், ஊழியர்கள் தெரிவித்திருந்த நிலையில், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் புகுந்து தாக்குதல் நடத்திய சம்பவத்தை கண்டித்து அடையாள பணிப்பகிஸ்கரிப்பு போராட்டத்தில் நோயாளர் நலன்புரி சங்கத்தினரும் ஈடுப்படவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அவசர சிகிச்சை பிரிவில் வைத்து வைத்தியர்களால் சிகிச்சை வழங்கப்பட்டுக் கொண்டிருந்த போது அத்துமீறி உள்நுழைந்து ஒரு குழுவினர் அடாவடித்தனம் புரிந்ததுடன், நோயாளர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இத், தாக்குதல் சம்பவத்தினால், வைத்தியசாலை சொத்துக்களுக்கும் அதிக சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பித்தக்கது.

யுத்த காலத்தில் மருத்துவம் என்பது சிந்தித்து பார்க்க முடியாமல் இருந்துள்ளது. அதன் அருமை அந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்களுக்குத் தான் தெரியும். ஆனால், வைத்தியர்கள் அவசர சிகி?ச்சை அழித்துக்கொண்டிருந்தவர்களை தாக்குவதற்கு யார் அதிகாரம் கொடுத்தது. இவர்கள் திருந்துவது எப்போது? தட்டிக்கேட்க ஆட்கள் வந்தால் தான் இவர்கள் திருந்துவார்கள் என்பதே, அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இது சிந்திக்கும் நேரமல்ல ஒவ்வொருவரும் செயற்படும் நேரம்!

(சூறையாடல்கள் தொடரும்)

# ஒன்றுபட்ட தமிழினத்தின்....

எனினும், தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஜனநாயகப் போராட்டம் மீண்டும் ஒரு தடவை சிங்கள தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதுபோன்ற ஜனநாயகப் போராட்டங்களே ஈழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாய்களாக அமைந்தன. சிங்கள அரசின் தமிழர் விரோதப் போக்கை எதிர்த்து ஆரம்ப காலத் தமிழ்த் தலைவர்கள் அகிம்சை வழியில் போராடினார்கள்.

குறிப்பாக, தந்தை செல்வநாயகம் தொடக்கம் அதற்கு பிற்பட்ட காலத்தில் தமிழர்களின் ஜனநாயகம் சார் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் அனைவருமே சிங்கள தேசத்திடம் ஜனநாயக வழியிலேயே நீதி கேட்டனர். ஆனால் அந்த நீதியைத் தருவதற்கு சிங்கள தேசம் தொடர்ந்தும் மறுத்தது.

சிங்களத் தலைவர்களின் இந்த மறுதலிப்புக்கள் தமிழர்களைச் சீற்றமடைய வைத்தது. இந்த நிலையிலேயே தமிழ் இளைஞர்களுக்குள் இருந்து பிரபாகரன் என்ற புலிக்குட்டி சீறிப் பாய்ந்தது. இந்தப் பாய்ச்சல் சிங்கள அரசை மட்டுமன்றி, உலக வல்லாதிக்க சக்திகளையே திரும்பிப் பார்க்க வைத்தது. தமிழர்களின் போராட்டம் திட்டமிட்டு அழிக்கப்பட்டதைத் தொடர்ந்தும் இப்போது தமிழர்களுக்கான நீதி மறுப்புக்கள் தொடர்கின்றன. இதனால் அகிம்சை வழிப் போராட்டங்கள் ஆரம்பித்திருக்கின்றன.

இந்த அகிம்சை வழிப் போராட்டங்கள் மீண்டும் ஆயுதப் போராட்டமாக மாற்றமடைவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது சிங்கள தேசத்தின் பொறுப்பாகும். இந்த விடயத்தில் சர்வதேச நாடுகளும் அமைதியாக இருக்க முடியாது என்பதை அவர்கள் உணரவேண்டும்.

MURUGA SARL

# OM MURUGA
DESIGN & PRINT

8 PHOTOS 4€49

TEL : 01 71 93 34 32 EMAIL : INFO@OMPRINT.FR
71 RUE LOUIS BLANC 75010 PARIS LA CHAPELLE Métro 2

வர்த்தக விளம்பரங்கள் வடிவமைப்பு & பிரசுரங்கள்
T-shirt , Cup , Medal என்பனவற்றில் பெயர்கள் , படங்கள் இலட்சினைகள் பதித்தல்
வர்த்தக நிறுவன பெயர்ப்பலகை வடிவமைப்பு LIGHT / 3D BOARDS
இலட்சினை வடிவமைப்பு
திருமணம் பிறந்த நாள் பூப்புனித நீராட்டு விழா BANNERS & STICKERS
போட்டோ FRAMES
துயர்பகிர்தல் வடிவமைப்பு இலவசம்*
Thamilone.com இணையத்தளத்தில் 20€ கட்டணத்தில் காலவரையற்ற பதிவேற்றம் செய்யலாம்
அடையாள அட்டை புகைப்படங்கள்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

அச்சுப்பதிப்பு வேலைகள் துரிதகதியில் செய்துதரப்படும்



Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
# EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
# Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள்
வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

# பாலன்ஸ் சலூன்
தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள்
அழகு நிலையம்
29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

பிரெஞ்சு அரசினால்
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
# திரு.சகாதேவன்
SAGADEVAN PIERRE
எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து
அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக
ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக
வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.
தொடர்பு கொள்ள
சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

Drancy RERக்கு அருகாமையில், அனைத்து வகையான
மளிகைப் பொருட்களுக்கும் ஓர் புதிய மளிகை மாளிகை
# SDS ALIMENTATION
Tél: 09 51 24 37 70
11, Rue Morin,
93700 Drancy

செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்
# அபி சலூன்
தொடரூந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்
11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34


புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் - பிரான்ஸ்
பாரதி விளையாட்டுக் கழகம் இணைந்து வழங்கும்
8 வது நாவலர் குறும்படப்போட்டி
முத்தமிழ் விழா 2017 ( 25.06.2017 )
இப் போட்டியானது ஈழத்துக் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதுடன்
எமக்கான திரைப்படத் துறையை வளர்ப்பதே முக்கிய நோக்கமாக கொண்டது
தென்னிந்திய திரைப்பட இயக்குனர் நடுவராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்
ASS.DES HABITANTS DE PUNGUDUTIVU-FRANCE
20 01
புங்குடுதீவு மக்கள் ஒன்றியம்-பிரான்ஸ்
நாவலர் விருது
2017
போட்டிக்கான அனுமதிக்கட்டணம்
50€
விண்ணப்ப முடிவுத்திகதி
18.06.2017
1st PRIZE 1500€
2nd PRIZE 1000€
3rd PRIZE 500€
NSFF AWARD
+OTHERS 15 PRIZES
விதிமுறைகள்
• தமிழ்த்தேசியப் பண்புகளை மீறாமலும்
• 23 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும்
• ஏற்கனவே வெளியிடப்படாததாகவும் ( இணையம் & விழாக்கள் உட்பட )
• உப தலைப்பு ( subtitles ) ஆங்கில மொழியிலும் இருத்தல் வேண்டும்
முக்கிய அறிவித்தல்
தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் →
CAFE BHARATH
67 Rue Louis Blanc Paris 75010
France
தொடர்புகளுக்கு : 06 14 08 63 55 | 06 03 37 38 24 | 06 16 47 65 91 | 06 64 50 92 02 | 06 35 30 76 71
Email : navalarshortfilmfestival@gmail.com
web : www.pungudutivu.fr